[illegible]

[illegible] V2 · No 6

[illegible]

3C
RB73 m211, M28.
M29.2.6.
18/132

"SIDDHANTHAM"
Vol. 2—No. 6.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௨ | சுக்கில ஆண்டு ஆனித் திங்கள் 1929 ஆம் ஜூன் மீ | இதழ் ௬ |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

தில்லைப் பேருரை

சைவர் மணம், திருப்பாதிரிப்புலியூர்

வடமொழி வேந்தர்

"தேனூறு மொழிக்கு வழுதி நின்றவன்" — கக

OFFICE OF THE REGISTRAR 15 JUL 1929 MADRAS

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—வஸ்லி. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

# தேவாரம் குறைந்த விலைக்கு அச்சிடல்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பதினாயிரம் பிரதிகள் குறைந்த விலைக்கு அச்சிட்டு வெளியிடுவதைப் பற்றி யோசிக்க 22-4-1929-இல் சமாஜப் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அழகிய 24 பவுன் காகிதத்தில் - டபிள் கிரௌன் அளவில் - 16 பக்கங் கொண்ட பாரத்தில் - 16 பாரங்களில் அச்சிட்டு முடிக்க வேண்டுமென்றும், அச்சுப் பிழை திருத்திச் செவ்வனே வெளியிட திருவாளர்கள் கி. குப்புச்சாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், பாலி. சு. நெல்லையப்பர், அ. சோமசுந்தரஞ் செட்டியார் ஆகிய இந்நால்வர் உட்கழகத்தினராயிருந்து தொண்டாற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அச்சு வேலை துவக்கப்பட்டு நடந்து வருகின்றது. இரண்டு மாதத்துக்குள் சிவபுண்ணிய சிலர்கள் உதவி புரிந்தால் முடித்துவிடக்கூடும். சைவர்கள் முந்துவார்களாக.

இதுவரை பொருளுதவிபுரிய முன்வந்துள்ளோர் :—

| | ரூ. |
|---|---|
| திருவாளர்கள் - அ. சோமசுந்தரஞ் செட்டியார், சென்னை ... | 250 |
| ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், சென்னை ... | 250 |
| ராம. கும. சு. குமரப்ப செட்டியார், ... | 10 |
| செ. ஆறுமுகம் பிள்ளை, வடிவீச்சுரம் ... | 10 |
| அ. நமசிவாய செட்டியார், பூவாளூர் ... | 10 |
| A. முத்தய்யா பிள்ளை, பாளையங்கோட்டை ... | 10 |
| N. சிவகுருநாதம் பிள்ளை, தூத்துக்குடி ... | 10 |
| ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரிசிராப்பள்ளி ... | 10 |
| ச. நடேச முதலியார், இராயப்பேட்டை ... | 10 |
| ச. நமசிவாய முதலியார், இராயப்பேட்டை ... | 10 |
| பாலி-சு. நெல்லையப்ப பிள்ளை, சென்னை ... | 10 |
| சி. சுவாமி சிவநேசம், நாவலூற்று ... | 10 |
| M. A. S. முத்துப் பிள்ளை, தூத்துக்குடி ... | 5 |
| M. ரங்கம் பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர் ... | 5 |
| சி. கணபதி முதலியார், மேலப்புவனகிரி ... | 5 |
| தி. அ. ஷண்முக முதலியார், திருவல்லிக்கேணி ... | 5 |
| R. சுவாமிநாத பிள்ளை, வடமட்டம் ... | 5 |
| தெ. கிருஷ்ணசாமி பாவலர், சிந்தாதிரிப்பேட்டை ... | 5 |
| அ. சிதம்பரம் செட்டியார், கோட்டாறு ... | 5 |
| ப. பாலசுந்தர நயினர், கூடலூர் N.T. ... | 5 |
| K. ஆறுமுக நயினர், காட்டுமன்னார்குடி ... | 5 |
| C. வைத்தியநாத முதலியார், விருத்தாசலம் ... | 5 |
| S. முருகப்ப பிள்ளை, சிந்துபூந்துறை ... | 5 |
| P. நடேச முதலியார், சிவகங்கை ... | 5 |
| வீ. குமாரவேலு பிள்ளை, குலசேகரன்பட்டணம் ... | 5 |
| அருணாசலம், வடலூர் ... | 5 |
| S. சச்சிதானந்தம் பிள்ளை, விழுப்புரம் ... | 5 |
| இ. திருநாவுக்கரசு முதலியார், மரக்காணம் ... | 5 |
| அருளானந்தம், வில்லியப்பாக்கம், குணம்பேடு ... | 5 |
| T. K. S. இராமச்சந்திரம் பிள்ளை, காங்கேயம்பேட்டை. | 5 |

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.



மறைமலையடிகள்

தலைவர்: சைவ மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர்

15 JUL 1929
MADRAS

ஓம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

மலர் ௨ | சுக்கில ஆண்டு ஆனித் திங்கள் 1929 ௵ ஜூன் ௴ | இதழ் ௬

# சைவர் மகாநாடு

## திருப்பாதிரிப்புலியூரில் கூடியது

## (16, 17, 18, 19, 20, 21-5-1929)

சுவாமி வேதாசலமென்னும்

## மறைத்திரு - மறைமலையடிகள்

## தலைமைப் பேருரை

இந்நிலவுலகம் எங்கணும் இருந்து உயிர் வாழ்ந்து வருகின்ற பலவேறு மக்கட் கூட்டத்தாரிற், பண்டைக் காலந் தொட்டு நாகரிகம் உடையராய் வாழ்ந்து வருவோர் மிகச் சிலரே யாவர். அச்சிலராவார்: எகுபதியர், பாபிலோனியர், சாலடியர், அசீரியர், யூதர், சீனர், பாரசிகர், ஆரியர், தமிழர், மெக்சிகர், பெருவியர் என்பவரே யாவர். இவருள் எகுபதியர் பாபிலோனியர் சாலடியர் அசீரியர் யூதர் என்னும் ஐம்பெருங் கூட்டத்தாரும் இவ் இந்திய நாட்டுக்குப் புறம்பே மேற்கெல்லையில் உள்ள நாடுகளில் இருந்தோர் ஆவர்; சீனர் பாரசிகர் ஆரியர் என்பார் இவ் இந்திய நாட்டுக்கு வடக்கிலுள்ள மேருமலைப் பக்கத்திருந்து தெற்கும் மேற்குங் கிழக்குஞ் சென்று ஆங்காங்குக் குடிபுகுந்து வைகினோராவர்; தமிழர் என்பார் வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கடலில் அமிழ்ந்திப் போன குமரி நாட்டின் எல்லை முடிய இருந்தோர் ஆவர்; மெக்சிகர் பெருவியர் என்பார் நடு அமெரிக்காவிலும் அதற்குச் சிறிது தெற்கேயுள்ள நாடுகளிலும் இருந்

தோர் ஆவர். இப்பல வேறு மக்கட் கூட்டத்தாரின் நாகரிக வாழ்க்கையெல்லாம் இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்கு முன்னமே நடைபெற்றன ஆகும். இவர் தம் வாழ்க்கையின் வரலாறுகளை நாம் உள்ளபடி உணரல் வேண்டுமாயின், இவர்கள் பண்டை நாளிலே கட்டிவைத்த குவிந்த கோபுரங்களும், நிலத்தின்கீழ்ப் புதைந்த அரண்மனைகளும், அவற்றின் சுவர்களிலுங் களிமண் பலகைகளிலும் பொறித்து வைத்த அரசர் வரலாறுகளும், அவர்கள் இயற்றி வைத்த நூல்களுமே அதற்குக் கருவியாயிருந்து உதவுகின்றன. இவற்றின் உதவிகொண்டு இப்பண்டை மக்களின் நாகரிக வரலாறுகளை நாம் ஆராய்ந்து பார்க்குங்காற், சீனர் பாரசிகர் ஆரியர் என்னும் மூன்று வகுப்பாரைத் தவிர மற்றையோரின் நாகரிக வாழ்க்கை ஏறக்குறைய ஒத்த நிலையினதாய்க் காணப்படுகின்றது.

எகுபதியர், பாபிலோனியர், சாலடியர், அசீரியர், யூதர் என்னும் மேனாட்டு நாகரிக மக்கள் வகுப்பினரில் எகுபதியரின் நாகரிக வாழ்க்கையே, ஏனை எல்லார் தம் நாகரிக வாழ்க்கையினும் மிக்க பழமையுஞ் சிறப்பும் உடையதாக நுவலப்படுகின்றது. இற்றைக்கு எண்ணாயிர ஆண்டுகட்கு முன்னமே இவ் எகுபதியர் அரசியற் றுறையிலும், ஒப்புரவு வாழ்க்கையிலுஞ், சமய உணர்ச்சியிலும், நாடு நகரங்கள் அமைப்பதிலுந், திருக்கோயில்கள் கட்டுவதிலும் ஏனை நாகரிக மக்களெல்லாருங் கண்டு திகைக்கத்தக்க அத்தனை திறமையும் அறிவும் செல்வமும் படைத்திருந்தனர் என அவர் தம் நாகரிக வரலாற்றினை நன்கு ஆராய்ந்துணர்ந்த ஓர் ஆசிரியர் (Brugsch Bey) பகர்கின்றனர். இங்ஙனம் எண்ணாயிர ஆண்டுகட்கு முன்னமே நாகரிக வாழ்க்கையில் தலை சிறந்து நின்றவராகச் சொல்லப்படுதற்கு ஏற்ற மெய்ச் சான்றுகள் வாய்த்த பண்டை நாகரிக மக்கள் எகுபதியரைத் தவிர வேறெவருமில்லையென்பதே வரலாற்று நூலாசிரியர்களின் முடிபாயினும், எகுபதி நாட்டில் தேறல்பஃறி (Der-el-bahri) என்னும் ஊரின்கண் உள்ள **அஷ்தாப்** (Hashtop) அரசியின் கோயிற் சுவர்களிற் பொறிக்கப்பட்டிருக்கும் ஓவிய எழுத்துக் கல்வெட்டுகளில் “இவ்எகுபதியர் தென்கடலகத்துக் குமரிநாட்டிலிருந்த **பாண்டி** (Punt) தேயத்திலிருந்து சென்று நீலயாற்றங்கரைக்கட் குடியேறினர்” என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.* இச் சிறந்த பழங்கல் வெட்டுச் சான்று கொண்டும், இங்ஙனமே சாலடி நாட்டின் கண் அகழ்ந்து கண்ட சாலப் பெரிய அரண்மனைகள் கோயில்களிற் கிடைத்த களிமண் பலகைகளிற் பொறிக்கப்பட்டுள்ள வரலாறுகளாற் புலனாகுந் தமிழ்ப்பெயர்கள் கொண்டும், அவற்றோடு உடனகழ்ந்து எடுக்கப்பட்ட தமிழ் நாட்டுத் தேக்குமரத் துண்டங்கள் இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன் சாலடியரது **ஊர்** என்னுந் தலைநகரிற் கட்டப்பட்ட அவ்வரண்மனைகளிற் காணப்பட்டமை கொண்டும்,† இற்றைக்கு மூவாயிர ஆண்டுகளின் முன் இயற்றப்பட்ட விவிலிய நூற்பகுதியில் ‘மயிற்றோகை,’ ‘அகில்’ முதலான செந்தமிழ்ச் சொற்கள் காணப்படுதல் கொண்டும்‡, ஆரிய மொழி இருக்குவேதத்தும் பழந்தமிழ் மொழித்தொல்காப்பியத்துங் காணப்படுங் குறிப்புகள் கொண்டும் நம் பண்டைத் தமிழ் மக்கள் இற்றைக்குப் பத்தாயிர ஆண்டுகளின் முன்னரேயே நாகரிக வாழ்க்கையில் தலைசிறந்து நின்றார்களென்பதும், அத்தமிழ் மக்களின்

* See H. S. Olcott's Lecture on 'India: Past, Present, and Future,' and Prof. G. Rawlinson's Ancient Egypt. p. 181.

† See Z. A. Ragozin's Vedic India, pp. 305—307.

‡ Dr. Caldwell's A Comparative Grammer of the Dravidian Languages, pp. 88, 89.

19132



வழித்தோன்றிச் சாலடி, எகுபதி முதலான மேனாடுகட்குச் சென்று ஆங்காங்குத் தமது நாகரிக வாழ்வினை நாட்டிய தமிழ்வழி மக்களே சாலடியரும் எகுபதியரும் அவர்க்கு இனமான ஏனை மேனாட்டு மக்களும் ஆவரென்பதும் நன்கறியப்படும்.

இனி, நடு அமெரிக்காவிலுந் தென்னமெரிக்காவிலும் ஏழாயிரம் ஆண்டுகட்குமுன் உயிர்வாழ்ந்த மக்களுந் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்களே என்பதற்கு வேண்டுஞ் சான்றுகள் புலனாய் வருகின்றன * இங்ஙனந் தமிழ்நாட்டிலிருந்த மக்களின் வழித்தோன்றல்களாகவோ, அல்லதவரோடும் அவர் தம் வாழ்க்கையோடுந் தொடர்புடையராகவோ காணப்படும் இப்பண்டை மக்களின் நாகரிக வாழ்க்கையின் வரலாறுகள் அத்தனையுஞ் சிறிதேறக் குறைய ஒத்த தன்மையவாய் இருத்தல் பெரிதும் வியக்கற்பாலதொன்றாம்.

நாகரிகமானது அகமும் புறமும் என இருதன்மைப்படும். அவற்றுள் அகநாகரிகமானது ‘அன்பு’ என்னும் நெகிழ்ந்த இயற்கையினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது. மற்றுப், புறநாகரிகமோ ‘செல்வம்’ என்னும் வன்பொருளினை அடிப் படையாகக் கொண்டு நிகழ்வது. அகத்தே நடைபெறும் அன்பொழுக்கம் மேன்மேல் உரம் பெற்று வளர்தற்குப், புறத்தேயுள்ள செல்வம் உதவி செய்யும் முறையில் ஒழுகும் மக்களிடத்தே தான், அகநாகரிகமும் புறநாகரிமும் ஒன்றோடொன்று மாறு கொள்ளாதாய் ஒருங்கொத்து, அம்மக்களுக்கு இம்மை மறுமை இன்பங்களை நிரம்ப ஊட்டி, அவர் தம்மை மங்கா நிலையிற் பொங்க வைக்கும். அவ்வாறு அகவொழுக்கமான அன்பு வளர்ச்சிக்குத் துணைபுரியாமல், உயிரினைப் புனிதப்படுத்தும் அன்பு சென்ற வழியே தான் செல்லாமல், எல்லா நிலைகளினும் மேம்பட்ட நிலைக்கண் வைகும் அன்புக்குத் தான் அடங்கி நடவாமல், தான் பெருகுதற்கு அன்பினை ஒரு துணையாகப் பயன்படுத்திக், தான் முன் செல்லுஞ் செலவுக்கு அன்பினைப் பின் செல்ல வைத்து, அன்பு நிற்றற்கு உரிய உயர் நிலையில் தன்னை ஏற்றிவைத்துத், தான் நிற்றற்குரிய கீழ் நிலையில் அன்பை இறக்கி வைத்துப், புறநாகரிகப் பொருளாகிய செல்வமானது தன்னை மறந்து கூத்தாடுமாயின், அங்ஙனம் அது கூத்தாடுதற்கு இடங் கொடுக்கும் மக்களிடையே அகநாகரிகமும் புறநாகரிகமும் ஒன்றினொன்று முரணி, அவர் தாம் இம்மை யின்பங்களையும் பெற வொட்டாமல் அவர்க்குப் பெருந்துன்பங்களை மலைபோற் பெருக்கிச், சில நூற்றாண்டுகளில் அவர் தம்மை இருந்த இடமுந் தெரியாமல் மறைய வைக்கும். முன் நிற்க வேண்டிய அன்பு பின் நிற்கவும், பின் நிற்கவேண்டிய செல்வம் முன் நிற்கவும் முறை மாறினமையா லன்றோ தமிழ் மக்களோடொத்த பழம் பெருஞ் சிறப்பினையுடைய எகுபதியர், பாபிலோனியர், சாலடியர், அசீரியர், ஆரியர், மெக்சிகர், பெரூவியர் முதலான மக்கட் பிரிவினர் அடியோடு மாய்ந்து போயதோடு, அவர் வழங்கிய மொழிகளும், அவர் வகுத்த எழுநிலைமாட நகரங்களும் ஒருங்கே அழிந்தொழிந்தன! அவரெல்லாம் அவ்வாறொழியவுந், தமிழ் மக்கள் மட்டும் அன்று தொட்டு இன்று காறும், அவ்வுயர்நிலையி னின்று சிறிது சிறிது வழுவினும், முற்றும் அற்றொழியாது, ஏறக்குறையத் தமது பண்டைச் சிறப்பின்கண் நிலை பெற்ற சான்றோர் சிலரையாயினும் இன்னும் உடையராய் உயிர் பிழைத்து நிற்கின்றனர்; அவர் வழங்கிய தமிழ்மொழியும் அம்மொழியில் இயற்றப்பட்ட அரும் பெரு நூல்களும் ஏனைப் பண்டை மொழிகளைப்போல், அம்மொழி நூல்

* See Prof. Konrod Haebler's article in Harmsworth's History of the World. from p. 5675.

களைப்போல் இறவாது வாவர உயிர்ப் பேறி உலவி வருகின்றன.

எகுபதியர் சாலடியர் முதலான பண்டை மக்களின் நாகரிக முறைகளை யுணர்தற்கு அரும்பெருஞ் சான்றுகள் கிடைத்தாற்போலத், தமிழ்ப்பழமக்களின் நாகரிக வரலாறுகளை அத்துணை உறுதியாய் அறிவிக்கும் பழைய மெய்ச் சான்றுகள் கிடைத்திலாமையின் அறியாமைப் பேரிருளிற் கிடந்து துன்புற்ற நாம், மூன்று திங்கள்காறும் ஒளி சிறிதும் இல்லாத் திணியிருளிற் கிடந்து பெரிது வருந்திய இந்நிலவுலகத்து வடமுனைக்கண் உள்ள மக்கள் அம்முழு விருட்காலக் கழிவிற் சுடர்ந்து பேரொளி வீசி வானின்கட் டுலங்கும் புத்தப் புதிய ஒரு பெரு மின்னொளியினைக் கண்டு மகிழ்வதொப்ப, நம்முன்னோரின் அறிவுப் பெரு வெளியில் அறிவொளி வீசித் திகழா நின்ற **தொல்காப்பியம்** * என்னும் முழுமுதல் நூலின் காண்டகு தோற்ற விளக்கத்தினைக் கண்டு களிப்பெய்துதற்கு உரியேம் அல்லேமோ? மற்றைப் பண்டை மக்களின் நாகரிக வரலாறுகளை முற்றும் உணர்தற்குக் கருவியாகாமல் அவற்றுள் ஒருசிலவே யுணர்தற்குக் கருவியாய்க் கிடைத்த அவர்தங் கட்டிடங்களும் அவற்றிற் பொறித்த கல்வெட்டுக்களும் போற் குறைபாடுடைய தன்றாய், நம் அருந்தமிழ் மக்களின் பெருந் திரு நாகரிக வரலாறு முற்று மெடுத்து முடியக் கூறும் முழு மதியாய் ஒளிரும் நம் தொல்காப்பிய நூலின் ஒல்காப் பெருமாட்சியினைக் கண்டு களிக்குந் தவம் உடையேம் அல்லமோ! இற்றைக்கு ஆருயிர ஆண்டுகட்கு முன்னமே, ஏனை நாகரிக மக்களெல்லாம் பெரும்பாலும் புற நாகரிகச் செல்வ மயக்கிற் கிடந்து தம்மையும் உணராமல் தாம் பிறவியெடுத்த நோக்கத்தையும் உணராமல் தம்மையும் உலகத்தையும் படைத்த தலைவனையும் அவன்றன் திருவுளக் குறிப்பினையும் உணராமல் வாணாளை வீணாளாய்க் கழித்த அஞ்ஞான்று, அப்புற நாகரிக மினுக்கினை அக நாகரிக அன்பொழுக்கப் பேரொளியின் முன் விளக்கமறச் செய்து, நம் முது மக்களைப் பேரன்பாம் இன்பப் பெருக்கிற் படிவித்த ஒப்புயர்வில்லா மெய்ப்பெருந் தொல்காப்பிய நூற்றெய்வ மாட்சியினைக் காண்டொறுங் காண்டொறுங் களிப்பெய்துதற் குரியம் அல்லமோ! இத்துணைச் சிறந்த தொல்காப்பியத் தெய்வ முதல்நூல், புற நாகரிகத்தை அகநாகரிகத்தின்கீழ் அடக்கிச் சாயம் அற்ற செல்வப் பொருளுக்கு அன்பின் எழில் துலங்கு சாயம் ஏற்றி, உயிரற்ற எற்புடம்பு போல்வதாகிய செல்வத்திற்கு அன்பென்னும் உரங்கிளர் உயிர் புகுத்திப் புற நாகரிகத்தை அக நாகரிகத்தின் வழி நடத்தி, நம் பண்டைத் தமிழ் மக்களின் ஒண்டமிழ்க் கொள்கையினை ஆய்ந்தாய்ந்து விளக்கிய அரும் பெரு வகைமையினை அடைவே சிறிது விளக்கிக் காட்டுவாம்.

* இதன் கால ஆராய்ச்சியினை ‘மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்’ என்னும் எமது விரிந்த நூலிற் காண்க.

இந்நிலவுலக வாழ்க்கையில் மக்களெல்லாரும் அடைதற்குரிய உறுதிப் பொருள்களை இன்பமும் பொருளும் அறனும் என்னும் மூன்றாக வகுத்து அம் மூன்றும் பிரிவின்றிக் கலந்த அன்பினால் ஊடுருவி நிற்றல் வேண்டுமென்பது தெளிவிப்பார்,

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்”
**(களவியல், க.)**

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிச் செய்தமை பெரிதும் நினைவிற் பதிக்கற் பாலதாகும். தொல்காப்பியத்தோடொத்த பழமை வாய்ந்த இருக்கு எசுர் சாமம் முதலிய ஆரிய நூல்களினாதல், அல்லது ஏனைப் பழைய மக்களின் நூல்களினாதல், இன்பமும் பொருளும் அறனும் என்னும் இம்மூன்றும் அன்பின் வழியே அடையப் படுதல் வேண்டுமென



நுவலப் படாமையினை உற்றுணர்ந்து பார்ப்பவர்க்கே, அம்மூன்றும் அன்பொடு புணர்ந்து அடையப்படுதல் வேண்டுமென வற்புறுத் துரைக்குந் தொல்காப்பியனார் தம் உரைப் பொருண் மேன்மை நன்கு விளங்கா நிற்கும். தொல்காப்பியனார் வழி வந்த ஆசிரியன்மாரில் தலைசிறந்தவரான தெய்வப் புலமைத் **திருவள்ளுவ நாயனார்,**

“அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு”

என்றும்,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்
பண்பும் பயனும் அது” [வாழ்க்கைப்

என்றும் அருளிச் செய்தமையும், அவர்க்குப் பின் வந்த சைவ சமயாசிரியரும், சைவ நாயன்மாரும், அவர் தமக்குப் பின் இற்றைஞான்று வரை இராமலிங்க அடிகள் ஈறாக வந்த சைவப் பெரியாரும் எல்லாம் அன்பொழுக்கத்திற்கே தலைமை தந்தமையும் ஒரு தொடர்பு படுத்து நோக்குவோமாயின், தொன்று தொட்டு இன்று காறும் நம் தமிழ் மக்களின் வாழ்க்கையானது அன்பொழுக்கத்தினையே அச்சாணியாய்க் கொண்டு நடைபெறுவ தென்பது தெளியப் படும். இதனைச் சைவ சித்தாந்த நூலாகிய **திருக்களிற்றுப்படியாரும்,**

“அன்பேஎன் அன்பேயென்
றன்பால் அழுதாற்றி
அன்பே யன்பாக
அறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ்
சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே
தான்”

என இறைவனை நோக்கிச் செய்யும் வழிபாடுகள் அத்தனையும் உண்மையன்பின் புற நிகழ்ச்சிகளாகச் செயற்பாலதனை வற்புறுத்தா நிற்கின்றது.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் மக்களடைதற்குரிய உறுதிப் பொருள்கள் மூன்றில் ‘இன்பம்’ என்பதனை முன்வைத்துக் கூறிய நுட்பம் இன்னதென நாம் ஆராய்ந்தறிதல் வேண்டும். பிறவி யெடுக்கும் முன் தம் விழைவு அறிவு செயல்கள் முழுதும் மறைவுண்டு துன்புற்றும், அன்னையின் வயிற்றிற் கருவாய்ப் புகுந்து பிறவி யெடுக்கின்ற காலத்து அங்கே மல நீர்ப் பைகளால் நெருக்குண்டு அகட்டுத் தீயினால் வெதும்பிப் பலவாறு துன்புற்றும், பின்னர் அன்னை வயிற்றை யகன்று பிள்ளையாய்ப் பிறந்து பல்வகை நோய்களாலுந் தம்மைச் சூழ உள்ளார் செய்யுங் கொடுமைகளாலும் பெரிது துன்புற்றும் இங்ஙனமாகப் பிறவிக்குவரும் முன்னேயிருந்து பிறவியெடுத்து இளமைப்பருவத்தை எய்துங்காறும் மக்கள் எல்லாரும் படுங் கொடுந் துன்பத்திற்கு ஓர் அளவேயில்லை. இவ்வாறு துன்பத்திலேயே பழகிவரும் ஏழை மக்களாகிய நாம் இன்பத்தின் இயல்பு இன்னதென ஒரு சிறிதாயினும் பழகி யறிந்திலமாயிற் பேரின்பப்பேற்றை அடைதற்கு நம்பால் விருப்பம் உண்டாகுமோ? உண்டாகாதன்றே. எந்நேரமும் துன்பத்திலேயே கிடந்துழலும் மக்களில் எத்தனைபேர் இவ்வுலக வாழ்க்கையினை வெறுத்து ஐயோ தம்முயிரைச் சடுதியில் மாய்த்துக் கொள்கின்றனர்! மண்டைவலி வயிற்றுவலி இடுப்புவலி முதலிய கொடு நோய்களால் ஓவாது துன்புற்றுத் துடிதுடிப் போரிற் பற்பலர் தம்முயிரைத் தாமாகவே மாய்த்துக் கொள்ளுதலை அடுத்தடுத்துச் செய்தித் தாள்களால் அறிந்து திகில் கொள்கின்றனம் அல்லமோ! நல்வினை வயத்தாற் சுவையான உணவுகளையுண்டுங், கண்ணாரப் பல காட்சிகளைக் கண்டும், இனிய இசைகள் அரிய விரிவுரைகள் கேட்டும், அரும்பெரு நூல்கள் கற்று அறிவு தெளிந்தும், நறுமணம் அளைந்தும், இவ்வாறெல்லாம் ஐம்புலன்களின் வாயிலாக வரும் பலதிற இன்பங்களை நுகர்ந்து மகிழ்தலினாற்றான்,

மக்களுயிர் இளமைப் பருவம் எய்தும் வரையிலாவது இந்நிலவுலகத்தே நிலவுகின்றது! நாம் பிறவியெடுக்கும் முன்னமே இறைவன் இவ் ஐம்புல இன்பங்களைத் தரும் பல்வகைப் பண்டங்களை இங்கு அமைத்து வைத்திலனாயின், நாம் ஒரு நொடிப் பொழுதாயினும் இங்கே உயிர்வாழ்தல் இயலுமோ? கூர்ந்து பார்மின்கள் அன்பர்களே! இவ்வைம்புல நுகர்ச்சிப் பொருள்களும் வாய்ப்பாக நன்கு அமைக்கப்பட்டிருத்தலினாலேதான் பல கோடிக் கணக்கான பல்வகை மக்கட் பிரிவினர் தம் உயிர் வாழ்க்கையும் இந்நிலவுலகத்தின் கண் ஆங்காங்கு நடைபெறாநிற்கின்றது.

இனி, ஐம்புல நுகர்ச்சிகளால் வரும் இன்பத்தளவில் மக்களுயிர் அமைதிபெறுங்காலம் எவ்வளவு? பெண்மக்களாயின் மங்கைப்பருவம் எய்தும் வரையிலும், ஆண்மக்களாயின் இளமைப் பருவம் எய்தும் வரையிலுமே. மற்று, அப்பருவம் வந்த அளவிலோ, அதுகாறுங் காணக்கிடையா வேறொரு மகிழ்ச்சிக் கிடமாம் வேறொரு புதுதேயத்தைக் கண்டாலொப்பப், புதியதோர் இன்ப உணர்ச்சி வரப்பெற்று அவ்வின்பத்தைப் பெறுதலில் இருவருயிரும் பெரு வேட்கையும் பெருமுயற்சியும் உடையவாகின்றன. அதுவரையில் நுகர்ந்துவந்த ஐம்புல இன்பங்களெல்லாம், இப்போது தோன்றாநின்ற இப்புதிய இன்பத்தின்முன் நில்லாவாய், அதனிற்றாழ்ந்தவாய், அதனைப் பெறாதவழி அதனால் ஏக்கமுறுவார்க்குத் துன்பந்தரும் பெற்றியவாய் மாறிவிடக் காண்கின்றோம். இவ்வாறு இளமைப் பருவத்தில் ஆண் பெண் என்னும் இருபாலார்க்குந் தோன்றுவதாகிய இன்பவுணர்ச்சியானது, அழகு அறிவு நல்லியற்கையினால் உந்தப்பட்டு எழும் அன்பின் வயமாகி ஒருவரையொருவர் இன்றியமையாராய் ஒருங்கு பொருந்தும் ஆண் பெண் மக்களுக்கு அவ்விழுமிய காதலின்பத்தினையூட்டி, அவரது வாழ்க்கையைத் தூய்மை செய்து அதனைப் பெரிதும் பயன்படச் செய்வதாகும். இக்காதலின்ப உணர்ச்சி தோன்றுதற்கு முன்னெல்லாம் பிள்ளைமைப் பருவத்திலுள்ளார் தாந்தாம் பெற்ற ஐம்புல இன்பப் பொருள்களைத் தாந்தாமே நுகர்வதிற் கருத்துடையரன்றித், தம்மோடொத்த மற்றைப் பிள்ளைகட்கு அவற்றை எளிதிற் கொடார்; தாம் நுகர்ந்து மிஞ்சிய மிச்சந் தமக்கு வேண்டாதிருந்தால் மட்டும், அதனை ஏனைச் சிறுவர்க்குக் கொடுக்க ஓரோவொருகால் மனம் ஒருப்படுவர்; என்றாலுந், தாம் நுகர்ந்து கழித்த மிச்சத்தையும் பிறர்க்குக் கொடுக்க மனம் இசையாத சிறாரே உலகத்திற் பெரும்பாலார். இவ்வாறாகத், தன்னலம் ஒன்றே கருதும் பிள்ளைமைப் பருவந் தாண்டி, இளமைப் பருவம் புகுந்து, காதலின்ப உணர்ச்சி வயத்தராய் ஓராண்மகனும் ஒரு பெண்மகளும் ஒருவர்பா லொருவர் மிக்க அன்புமீதூரப்பெற்று ஒருங்கு பொருந்திய காலந் தொட்டோ, கணவனாயினான் தன் நலங் கருதுதல் விட்டுத் தன் மனைவியின் நலங் கருதுவானாய், அவட்கு வேண்டும் நுகர் பொருள்களெல்லாந் தொகுத்துக் கொடுக்கும் பொருட்டு முயலும் பல்வகை முயற்சிகளால் உலகத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றான்; அங்ஙனமே. மனைவியாயினாளுந் தன்னைப் பேணுங் கருத்தைவிட்டுத் தன் கணவனையே தன்னுயிராகக் கருதி அவனை ஓம்புதலிலும், தம் அன்பின் சேர்க்கையாற் பிறக்கும் இன்பக் குழவிகட்குத் தான் வரைந்து வைத்தவைகளையெல்லாங் கொடுத்து அவரைக் கண்ணுங் கருத்துமாய்ப் போற்றி வளர்த்தலிலும், அருளொழுக்க முடைய அறவோர்க்கு வேண்டுவ கொடுத்தலும் அன்பொழுக்கமுடைய அந்தணரைக் காத்தலும் துறவினரை ஏற்று அவர்க்குத் தொண்டு புரிதலும் விருந்து வருவாரை ஓம்புதலுமாகிய அறம் புரி வாழ்க்கையிலும் தலைநின்று இம்மண்



ணுலக வாழ்க்கையினை விண்ணுலக வாழ்க்கையெனப் புனிதமாக்கித் தானும் மிகப் பயன்படுகின்றாள். பார்மின்கள் அன்பர்களே! இங்ஙனம் ஆண் பெண் என்னும் இருபாலாருங் காதலின்ப உணர்ச்சி வயத்தராய் ஒருங்கு இயந்தமையாலன்றோ, அவர் தாமும் இன்புற்றுப் பிறரையும் இன்புறுத்திப், பிறவிக்கு வராமல் அருவநிலையில் அறியாமையால் விழுங்கப்பட்டுக் கிடந்த உயிர்கள் உருவநிலையில் தம்பாற் பிள்ளைகளாய்ப் பிறவியெடுத்து அறிவும் இன்பமும் பெறப் பேருதவி புரிந்து அவ்வாற்றால் இறைவன்றன் அருட் செயற்கு ஓர் ஒப்பற்ற கருவியாய்ப் பயன்பட்டு வருகின்றனர். இக்காதலின்ப உணர்ச்சியும் அதற்கேற்ற அமைப்பும் மக்கள்பால் இல்லையாயின், இவ்வுலகம் எங்கே! இவ்வுலகில் நடைபெறும் ஒழுக்கங்கள் எங்கே! யார் எவர்க்கு உறவு! யார் எவர்க்குத் துணை! எல்லாம் வெறும் பாழாய் முடியுமன்றோ? எவ்வாற்றால் ஆராய்ந்து பார்ப்பினும் இக்காத லின்பமானது உடம்புக்கு உயிர்போல்வதாய், இருள் நிறைந்த இரவில் இருளகற்றும் முழுமதி போல்வதாய்ப், புற்பூண்டுகள் முதல் நிலையியற் பொருள்களும் விலங்கு புள் மக்கள் முதல் இயங்கியற் பொருள்களும் அறிவும் முயற்சியும் பெறச் சுடரொளி பரப்பும் ஞாயிறு போல்வதாய், அறியாமையாற் சினத்தாற் பொறாமையால் இறுமாப்பால் ஒருவரோடொருவர் அளவளாவுதல் இல்லாத மக்களை அளவளாவப் புகுத்தும் இறைவன்றன் அருள் விளக்கம் போல்வதாய் முதன்மை பெற்று வயங்குதல் கண்டன்றோ தவத்தான் முற்றுணர்வு வாய்ந்த ஆசிரியர் தொல்காப்பியனார் "இன்பமும் பொருளும் அறனும்" என இன்பத்தை முதல் நிலைக்கண் வைத்து ஓதுவாராயினர்.

இம்முதலாசிரியர்க்குப் பின் வந்த தமிழாசிரியர்கள், உலகிய லொழுக்கத்திற்கு முற்றும் மாறான பௌத்த சமண் சமயக் கொள்கைகளாற் சிறிது சிறிது ஈர்ப்புண்டு.

"சிறப்புடை மரபிற்
பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந்
தோற்றம்போல"

என அறத்திற்கே முதல் நிலை கூறினாராயினுந், திருவள்ளுவனாரும் அறத்தை முன் வைத்துப் பொருளை அதன் பின் வைத்து இன்பத்தை இறுதிக்கண் வைத்து நூல் செய்தாராயினும், இன்பத்தை நுதலியன்றி அறஞ்செய்வாரையும் பொருள் செய்வாரையும் யாண்டுங் கண்டிலமாகலின், தொல்காப்பியனார் இன்பத்தை முதல் வைத்த முறையே மக்களியற்கையொடு பொருந்துவதாதல் நன்குதுணியப்படும். தமது காலப் போக்கினையொட்டித் திருவள்ளுவனார் அறத்தை முன் வைத்து இன்பத்தை இறுதிக்கண் வைத்து நூலியற்றப் புகுந்தனராயினும், இன்பத்தை வாயிலாக் கொண்டன்றி அறனும் பொருளும் நடவாமை நன்குணர்ந்தன்றே அவர் அறத்தை இல்லறந் துறவறம் என இரண்டாகப் பகுத்துக், காதலின்பத்தின் வழிப்படுவதாகிய இல்லறத்தையே முதற்கண் வைத்து நூல் அருளிச் செய்தனர். இவ்வாற்றால் ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்ட முறையே நன்முறையென்பது திருவள்ளுவனார்க்கும் உடம்பாடாதல் பெறுதும். இஃது அவர் இல்லறவியலின் முதலதிகாரத்தில்,

"அன்பும் அறனும்
உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது"

என அன்பை முன்வைத்து அறனை அதன் பின்வைத்துத் தெளித்தோதியது கொண்டும் இனிது பெறப்படும்.

இத்துணைச் சிறந்ததாகிய இன்ப வாழ்க்கை அன்பினால் உந்தப்பட்டே நடைபெறல் வேண்டுமென முதல்

ஆசிரியர் வலியுறுத்தியவாறு போலவே, தெய்வத்திருவள்ளுவரும்,

" அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு "

என்று உடம்பாட்டானும்,

" அன்பகத்தில்லா உயிர்
வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று "

என்று எதிர் மறையானும் அன்பின் இன்றியமையாமையினை விளங்க வைத்தது காண்க. மதுரைக் கடைச்சங்க காலத்துக்கும் முன்னேபண்டைச்செந்தமிழ்க் காலத்திருந்த **குன்றம் பூதனார்** என்னும் நல்லிசைப் புலமை மலிந்த சான்றோருந் தாம் முருகவேள்மேற் பாடிய " இருநிலந் துளங்காமை " என்னும் பரிபாடலிலும்,

" நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
**காதற் காமங் காமத்துச் சிறந்தது** "

என்று காதலின்பத்தின் மாட்சி தெரித்து, அவ்வின்ப நுகர்ச்சி இறைவனது தண்பரங் குன்றத்தின்கண் நிகழுமாற்றின் வைத்து அதனை விரித்துப் பாடினார்.

பாருங்கள் அன்பர்களே! உலகியலொழுக்கத்திற்கும் இறைவன் திருவடிப் பேற்றிற்கும் ஆணிவேர்போல் இருப்பதாகிய இவ் இன்பவொழுக்கமானது மெய்யன்பின்வழி நடக்குமாயின் அப்போதுதான் அது 'காதலின்பம்' என உயர்த்துப் பேசப் படுமென்பதும், அஃது அங்ஙனம் அன்பின்வழி நடவாதாயின் இழிந்த காமம் என இழித்துப் பேசப்படுமென்பதும் நம் செந்தமிழ்த் தெய்வ ஆசிரியர் எல்லார்க்கும் ஒத்த முடிபா யிருக்கின்றன. ஏனென்றால், ஓராண்மகனும் ஒரு பெண்மகளும் தம்மில் ஒருவரையொருவர் உயிர்போற் கருதி நிரம்பிய அன்பால் ஒழுகினாலன்றிப், பெண்பாலார்க்குக் கற்பொழுக்கம் நிலைபெறாது; கற்பொழுக்கம் நிலைபெறாதாயின் நன்மக்களைப் பெறுதலும் உளதாகாது; உலகில் ஒருவரோ டொருவர் அமைதியாயிருந்து வாழாமற் பகைமையுஞ் சினமுங்கொண்டு அல்லல் உழப்பர்; அதனாற் றெய்வ நம்பிக்கையுந் தெய்வ வணக்கமும் இல்லையாய்ப் போம்; எங்குங் குடியுங் கொலையுங் கொடுமையும் மலிந்து மக்கள் வாழ்க்கையானது சின்ன பின்னமாய்ச் சிதறிவிடும். இத்தகைய குடி கேடான செயல் ருஷியா முதலான மேனாடுகளிற் பரவி அங்குள்ள மக்களை நினைப்பினுங் கொடிய துன்பத்திற் படுத்துத் தேய்த்துவரும் நிலையினைச் சிறிதாயினும் அழுந்தியறிய வல்லார்க்கே, நம் செந்தமிழ்த் தெய்வ ஆசிரியர் வற்புறுத்திச் சொல்லிய காதலின்ப வாழ்க்கையின் விழுப்பம் புலனாகா நிற்கும். மற்றுக், காதலன்பின் வயமாகி மணங் கூடினார்க்கோ ஒருவரை விட்டுப் பிறரொருவர் மேல் உள்ளஞ் செல்லாதாகலின், அவர்க்குக் கற்பொழுக்கந் தானாகவே நிலைபெறும். அவர்க்குக் கற்பொழுக்கத்தினைக் கற்பிக்க வேறெவருமே வேண்டப்படார். அவர், தாம் காதல்கொண்ட அன்பரையன்றிப் பிறரெவரையுங் கருதமாட்டாமையால், தம் கருத்தறியாமல் தம்மைப் பிற ரொருவர்க்கு மணம் புகுத்த எவரேனும் முனைகுவராயின், அவர்க்குத் தமதுள்ளக் கருத்தைப் புலப்படுத்தித் தமது கற்பொழுக்கத்தினை நிலை நிறுத்திக்கொள்வர்; அதுவும் வாயாதாயின் தமதுயிரையே துறப்பரன்றித் தமது கற்பிற் சிறிதும் வழுவார்; தம் காதலர் இறந்துபடின் தாமும் உயிர் தாங்கார். இத் தன்மையராகிய பண்டைத் தமிழ் மக்களின் கற்பொழுக்க மாட்சியினைப், பழந் தமிழ் நூல்களிற்போந்த சில பாட்டுகளை எடுத்துக்காட்டி விளக்குதும்: முதலிற் **கலித்தோகை** என்னும் அரிய சங்க நூலிற் காணப்படும் ஒரு செய்யுளை இங்கெடுத் துரைப்பாம்:

" சுடர்த் தொடீஇ! கேளாய்! தெருவில்நாம்
[ஆடும்
மணற் சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதைபரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்



அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்,
[கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா வென்றாள், எனயா
[னும்
தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண்
[என்றேனா,
அன்னை யலறிப் படர்தாத், தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னை
[யுந்
தன்னைப் புறம்பு அழித்துநீவ, மற்றென்னைக்
கடைக் கண்ணாற் கொல்வான்போல் நோக்கி
[நகைக்கூட்டஞ்
செய்தான் அக்கள்வன் மகன் "

தன்னைப் பிறனொருவனுக்கு மணம் பொருத்தக் கருதித் தன் பெற்றோர் செய்யும் ஏற்பாடுகளைக் கண்டு திகில் கொண்டவளான அழகு மிக்க ஒரு கற்புடை மங்கை, தான் ஒருவன்மேற் காதல்கொண்டிருக்குங் குறிப்புத் தன் தோழிக்குப் புலனாம்படி சொல்லுதலை இச்செய்யுள் எடுத்தியம்புகின்றது. இதுகேட்டுத் தன் தலைவியின் காதற் குறிப்பறிந்த தோழி, அவடன் பெற்றோர்க்கு அதனை அறிவித்து அவள் காதலித்த இளைஞனுக்கே அவளை மணங் கூட்டுவள். இதனை 'அறத்தொடு நிற்றல்' என்பர் பொருளிலக்கணத்தில். இச்செய்யுட் பொருள் வருமாறு:

" விளங்கா நின்ற தொடியணிந்த தோழீ! என் மனத்துள்ளதனைக் கேட்பாயாக! தெருவிலே நாம் மணலாற் சமைத்து விளையாடுஞ் சிறிய வீட்டினைக் காலால் எற்றி அழித்தும், நமது கூந்தலிற் செருகிய பூமாலையை அறுத்தும், வரிந்த நமது பந்தினை எடுத்துக்கொண்டோடியும் நாம் மனம் நோவத்தக்க குறும்புகளைச் செய்யும் அந்தச் சிறு பட்டிப்பையன், முன் ஒரு நாள் நம் அன்னையும் யானும் வீட்டின்கண் இருந்தேமாக, எம்பாற் போந்து, 'வீட்டில் உள்ளீரே! உண்ணப்படுந் தண்ணீர்க்காக விடாய் கொண்டு வந்தேன்' என்று சொல்லி வந்து நின்றானுக்கு, அன்னையானவள் என்னை நோக்கிச் சுடரிழாய்! பொற்றகட்டாற்செய்த கரகத்தால் உண்ணு நீரை முகந்து சென்று வார்த்து அதனை அவன் பருகச் செய்துவா' என்று கூறினாள். கூறவே, யானும் அவனைப் பட்டிப் பையன் என்று நினையாமலே அன்னை சொன்னபடியே செய்ய அவன் பாற் சென்றேன்; ஆனால், அவன், வளையல் அணிந்த எனது முன் கையினைப் பிடித்திழுத்து வம்பு செய்யவே, யான் மனம் மருண்டு 'அன்னாய்! இவன் ஒருவன் செய்ததைப் பாராய்!' என்று கூவினேனாக, உடனே அன்னை அலறிக்கொண்டு என்பால் வருதலும், சடுதியில் யான் மனந் தெளிந்து 'இவன் உண்ணு நீரைப்பருகும் போது விக்கி வருந்தினான்' என்று அவன் செய்ததனை மறைத்து மொழிந்தேன்; அதுகேட்டு அன்னையும் அவன் முதுகைப் பல காலுந் தடவினள்; அப்போது என்னைக் கடைக்கண்ணாற் கொல்வான் போல் நோக்கி, மகிழ்ச்சிக்கு ஏதுவான மணத்தைக் கள்வனாகிய அவ்விளைஞன் முன்னமே செய்தனன்; இதனை அறிவாயாக!"

பார்மின்கள் அறிஞர்களே! கற்பிற் சிறந்த இளைய தமிழ் மங்கை ஒருத்தி தன்னிளமைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் வைத்துத் தான் ஓர் இளைஞன்மேற் காதல் கொண்டமையினை எவ்வளவு நுட்பமாக, எவ்வளவு திறமையாக, எவ்வளவு மனக்கவர்ச்சியுண்டாகத் தான் கொண்ட அக்காதற் கற்பொழுக்கத்திற்குப் பழுதுவாராமற் கூறுகின்றாள்! தான் ஏதும் அறியாப் பேதைப் பெண்ணாய் இருந்த காலத்திலேயே தன் உள்ளம் ஓரிளைஞன் பால் அன்பிற் படிந்தமையும், தானிழைத்த மணல் வீட்டினைக் காலால் எற்றியுந் தன் கூந்தலிற் செருகிய மாலையை அறுத்துந் தான் ஆடும் பந்தினை எடுத்துக் கொண்டோடியும் அவன் தான் வருந்தத்தக்க குறும்புகள் செய்தும், அக்குறும்புகள் அத்

ன்னையும் தன் பால் வைத்த அன்பினு லேயே அவன் செய்தமையும், அத ஞல் அக்குறும்புகள் தன் மனம் நோவச் செய்தனபோற் ருேன்றினும் உண்மையில் அவை தன்னை நோவச் செய்யாமையும், 'சிறுபட்டி' என அவனைத் தான் சுட்டுஞ் சொல்லே அவன்பால் தனக்குள்ள அன்பின் அறிகுறியாதலும், விடாய் கொண்டு வந்தா னெனினும் இளைஞனை ஒரு வற்குத் தான் தனியேசென்று விடாய் தணித்தல் நாணுடைய பெண்டன் மைக்கு ஏலாமையின் அன்னையுந் தானும் இருந்தக்கால் அவன் விடாய் த்து வந்தா னென்றமையும், அங்ங னம் அன்னையோடு இருந்த விடத்தும் அன்னையின் ஏவுதலாலேயே தான் நீரெடுத்து அவன் பாற் சென்றமை யும், அவன் தன் பால் வைத்த காதற் கிழமையால் தன் கையைப்பிடித்து வம்பு செய்யினும் அதற்கு எளிதிலே உடன்பட்டிருத்தல் அச்சமும் நாண மும் இயற்கையே வாய்ந்த தன் பெண் டன்மைக்கு ஏலாமையின் அதற் கிசை யாது தான் அன்னையைக்கூவியழைத்த மையும், அன்னை அருகுவந்ததும் அதுபற்றி அவனை அவள் சினவா மைப் பொருட்டு 'அவன் உண்ணுநீர் விக்கினன்' என அவன் செய்த குற் றத்தை அவன்மேலுள்ள காதலால் தான் மறைத்து மொழிந்தமையும், அன்னையும் அவன்றன் எழில் நலங் கண்டு அவன் விக்குதல் பொருளாய் அவன்றன் முதுகினைத் தடவிக் கொடுத்தா ளென்றமையும், அப் போது தான் செய்ததனை ஒரு குறும் பாக நினைந்து அவன் தன்னைக் கடைக் கண்ணாற் பார்த்துச் சினந்தமையும் எல்லாம் அவ் அறிவுடைக் கற்பரசி எத்துணை நயமாகத், தன் உயர்ந்த பெண்டன்மைக்கு எத்துணை இசை வாக, சின்னஞ்சிறிய பருவம் முதலே தான் கொண்ட காதற் கற்பொழுக்கம் எத்துணைச் சிறந்த தென்பது புலனு கக் கூறியிருக்கின்ருள்! அத்துணை விழுமிய காதற் கற்புடைத் தமிழ் மக் கள் வழிவந்த நாம் இவ்வருமையினைக் கனவினும் நனவினும் நினைந்து நினை ந்து வியக்கற்பால மல்லமோ!

இத்துணைச் சிறந்த பண்டைத்தமிழ் மாதரின் காதற் கற்பொழுக்கத்தை எடுத்துரைக்கும் இத்தனித் தமிழ்ச் செய்யுள் வழக்கும் பாராட்டற் பால தாயிருக்கின்றது. வான்மதி மண்டில ஞாயிற்று மண்டிலங்களினும் மேலுயர் ந்து செல்லுங் கூட கோபுர மாளிகை களைக் கற்பித்து, நேரிற் சென்று பார்த்தால் ஒரு சில குடிசைகளே யுள்ள ஓர் ஊரில் அக்கட்டிடங்கள் உள வாக மனக்கோட்டைகட்டி, அக்கட் டிடங்களின் மேலடுக்குகளில் உள்ள வராக மாதர்களை இருத்தி, அம்மாத ரின் முடிமுதல் அடிகாறும் உள்ள ஒவ் வோர் உறுப்புகளையும் பற்பல செய் யுட்களால் அழகுபடுத்திப் பாடி, இங்ஙனமே இன்னும் இல்லாத பொய் களை யெல்லாம் ஏராளமாய்ப் புனைந்து கட்டிச் சொல்லும் இக்காலத்தார் செய்யுள் வழக்கெங்கே! உள்ளவற்றை உள்ளவாறே எடுத்தியம்பிச், சிறிதும் பிழைபடா தெழுதிய ஓவியம் போல்வ தாகிய பழந்தமிழ்ப் புலவரின் செய் யுள் வழக்கெங்கே! இவ்விரண்டிற் கும் உள்ள வேறுபாட்டினைக் கம்ப ராமாயணச் செய்யுளோடு இக்கலித் தொகைச் செய்யுளைச் சிறிது ஒப் பிட்டு நோக்குவீர்களாயின் நன்கறி வீர்கள். அது நிற்க.

இனிப், பண்டைக் காதற் கற் பொழுக்க மாதர் தங் கணவர் இறந்து பட்ட ஞான்று, அவன்றன் பிரிவினை ஆற்ருராய் ஏங்கி உயிர் துறந்த நிகழ்ச்சிகளும் பல. இவ்வாறு நிகழ்ந்த தொரு நிகழ்ச்சியினைப் புறப்பொருள் வெண்பாமாலையிற் போந்த,

“ ஒருயிராக உணர்க உடன் கலந்தார்க்
கீருயிரென்பர் இடை தெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி
உடனே உலந்த துயிர் ” [ஞட்கும்

என்னுஞ் செய்யுள் கூருநிற்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனுர் காலத்



தில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தமையால் அவர் அவற்றிற்கு 'மூதானந்தம்' எனப் பெயரிட்டு, அதன் இலக்கணமுங் கூறினர். தன் காதற் கணவன் கோவலனை இழந்த கண்ணகி பட்ட துயரினை நினைப்பிற் கன்னெஞ்சமுங் கரையு மன்ருே? அவள் தன் கணவனைக் கொலை செய் வித்த பாண்டியனுக்கு அறிவு தெருட் டிப் பதினன்காம் நாள் தன்னுயிரி னைத் துறந்து தன் கணவனுயிரொடு வானுலகு சென்ற ஆற்றருங் காட்சி யினைக் குறவருங் கண்டன ரல்லரோ?

இனித், தன் கணவன் பூதப் பாண்டியன் மாய்ந்த ஞான்று அவ னைப் பிரிந்த துன்பம் பொருளாய் அவன்றன் காதன் மனைவி பெருங் கோப்பெண்டு தீப்பாயச் சென்றவழி, அவ்வாறு செய்தலாகாதென விலக்கிய சான்ருேர்க்கு அவள்,

“ பல் சான்றீரே! பல் சான்றீரே!
செல்கெனச் செல்லா தொழிகென விலக்
பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே! [கும்
அணில்வரிக் கொடுங்காய் வான்போழ்க்
[தட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்து அட்
வேளை வெந்தை வல்சி யாகப் [ட
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ;
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீம
நுமக்கு அரிதாுக தில்ல; எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென,
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை [அரும்பற
நள்ளிரும் பொய்கையுந் தீரும் ஓரற்றே”

என்று செய்யுளாகவே விடை கூறிய நிகழ்ச்சி நம் தமிழ் நங்கையரின் காத லன்பின் மாட்சியினை மலைமேல் வைத்த விளக்குப்போல் உலகெங்கும் விளங்கச் செய்கின்றதன்ருே?

இவ்வாருகத் தம் உயிரையும் ஒரு துரும்பாகக் கருதி நந்தம் தமிழ்ப் பெருமாட்டிமார் தம் காதலர் மடிந்த வழித் தாமும் உடன் மடியுமாறு அவரை அவ்வாறு ஏவியது எது? அவர்தங் கொழுநர்பால் வைத்த ஒப் புயர்வற்ற காதலன்பன்ருே? எனவே, மாதர்க்குச் சிறந்த கற்பொழுக்க மாவது அவர்தங் காதலன்பின் பய ஞய் அவர்பால் இயற்கையில் உள தாவதே யன்றிப், பிறர்க்கு அஞ்சியும் பிறர் கூறும் அறிவுரை கேட்டும் வருவதன் றென்பது புலனுகின்ற தன்ருே? இங்ஙனம் இயற்கை யொழுக்கமாய் வரற்பாலதாகிய கற் பிற்குக் காதலன்பு ஒன்றுமே சிறந்த ஏதுவா யிருத்தலைப் பல படியாலும் மக்களியற்கையில் வைத்து ஆராய்ந்து கண்டமையா லன்ருே ஆசிரியர் தொல்காப்பியனுர் “இன்பமும் பொரு ளும் அறனும் என்ருங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை” என்று ஓதி யருளினர். அம்முதலாசிரியர் வழி வந்த திருவள்ளுவர் முதலான சான் ருேரும் அங்ஙனமே அஃது அன்பின் வழி நடக்கற்பாற்றென்று பண்டு தொட்டு இன்றுகாறும் வலியுறுத்தி வந்திருக்கின்றன ரல்லரோ?

ஆனல், இப்போது நடைபெறும் மனை வாழ்க்கை எத்தன்மையதாய் இருக்கின்றது? அஃது உலகிய லொழுக்கத்திற்கு உயிர் போல்வ தாகிய காதலன்பின் வழிச் செல் கின்றதா? இல்லை, இல்லை, சிறிதுமே யில்லை. சாதி வேற்றுமை யென்னுங் கொடிய தூக்குக் கயிருனது காதலன் பின் கழுத்தை இறுக்கி விட்டது; காதலன்பிற் சிறந்து மறுவற்ற மதி போல் விளங்கத் தக்கவரான நம் பெண்மணிகளின் கற்பொழுக்கத்தை நிலை குலைத்து அதனைப் பழிபாவங் களால் மூடி விட்டது! எந்தப் பெண் மகளாவது தான் காதலித்த இளை ஞனை மணங்கூட இடம் பெறுகின் றனளா? எள்ளளவும் இல்லையே. ஏன்? ஒரு சாதிக்குள்ளே தான், ஒரு பத்து வீடுகளே யுள்ள ஓர் இனத்திலே தான் அவள் ஒருவனை மணக்கவேண்டும். அவள் கயல்மீனை யொத்த கண்ணழ கியா யிருந்தாலென்ன! கண்குருடான ஒருவனைத் தவிர வேறு மணமகள் தன் இனத்திற் கிடைத்திலனயின்

அவள் அவனையே தான் மணந்து தீரல் வேண்டும். அவள் முத்துக் கோத்தாலொத்த பல்லழகியாய் இருந்தாலென்ன! தன் பாழும் இனத்தில் ஒரு பொக்கை வாய்க் கிழவனைத் தவிர வேறு மணமகன் கிடைத்திலனாயின், அவள் அவனையே தான் மணந்து தீரல்வேண்டும்! அவள் பலகலை கற்றுக் கல்வியறிவிலும் இசை பாடுவதிலும் நுண்ணறிவிலும் சிவநேய அடியார் நேயங்களிலுஞ் சிறந்த கட்டழகியா யிருந்தாலென்ன! இறுமாப்பே குடிகொண்ட தன் சிறு மாக் குடியிற் கல்வியிருந்த மூலையே கண்டறியாதவனும், பாட்டுப்பாடவாயைத் திறந்தால் ஓட்டமாய் வர வண்ணானை வருவிப்பானும், அறிவை ஓட்டி விட்ட வெறு மூளையுடையானும், கறுப்பண்ணன் மதுரை வீரன் மாரியம்மன் முதலான வெறுக்கத்தக்க பேய்கட்கு ஊனுங் கள்ளும் படைத்துக் குடித்து வெறிப்பானுமாகிய ஒருவனைத் தவிர வேறு மணமகன் கிடைத்திலனாயின், அவள் தன் சாதியைவிட்டு வேறு சாதியிற் கலக்கலாகாமையின், அக்கல்லாக் கயவனையே கணவனாய்க் கொள்ளல் வேண்டும்! ஆ! பொருளற்ற இச்சாதி வேற்றுமைக் கொடுமையால் நம் அருமைப் பெண்மணிகள் படுந்துயர் மலையினும் பெரிதோ! அன்றிக் கடலினும் பெரிதோ! அன்றி ஞாலத்தினும் பெரிதோ! இவ்வளவு தான் என்று கூறல் எம் ஒரு நாவால் இயலாது!

பல நலங்களாற் சிறந்த ஓர் ஆண்மகனும் அங்ஙனமே தன் சாதியை விட்டுப் பிற சாதியிற் கலத்தல் ஆகாமையால், நலஞ் சிறிதுமில்லா ஒரு பேதைப் பெண்ணை மணந்து துன்புற வேண்டியவனா யிருந்தாலும், அவனது நிலை ஒரு சிறந்த பெண்ணின் துன்ப நிலைபோல் அத்துணைக் கொடிதன்று. ஏனென்றால், அவன் தான் வேண்டியபடி வேறு மகளிரைக் கூடிக் களித்தாலும், அவனை மிகுதியாய்க் குற்றஞ் சொல்வார் இல்லை. ஆனால், நம் அருமைப் பெண்மக்களின் நிலையோ அத்தகையதன்றே! அவர்கள் யாரைப் பார்த்தாலுங் குற்றம், யாரொடு பேசினாலும் அதனிலுங் குற்றம், அப்புறஞ் சொல்ல வேண்டுவது யாதுளது? விலங்குகளும் பறவைகளுங் கூடத் தாந் தாம் விரும்பிய துணையையே கூடி இனிது வாழா நிற்க, ஆறறிவுடைய மக்கட் பிறவியிற் பிறந்து அறிவையும் அழகையும் நற்குணத்தையுங் கண்டு பாராட்டிக் காதலன்பு கொள்ளத்தக்க ஆண் பெண்மக்கள் மட்டும் இடையே புகுந்த சாதி வேற்றுமை யென்னுங் கொலைஞனால் வெட்டி யழிக்கப்பட்டுக் காதலன்பு என்னும் உயிர் ஓடிப்போனபின், இழிந்த காமப்பிண வாழ்க்கையிற் காலங்கழிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டால், இதனினும் வேறு கொடுங் கொலை உளதோ! கூறுமின்கள் அறிஞர்களே! உலகியலொழுக்கத்திற்கு அடிப்படையாய் நிற்குங் காதலன்பைக் கீழறுத்து விட்டால், அதன் மேல் நிற்கும் அவ்வுலகியல் வாழ்க்கை கீழ் விழுந்து நுறுங்காதொழியுமோ! இங்ஙனம் மக்கள் வாழ்க்கையை வேரிலேயே அறுத்துக் கொலை புரிவோர், அருளொழுக்கத்தையும் அன்பொழுக்கத்தையுமே வலியுறுத்திய நம் தெய்வ ஆசிரியரால் வகுக்கப்பட்ட நம் சைவ சமயத்திற்கு உரியராவரோ! சொன்மின்கள் அன்பர்களே!

நம் அருமைச் சைவ சமயமானது காதலன்பின் வழி நடக்குந் தூய வாழ்க்கையினையே வேண்டுவதன்றி, அதனைக் கொலை செய்யுஞ் சாதி வேற்றுமை வாழ்க்கையினைச் சிறிதும் வேண்டுவதன் றென்பதற்கு நம் சைவ நாயன்மார் வரலாறுகளே சான்றுதல் சிறிது காட்டுதும். காரைக்கால் அம்மையார் என்னுஞ் சைவப் பெண்மணியாரின் வரலாற்றை முன்னர் ஆராய்வாம். இவர் தெய்வத் தன்மை வாய்ந்த நங்கையாராதலுடன், தமிழ் மொழிக் கடலையும் ஆரப்பருகி அதன்கண் அரிய பெரிய செய்யுள் நூல்களும் இயற்றுந்திறம் வாய்ந்தவர். அழகிலோ கைவல் கம்மியன் திருத்திச் சமைத்த அரும் பெறற்பொற்பாவையை ஒப்பவர். சின்னஞ் சிறு பருவம் முதலே சிவபிரான் திருவடிக்கண்ணுஞ் சிவனடியார் பாலும் மிக்க அன்பு பூண்டவர். இவ்வளவு சிறந்த ஒரு தெய்வமங்கைக்கு ஏற்ற கணவனை அவர் தாமே தெரிந்து காதலித்தல் வேண்டுமன்றிப், பிறர் அவர்க்கேற்ற ஒருவனைத் தெரிய மாட்டுவாரல்லர். அங்ஙன மிருந்தும் அவர் தஞ் சுற்றத்தார் தம் வணிக மரபினனான ஒருவனைக் கொணர்ந்து அவர்க்குக் கணவனாக மணம் பொருத்தி விட்டனர். அவ்வாறு மணஞ் செய்விக்கப்பட்ட அவன் அம்மையார் தம் அருமைகளை முன்னரே யறிந்து அவற்றிற்கு ஏற்பக் காதலன்பு பூண்டு நடக்கத்தக்க மாட்சி வாய்ந்தவன் அல்லனென்பது, அவரது தெய்வத் தன்மையை அறிந்த வளவில் அவன் அவரைத் தொடுதற்கு அஞ்சியிருந்து, பின்னர்ச் சில நாட்களில் அவர் அறியாமே பிரிந்து வேறொரு நாட்டிற்குச் சென்று அங்கே வேறொருத்தியை மணந்து கொண்டிருந் தமையானும், அது தெரிந்த அம்மையாரின் உறவினர் அவரை ஒரு சிவிகையில் ஏற்றிக் கொண்டு அவனிருந்த ஊர்க்குப் போன காலையில் அவன் தன் இரண்டாம் மனைவி மக்களுடன் எதிர் போந்து அம்மையாரை மனைவியாக நினையாமல் தெய்வமாக நினைந்து அவர் தந் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினமையானும் நன்கு பெறப்படும். அம்மையாரும் அவன்பாற் காதலன்பு நிகழப்பெறுமற் கணவனென்ற கடமையை நினைந்து ஒருவாறு அன்பு பூண்டொழுகின ரென்பதற்கு, அவன் தன்னை வணங்கி நின்ற காலையில் அவன் பொருட்டுத் தாங்கிய அழகிய உடம்பின் வடிவைத் தசைப் பொதி என வெறுத்துக் கூறி அதனை மாற்றிப் பேய்வடிவு தனக்குத் தருமாறு அவர் இறைவனை வேண்டினமையே சான்றாம்; இஃது ஆசிரியர் சேக்கிழாரடிகள்,

> "ஈங்கிவன் குறித்த கொள்கை
> இதஇனி இவனுக்காகத்
> தாங்கிய வனப்புநின்ற தசைப்
> பொதிகழித் திங்குன்பால்
> ஆங்குநின் தாள்கள் போற்றும்
> பேய்வடி வடியேனுக்குப்
> பாங்குற வேண்டுமென்று பரமனைப்
> பரவி நின்றார்"

எனக் கூறுமாற்றால் தெளியப்படும். காதலன்பு என்பது ஓராவிற்கு இருகோடு தோற்றினாற்போல இருவருயிரும் ஒருயிராய் ஈருடம்பின்நின்று இயையும் பெருகிய தூய அன்பாகும். இஃது ஆசிரியர் நக்கிரனார் இறையனாரகப் பொருளுரையிற் கூறியவாற்றானும், மாணிக்கவாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையாரில்,

> "காகத்திரு கண்ணிற் கொன்றே
> மணிகலந் தாங்கிருவர்
> ஆகத்துள் ஓருயிர் கண்டனம்யாம்
> இன்றியாவையுமாம்
> மேகத் தொருவன் இரும்பொழிலம்
> பலவன் மலையில்
> தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய்
> வரும்இன்ப துன்பங்களே"

என்று அருளிச் செய்தமையானும் நன்கறியப்படும். இப்பெற்றித்தாகிய காதலன்பு காரைக்கா லம்மையார்க்கும் அவர்தங் கணவனார்க்கும் நிகழப் பெறுமையால், அவர் தம் சேர்க்கை வெற்றுடம்பின் சேர்க்கையா யிருந்ததே யல்லாமல், அன்பால் உருகி ஒன்றுபட்ட உயிரின் சேர்க்கையாய் இருந்ததின்று. அம்மையாரைப் போலவே அவனுங் கலைத்தமிழ்ப் புலமையில் நிரம்பிச் சிவநேய அடியார் நேயங்களிலும் மிக்கிருந்தனனாயின், அவன் அவர்க்கேற்ற கணவனாக, அவர் தஞ் சேர்க்கை உயிரின் சேர்க்கையேயா யிருந்திருக்கும். அவ்வா றாகாமைக்குக் காரணம் அம்மையாரே தமக்குத் தக்கா னொருவனைத் தெரியாதிருக்க, அவர்தஞ் சுற்றத்தார் அவ்விருவரியல்பும் ஆய்ந்தாய்ந்துபாராமல் அவர் தம்மைப் பிணைத்து விட்டமையேயாகும்.

இனிக், காதலன்பிற் சிறந்த இன்ப வாழ்க்கை இடை நின்ற சுற்றத்தாரின் முயற்சியாற் சிதைவுபட்டுக் காரைக்காலம்மையார்க்கு இனிது வாயாது போனமை போலவே, சுந்தரமூர்த்தி நாயனார்க்குங் காதல் மனை வாழ்க்கை நன்கு வாயாது போயிருக்கும்; ஆனால் எல்லாம்வல்ல இறைவன் அவர் பால் மிக்க இரக்கம்பூண்டு அவர்க்கு அங்ஙனம் நேரவொட்டாமல் தடைசெய்தருளினன். பாருங்கள்! சுந்தரமூர்த்திகளின் சுற்றத்தாரும், அவர் தம் பேரழகு அருந்தமிழ்ப் புலமை சிவநேயம் முதலியவைகளை ஆழ்ந்தாய்ந்து பார்த்து, அவர் தம் தெய்வமாட்சிக்கு ஒத்த ஒரு மணமகளைத் தெரிந்தெடுத்தவர் அல்லர்; தமது சைவ அந்தண மரபில் தாம் வேண்டிய ஒரு பெண்ணைத் தெரிந்துகொண்டு அவர்க்கு அவளை மணம் பொருத்தத் துவங்கினர். அதுகண்ட பேரருட் கடலான சிவபிரான் ஓர் அந்தணமுதியோனாய் வந்து, அச்சுற்றத்தார் கூட்டிய மணம் நடைபெறாவாறு தடைசெய்து, அவரைத் திருவெண்ணெய் நல்லூர்க்கு ஈர்த்துப் போய் ஆட்கொண்டருளினர். அதன்பின் சுந்தரமூர்த்திகள் இறைவன்பால் அன்பு மீதூரப்பெற்றுப், பல திருக்கோயில்களை வணங்கிக்கொண்டு, திருவாரூர்க்கு வந்த காலையிற் சிவபிரான் திருக்கோயிலில் மறைவாயிருந்து மலர்மாலைத் திருத்தொண்டு செய்துகொண்டிருந்த இளநறுங் கன்னித் தெய்வ நங்கையாரான பரவை நாச்சியாரைக்கண்டு, உள்ளமும் உயிரும் உருகி யொருங்கே அவர்பாற் பதியப் பெற்றாராய்க் கழிபெருங் காதலன்பு கொண்டு,

"கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ
அறியேனென் றதிசயித்தார்"

அங்ஙனமே அவரைக்கண்ட பரவை நாச்சியாரும் இதற்குமுன் தாம் கண்டறியாத ஒரு தெய்வக்காதல் கொள்ளப்பெற்று,

"முன்னேவந் தெதிர்தோன்றும்
முருகனோ பெருகொளியாற்
றன்னேரில் மாரனோ
தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேஎன் மனந்திரித்தஇவன்
யாரோஎன நினைந்தார்"

பார்மின்கள் அன்பர்களே! இத்தெய்வப் பெருமானும் பெருமாட்டியும் ஒருவரை யொருவர் காதலித்து, அக்காதலன்பின் வயமாய் உணர்வு செல்லுங்காலுஞ் சிவபெருமான் றிருவருளே இவ்வாறு உருவு கொண்டு தோன்றியது போலும் எனக்கருதி வியக்கின்றார்! தெய்வத்தை மறந்து, உயர்ந்த நோக்கங்களை மறந்து இழிந்த ஊனுடம்பின் சேர்க்கையிலேயே நினைவு சென்று காமங் காழ்ப்பேறி நிற்கும் உலகத்து மக்களின் காம உணர்ச்சிக்கும், சிவபிரான் றிருவருளிலேயே நினைவழுந்தி அவ்வருள் விளக்கமாகவே தம் காதலரை நினைக்குஞ் சுந்தரர் பரவையாரின் தெய்வக் காதல் உணர்ச்சிக்கும் எவ்வளவு வேற்றுமை! தம்முள் ஒத்த இயல்பினரான தெய்வக் காதலர் மணவாழ்க்கைக்குத் சுந்தரமூர்த்திகளின் மணவாழ்க்கையினுஞ் சிறந்ததொன்றினை இவ்வுலகில் வேறெங்கணுங் காண்டலரிது. இங்ஙனமே, இவர் தம் மற்றை மனைவியாரான சங்கிலி நாச்சியார்க்கும் இவர்க்கும் உண்டான தொடர்பும் தெய்வக் காதலின்பாற் பட்டதாகும்.

அற்றேல், ஒருவர் இருவரைக் காதலித்தல் இயலுமோ வெனின்; ஆண்மகற் காயின் அஃதியலும்; என்னை?

"பெருமையும் உரனும் ஆடூஉமேன"

என்றும்,



"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"

என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் ஆண் பெண் இயற்கை வெவ்வேறாதலை அறிவுறுத்தலானும், இவ்வியற்கை வேறுபாட்டினை நன்குணர்ந்தே நாகரிக மக்கள் வாழ்க்கையினுள் ஓராண்மகன் மனைவியர் பலரை மணக்கப் பலரும் இசைதல்போல் ஒரு பெண் மகள் ஆண்மக்கள் பலரை மணக்க எவரும் இசைவதில்லாமையானும், சுந்தர மூர்த்திகள் இருவரைக் காதலித்தல் ஆண்பாலியற்கைக்கு ஒத்ததேயாம் ஆகலானும் என்பது.

மேலுஞ், சுந்தரமூர்த்திகளின் தெய்வத் தன்மைக்கு ஒத்த பெண்பாலார் இருவர் இருப்ப, அப்பெண்பாலார் இருவரின் தெய்வக் காதற்றன்மைக்கு ஒத்த ஆண்பாலார் இருவர் இலராய்ச் சுந்தரமூர்த்திகள் ஒருவரே உளராயின், அவர் காதலாலும் அருளாலும் உந்தப்பட்டு இருவரை மணத்தல் வழக்கேயாம். இதுபோன்ற அரிய காதல் நிகழ்ச்சியினை நக்கீரர் மாணிக்கவாசகர் முதலான தொல்லாசிரியரும் உடன்பட்டுத் தழுவுதல் நினைவிற் பதிக்கற்பாற்று. இவ்வாறு இருவருயிரும் உருகி ஒன்றுபட்டு அன்புருவாய் நிற்கும் நிலை, சிவத்தோடொன்றுபட்டு நிற்கும் பேரின்ப நிலையோடொப்பதாகலின், அன்புருவாம் இறைவனும் அவர் தந் தெய்வக் காதற் பெருங் கிழமைக்கு ஒத்து உதவியாய் நின்றருளினன். இதனாலன்றோ சுந்தரமூர்த்திகள்,

"பண்மயத்த மொழிப்பரவை
சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே
மற்றாரை யுடையேன்"

என்றருளிச் செய்வாராயினர்.

காதலன்பு நிகழுங் காலத்து அது நிகழப் பெறுவார் இருவர் சாதி குல வேற்றுமை சிறிதும் பாராது அவ்வன்பின் வழியராய்ச் சென்று ஒருங்கு சேர்வரென்பதும், சாதி குல வேறுபாடுகளையே பார்த்துக் கொண்டு இறுமாந்திருக்கும் பொது மக்கள் தூய காதலன்பு நிகழப் பெறுதற்குத் தக்காரைக் கண்டுகொள்ள மாட்டுவாரல்லரென்பதும், அருளிரக்கம் வாய்ந்த இறைவனே ஒரோவொருகாற் காதலன்புடையாரை ஒன்றுசேர்த்தற்பொருட்டுப் பொதுமக்கள் ஆக்குஞ் சாதிவேற்றுமைக் கட்டுப்பாடுகளை முற்றச் சிதைப்பனென்பதும், சுந்தரமூர்த்திகள் என்னுஞ் சைவ அந்தணர் பெருமான் உருத்திர கணிகையர் குலத்திற் பிறந்த பரவை நாச்சியாரையும் வேளாள குலத்திற் பிறந்த சங்கிலி நாச்சியாரையுந் தமது காதல் சென்றவழியே மணந்துகொண்டமையானும், அதற்கு முன் அவர்தஞ் சுற்றத்தார் அவரது தெய்வமாட்சி அறியாதே அவரியல்புக்குத் தகாத ஒருத்தியைத் தமது மரபினின்றும் எடுத்து மணம் பொருத்தப்புக்ககாலையில் அதனை இறைவனே நேர்நின்று தடைசெய்து பின்னர் அவரியல்புக்கு முழுதுமொத்த பரவை சங்கிலியாரை மணம்பொருத்தினமையானுந் தெளியப் படுகின்றன வல்லவோ? காதலன்பு கொள்ளத்தக்கார் இருவரைப் பொது மக்கள் அறியமாட்டாமையும், இறைவனே அவரையறிந்து ஒன்று சேர்த்தலும் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த,

"சொற்பால் அமிழ்திவள் யான்சுவை
யென்னத் துணிந் திங்ஙனே
நற்பால்வினைத் தெய்வந் தந்தின்று
நான் இவளாம் பகுதிப்
பொற்பு ஆரறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில் வெற்பிற்
கற்பாவிய வரைவாய்க்
கடிதோட்ட கள வகத்தே"

என்னும் அருமைத் திருக்கோவையார் செய்யுளானும் இனிது புலனாகின்றன வல்லவோ?

ஆகவே, சைவ சமயத்திற் பிறந்த ஒவ்வொருவருந், தம் சமயாசிரியராகிய சுந்தரமூர்த்தி நாயனார் நிலைநிறுத்திக் காட்டிய காதலின்ப வாழ்க்

கை உலகில் நின்று நிலவுமாறு, தம் ஆண்பெண் மக்களை அத்தகைய உண்மை யன்பின் மனை வாழ்க்கையில் அமரச் செய்து, நமது பழந்தமிழ்க் கொள்கையாகிய சைவ சமய நலத்தினை எங்கும் பரப்பி, நம் மக்களைப் பழிபாவங்களுக்கு ஆளாக்காது இளமை தொட்டே அவர்களது உள்ளம் உண்மை யன்பில் ஊறி ஒளிரும் வண்ணஞ் செய்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

இனிப், பழந்தமிழ்க் கோட்பாடாகிய சைவசமய உண்மை இவ்வாறிருப்பவும், இதனை அறியமாட்டாராய், ஆரியக்குருக்கள்மார் தமது நலத்தின் பொருட்டுப் புனைந்து கட்டிக்கொண்ட சாதி வேற்றுமையினைக் குருட்டுப் பிடியாய்ப் பிடித்து, அவ்வவருந் தத்தம் சாதிவரம்பு கடவாது தத்தம் இனத்திலேயே உண்ணல் கலத்தல்களைச் செய்தல் வேண்டு மென்றும், அப்பரும் அப்பூதிகளும் சாதி வேற்றுமை பாராது ஒருங்கிருந்து அளவளாவி உணவு கொண்டதும், சுந்தரமூர்த்திகளும் அங்ஙனமே சாதிவேற்றுமை பாராது காதலன்பின் வழிச்சென்று பரவை சங்கிலியாரை மணந்துகொண்டதும் அப்பெரியார்க்கு ஒக்கும்; மற்று அவர்போல் உயர்ந்த பேரன்பு நிலையிலின்றி அன்பில்லா இழிந்த நிலைக்கண் நிற்கும் நம்மனோர் சாதிகுல வேற்றுமை கடந்து அவ்வாறு உண்ணல் கலத்தல்களைச் செய்தலாகாதென்றுந் தம்மைக் கொழுத்த சைவரெனக் கூறிப் பெருமை பாராட்டிக் கொள்வார் சிலர் கூறுகின்றனர். இவர்தங் கூற்று நம்மனோரை முன்னேற்றம் அடையவொட்டாது பழிபாவங்களுட் படுக்குந் தீமையுடைத் தாதலையும், பண்டை நல்லாசிரியர் கொள்கைகளெல்லாஞ் சாதிவரம்பைச் சிதைத்தொழிக்கும் பெற்றிய வாதலையுஞ் **சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்** என்னும் எமது நூலில் விரித்துக் காட்டி யிருக்கின்றேம். இங்கேயும் இவர்கூற்றுப் பிழைபாடாதலைச் சிறிது காட்டு கின்றேம். உயர்ந்தோராகிய நம் ஆசிரியர் காட்டிய ஓர் ஒழுக்கம் சிறந்த தொன்றாயின், அது பிழைபாடிலதாயின் அவர்வழி நிற்கும் நாம் அவர் காட்டிய அம்முறையே ஒழுகக் கடமைப்பட் டிருக்கின்றோம்; அவ்வாறன்றி அவர் காட்டிய அவ்வொழுக்கஞ் சிறந்த தல்லாதாய்ப் பிழைபடுவதொன்றாயின் நாம் அதனைப் பின்பற்றி நடத்தல் ஆகாது. அப்பரும் அப்பூதிகளுஞ் சாதிகுல வேறுபாடுகளையே நோக்கிக்கொண் டிருந்தனராயின் அவர்க்குள்ள ஒப்புயர்வில்லாப் பேரன்பு பழுதுபடும்; ஆதலால், உயர்ந்ததாகிய அன்பைநோக்கி இழிந்ததாகிய சாதிவேற்றுமையினை அவர் அப்பாற் படுத்தினர். அங்ஙனமே, சுந்தரமூர்த்திகளும் சாதிவேற்றுமையினைப் பெரிதாக நினைந்திருந்தனராயின், தம்மோடொத்த சிவநேயச் சிறப்பும் பேரறிவும் பேரழகும் வாய்ந்த பரவையார் சங்கிலியார் என்னும் நல்லாரிணக்கத்தை இழந்துவிட்டவராகல் வேண்டும்; மற்றுப் புனிதமாகிய அவருள்ளத் தெழுந்த பெருங் காதலன்போ அச்சாதி வேற்றுமையினை நுறுங்கத் தொலைத்துப் பெறற்கரிய அந்நல்லாரிணக்கத்தையே நாடிச் சென்றது. ஏனென்றால், முற்றத் துறந்த பட்டினத்தடிகளும்,

“நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ”

என்று அருளிச்செய்தன ரல்லரோ?

ஒருவர்க்கு உடலும் உயிருமாய் இருக்கத்தக்கார் அவராற் காதலிக்கப் பட்டவரே யல்லாற் பிறரல்லரே. ஏனையோர் இணக்கமெல்லாஞ் சிற்சில காலமே நிலைப்பது. தாய் தந்தையரிணக்கம், புதல்வரிணக்கம், ஆசிரியரிணக்கம், தோழரிணக்கம், உடன்பிறந்தா ரிணக்கம், முதலியன வெல்லாஞ் சிற்சில காலமே நிகழ்வதன்றி, முழுதுந் தொடர்ந்து நிகழா. மற்றுக், காதலன்பிற் சிறந்த கணவனும் மனை



வியும் இணங்கும் இணக்கமோ அவர்தம் வாழ்நா ளெல்லையளவும் இரவும் பகலும் பிரியாதாய்த் தொடர்ந்து நிகழுந் தன்மையதாம். அதிலும் அவர் அழகிலும் அறிவிலும் அன்பிலும் சிவநேயத்திலும் மிக்கவரா யிருந்தால், அவர்தம் இணக்கத்தின் மாட்சியினையும் இன்பத்தினையும் எங்ஙனம் உரைக்கேம்! எவ்வாறு புகழ்வேம்! பார்மின்கள் அன்பர்களே! சுந்தரமூர்த்திகட்கும் அவர்தம் மனைவியார்க்கும் வாய்த்த நேயமாட்சி எம்மால் அளப்பரிதாகலின், அவர் சாதி வேற்றுமை தொலைத்துக் கைக்கொண்ட அந்நேயம் எம்மனோர்க்கு வழிகாட்டும் மங்காப் பெருவிளக்கமாய் இருக்கற்பாலதன்றோ!

பெரியோரான அவர்க்காயின் சாதி வேற்றுமை கடத்தல் தகும், சிறியோரான எமக்கோ அது தகாது என்பிரேல், சிறியோரான யாம் பெரியோராதல் எப்படி? பெரியோர் காட்டிய நன் முறையினைப் பின்பற்றி யொழுகினா லன்றோ யாமும் பெரியோராகலாம். அவர் காட்டிய நன்முறையினைப் பின்பற்றாது எந்நேரமுஞ் சாதிச் சண்டையிலேயே செருக்குற்று மாழ்குவமாயின் யாம் பெரியோராதல் எவ்வாறு கைகூடும்? அவர் காட்டிய பேரன்பு முறையினைக் கடைப்பிடியாது எந்நேரமும் அன்புக்குமாறான வம்பிலேயே நாங் காலங்கழித்தால் நாம் பெரியோராதல் யாங்ஙனங் கைகூடும்? பெரியோர் செய்ததொன்று தகாததென நமக்குத் தோன்றுமாயின், அதனை நாம் செய்யாது விடலாம். அப்பரும் அப்பூதியும் பேரன்பால் அளவளாவிச் சாதிவேற்றுமையினைப் பாராது ஒழுகிய முறை உயர்ந்ததா, தாழ்ந்ததா? தாழ்ந்ததென்று கூற எவருமே ஒருப்படாராதலால், உயர்ந்த அந் நன்முறையைப் பின்பற்றி நடத்தலால் நமக்குவரும் இழுக்கென்னை? எல்லா மக்களும் ஒரு தந்தையின் பிள்ளைகளே யாதலால் அவரெல்லாரும் உடன்பிறப் புரிமை பாராட்டி எல்லா வாற்றாலும் ஒருங்கு அளாவுதலே நன்றென்று ஏசுநாதரும் மகமது நபியுங் கூறிய அறிவுரைகளைக் கேட்டு மேல் நாட்டு மக்க ளெல்லாரும் ஏதொரு வேறுபாடுமின்றி ஒன்றுபட்டு ஒழுகி உலகிற் சீருஞ் சிறப்பும் எய்தி வருதலைக் கண்கூடாகக்கண்டு வைத்தும், நம்தெய்வ ஆசிரியர்கள் “ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்” என்று முடித்துக்கூறிய அறவுரையினை நாம் கடைப்பிடியாது, வாழ்நாள் எல்லை யளவுஞ் சாதி யிறுமாப்புப் பேச்சையே பேசிக், கூற்றுவனுக்கு இரையாய் ஒழிதல் பிறநாட்டவராற் பெரிதும் இழித்துரைக்கப்படுகின்ற தன்றோ? சாதி வேற்றுமையால் நாம் பெற்ற நலம் என்னை? ஒரு சிறு நலமாயினும் இருந்தால் அதனை நாம் கைக் கொள்ளலாம். ஆனால், ஒருவன் தன்னை யுயர்ந்த சாதியானாகச் செருக்குடன் உயர்த்துப் பேசிப், பிறனொருவனை இழிந்த சாதியானாக இழித்துரைக்குங்கால், அங்ஙனம் இழிக்கப்பட்டவன் எவ்வளவு மனம் நைகின்றான்! அவன் ஆண்மையுடையவனா யிருந்தால் தன்னை இழித்துப் பேசினவனைத் தானும் இழித்துப் பேச அதனால் இருவர்க்குள்ளுங் கலாம் விளைகின்றதன்றோ? இவ்வாறு அன்பினைச் சிதைத்து ஒற்றுமையினைப் பாழ் படுத்துஞ் சாதி வேற்றுமையினை நம் ஆசிரியன்மா ரெல்லாரும் ஒருங்கே யுதைத்துத் தள்ளி அன்பின் வழியராய் நடந்து காட்டி யிருக்கையில், நாம் அவரைப் பின் பற்றாது போவமாயின், அது நம் ஆசிரியர்க்குச் செய்த பெரும் பிழையாய் நம்மைச் சைவ சமயத்திற்குப் புறம்பாக்கு மென்று திண்ணமாய் உணர்மின்கள்!

அற்றன்று, நம் ஆசிரியர் நடந்து காட்டிய முறைகளை நாம் அவர் நிலைக்கு ஏறும் வரையிற் பின்பற்றலாகா தென்றுரைப்பீர்களாயின்; நம் ஆசிரியன்மார் அன்புக்கே உயர்வு கொடுத்துச் சாதி வேற்றுமையினைத் தாழ்த்

தினால், நாம் அவர்க்கு மாறாய்ச் சாதிக்கு உயர்வு கொடுத்து அன்பைக் கீழ்ப்படுத்தல் வேண்டும்; அவர்கள் பொய் சொல்லாதே, புறங்கூறாதே என்றால், நாம் பொய் சொல்லிப் புறங்கூறித்திரிதல் வேண்டும், அவர்கள் குடியாதே, கொலை செய்யாதே யென்றால், நாம் குடித்துக் கொலை செய்தல் வேண்டும்; அவர்கள் சிவத்தை வணங்கு, அடியார்க்குத் தொண்டு செய் என்றால், நாம் சிவத்தை வணங்காமல் அடியார்க்குத் தீமை செய் தொழுகல் வேண்டும். ஏனென்றாற், கீழ் நிலைக்கண் நிற்கும் நாம் மேல் நிலைக்கண் உள்ளார் சொன்னவைகளையுஞ் செய்தவைகளையும் ஏற்றல் கூடா தென்பது குருட்டுச் சைவர் கொள்கையன்றோ?

ஆனால், இக்குருட்டுச் சைவர் கூற்றை நம்மனோர் கேட்டு அதன்படி நடக்கப் புகுவாராயின் இந்நாடு காடாய், இந்நாட்டின் கண் உள்ள மக்கள் காட்டின் கண் உள்ள விலங்கின் கூட்டங்களாய் மாறுதல் திண்ணமாகலின், ஏனை நாடுகளிலுள்ள மக்களோ டொப்ப நாமுங் கல்வியிலுங் கடவுள் வழிபாட்டிலும் அன்பிலும் ஒற்றுமையிலும் வாழ்க்கை யின்பத்திலும் மேன்மேல் முன்னேற்றம் அடைதலையே பெருநோக்கமாய்க் கொண்டு, நம் செந்தமிழ்த் தொல்லாசிரியராகிய தொல்காப்பியனாரும் அவர் வழி பிழையாதுவந்த திருவள்ளுவர் சைவ நாயன்மார் சைவ குரவர் சந்தான குரவர் முதலான சான்றோருஞ் சொல்லியுஞ் செய்துங் காட்டிய அன்பினை உயிராய்க்கொண்ட இன்ப வாழ்க்கையில் வாழ்தலிலேயே கருத்தூன்றக் கடவோமாக!

“இன்பமும் பொருளும் அறனும்” என்று ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்த மூன்றில் முதற்கண் நின்ற இன்பத்தைப் பற்றி இதுகாறும் ஆராய்ந்தோம். இனி, இம்மைக் கண் நிகழும் இன்பவாழ்க்கையானது, வறுமையும் அதனால் வருந்துன்பமும் இன்றி இனிது நடைபெறுதற்கும் அங்ஙனமே மறுமை யின்பத்தை வேட்டுச் செய்யப்படுவதாகிய தவவொழுக்கமும் பிறருதவியை எதிர்பாராமற் செய்யப்படுதற்கும் செல்வப் பொருள் இன்றியமையாது வேண்டப் படுவதெனத் தொல்காப்பியனார்,

‘மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே’

என்று கூறுதலானும், திருவள்ளுவனார்,

“அருளில்லார்க் கவ்வுலகம் இல்லைப்பொ,
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு” [ருளில்லார்க்

என்றும்,

“அறன் ஈனும் இன்பமும் ஈனுந்
தீதின்றி வந்த பொருள்” [திறனறிந்து

என்றுங் கூறுதலானுஞ் செல்வப் பொருள் ஈட்டும் வகையில் நம் ஆசிரியர் கொண்ட கருத்தும் நம்மால் ஆராயற்பாலதா யிருக்கின்றது. செல்வப் பொருள் இங்ஙனம் இம்மை மறுமைப் பேறுகளை அடைவித்தற்கு இன்றியமையாக் கருவியா யிருத்தலானுங், கல்வி யறிவு வாயாதவர்கட்கு அதனை ஒழுங்கான நன் முறையில் ஈட்டும் வகையும், ஈட்டிய அப் பொருளை அவ்வாறே நன் முறையிற் செலவு செய்து இம்மை மறுமை யின்பங்களை எய்தும் வகையுஞ் சிறிதுமே விளங்கா. அதுவேயுமன்றி, ஒருகால் ஊழ்வினை வயத்தாற் கல்வி யறிவு வாயாதவர்கட்குச் செல்வம் வரின், அதனைப் பயன் படுத்தும் வழி தெரியாராய், அதனையே தெய்வமாக் கொண்டு அவர் இம்மை மறுமை நலங்களை ஒருங்கே இழந்துவிட்டுச் சில நாளில் அப்பொருளை இங்கேயே வைத்துவிட்டு இறந் தொழிதலையும், அவர்க்குப் பின் அப்பொருளைக் கைக் கொள்வோர் குடிக்குங் கூத்திக்குங் கொலைக்குங் கோண வழக்குக்கும் வெறும் பட்டப் பெயர்க்கும் வாரி யிறைத்து அதனைச் சில நாட்களில்



அழித்து விடுதலையுங் கண்ணெதிரே காண்கின்றோம். ஆகவே, நிலையில்லாத செல்வப் பொருளை நன்முறையில் ஈட்டுதலும், அதனை நன் முறையிற் பயன் படுத்தலும் நிலையான சிறந்த கல்விப் பொருளைச் சிறந்த முறையிற் பெற்றார்க்கன்றி ஏனையோர்க்குக் கைகூடாமை எளிதில் அறியப்படும்.

இவ்வுண்மையை நன்றாக பாகுபடுத்துணர்ந்த நம் முன்னோர்கள் பொருளைப் பற்றிப் பேச வருங்காலெல்லாம், அதனைக் கல்விப் பொருள் செல்வப் பொருள் என இரு கூறாகப் பகுத்து, முதலிற் கல்விப்பொருள் மாட்சியினை வலியுறுத்திப் பேசி, அதன் பிறகே செல்வப் பொருளைப் பற்றிப் பேசா நிற்கின்றனர். இது, நம் முதலாசிரியரான தொல்காப்பியனார் இவ்விருவகைப் பொருளையும் பெறும் பொருட்டு இளைஞர்கள் வேறு நாடு நோக்கிச் செல்லும் பிரிவுகளில் நூல் ஓதுதற்குப் பிரியும் பிரிவை முன் வைத்துப், பொருள் தேடுதற்குப் பிரியும் பிரிவை அதன் பின் வைத்து ‘அகத்திணையிய’லிற் பிரிவிலக்கணம் வகுத் துரைத்தமையானும், அவர் வழி வந்த திருவள்ளுவ நாயனாரும் அங்ஙனமே பொருட்பாலிற் கல்வியை முன் வைத்து, அதற்குப் பல அதிகாரங்கள் கடந்து போய்ச் செல்வத்தைப் பின் வைத் துரைத்தமையானும் நன்கறி கின்றோம். எனவே, ஒருவர்க்கு எஞ்ஞான்றும் அழியாப் பெருஞ் செல்வமாவதும், தன்னைப் பயின்றாரை எழு பிறப்புந் தொடர்ந்து செல்வதும், தன்னைத் தொடர்ந்து பயில்வார்க்கு அம்முறையே அவரறிவினை மேலும் மேலும் விளங்கச் செய்வதும், தன்னைப் பயின்றவரையே கண்ணுடையவராக்கித் தன்னைப் பயிலாதவர் கண்ணைப் புண்ணெனச் செய்வதுங் கல்விச் செல்வமே என்பார்,

“கேடில்விழுச் செல்வங் க [illegible] யொருவற்கு
மாடல்ல மற்றுப்பிற”

எனவும்,

“ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையும் ஏமாப்புடைத்து

எனவும்,

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்
[தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”

எனவும்,

“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்
[திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்”

எனவுந் தெய்வத் திருவள்ளுவரும் ஓதியருளினார். ஆரிய நூலார் பொருளற்ற கர்மங்கட்கும் பிறப்பினாற் சாதிக்கும் உயர்வு சொல்லுதல் போல், நம் ஆசிரியர் எவருஞ் சொல்லாமையும், நம் ஆசிரியர் எல்லாருங் கல்விக்கே உயர்வு சொல்லிக் கல்வி கல்லாமற் சாதிபற்றி உயர்வு தேடுவார்க்கு இழிவு சொல்லுதலும், ஆரிய நூலார் ஒரு சில வகுப்பினரே கல்வி கற்றற்குரியர் ஏனையோர் அதற்குரியரல்லர் என்று சொல்லுதல் போலாது நம் ஆசிரியன்மாரெல்லாருங் கல்வி கல்லாதார் எவரா யிருப்பினும் அவர் விலங்குகளை யொப்பரென வலியுறுத்தலும்,

“மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்
[பிறந்துங்
கற்றார் அனைத்திலர்பாடு”

—(திருக்குறள்.)

என்றும்,

“கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாரே நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே”

—(திருமந்திரம்.)

என்றும்,

“கல்லார் நெஞ்சின்
நில்லான் ஈசன்”

—(சம்பந்தர் தேவாரம்.)

என்றும்,

" கல்லாதார்-மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோருங் காதலானை "
—(அப்பர் தேவாரம்.)

என்றும்,

" விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர் "
—(திருக்குறள்.)

என்றும் போந்த அவர் தம் அறிவுரைகளால் தெளியப்படுகின்றன அல்லவோ?

நம் ஆசிரியன் மாரே யன்றிப் பண்டை நாளில் இருந்த நம் தமிழ் வேந்தர்களுங் கல்விக்குங் கற்றார்க்கும் உயர்வு தந்து வந்தனரே யல்லாமற் சாதி முதலிய பிறிது ஏதும் பற்றி எவர்க்கும் உயர்வு கொடுத்தனரல்லரென்பதற்கு,

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்[தும்
பிற்றைநிலை முனியாது கற்றல்நன்றே ;
பிறப்போ ரன்ன உடன் வயிற்றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும் ;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறுஅரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளுங்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே ".

என்று பாண்டி வேந்தனை **ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்** கல்வியையுங் கற்றோரையும் உயர்த்திச் சாதி யுயர்வினைக் கீழ்ப்படுத்துரைத்தமை ஒருபெருஞ் சான்றாய் விளங்குகின்றதன்றோ? இன்னும், முன்னொருகால் **மோசிகீரனார்** என்னும் நல்லிசைப் புலவர், **சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறை** என்னும் வேந்தர் பெருமானது அரண்மனைக்குட்சென்றபோது, அங்கே அவ்வேந்தனது முரசு வைக்குங் கட்டில் மிக மெல்லிதாய் அழகிதா யிருக்கக்கண்டு, அதன் கட்படுத்து உறங்கினால் எத்துணை இனிதாயிருக்குமென நினைந்து, அதன் மேலேறிச் சிறிது படுத்தவர், அதன் மென்மையால் அயர்ந்து உறங்கி விடுவாரானார். அப்போது அங்கு வந்த அவ்வேந்தர் பெருமான், தன் தூய கட்டிலின் மேல் அவர் படுத்துறங்குதலைக் கண்டு சிறிதுஞ் சினங்கொள்ளாராய் அதற்கு மகிழ்ந்ததோடமையாது, அவர் இன்னும் இனிதாய் உறங்கல் வேண்டுமென விரும்பி அருகிருந்த ஒரு கவரி கொண்டு அவர் மேல் மென்காற்றுப்பட நின்று வீசுவானானான் ; இதற்குள் விழித்தெழுந்த அப்புலவர் பெருமான் அவ்வரசன்றன் பேரன்பினையும் பெருந்தகைமையினையும் வியந்து,

" மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞை யொடுபொலியச் சூட்
குருதி வேட்கை யுருகெழு முரசம் [டிக்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவா
இருபாற் படுக்கும் நின்வாள்வாய் ஒழித்ததை
அதூஉஞ் சாலும் நற்றமிழ்முழுது அறிதல்,
அதனொடும் அமையாது அணுகவந்து நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித்தண்ணென
வீசியோயே ! வியலிடங் கமழ
இவண் இசை யுடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை யுலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்நீ ஈங்கிது செயலே "

என்று அவன்றன் தமிழ்மொழி யன்பைப் பெரிது பாராட்டினார். இங்ஙனமே தமிழ் கற்ற சான்றோர்க்கு அக்காலத்திருந்த சேர சோழ பாண்டியர்கள் பல வகையால் உதவி செய்து அவர்களைச் சிறப்பித்த வரலாறுகளை எடுத்துரைக்கப் புகுந்தால் அதற்கு நேரங்காணாது ; ஆயினும், ஒன்றே யொன்று காட்டல் வேண்டும். **கடியலூர் உருத்திரங் கண்ணனார்** என்னும் புலவர் பெருமான் 'பட்டினப்பாலை" யென்னும் அருந் தமிழ்ப் பாட்டொன்றைப் பாடிக் கொண்டு சென்றபோது, அதன் சொற்சுவை பொருட் சுவையினைக் கண்டு வியந்த சோழர் வேந்தனை **கரிகாற்பெரு வளத்தான்** அவர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான்.



யாருங்கள் அன்பர்களே ! இவ்வாறு கல்விப் பொருளானது செல்வப் பொருளினுஞ் சிறந்ததென்று நம் தெய்வ ஆசிரியரும் அவரது மெய்வழி கடைப்பிடித்து ஒழுகிய வேந்தர்களுஞ் செல்வர்களுங்கருதி அதனையும் அதனைக் கற்றாரையும் தம் உயிரினுஞ் சிறக்கவைத்துக் கொண்டாடினமையாலன்றோ, தனித்தமிழ் விழுப்பம் மலிந்த அரும்பெரு நூல்களை நாம் இன்று பெறும்பேறு பெற்றோம் !

மற்று, இக்காலத்துள்ளவர்களோ அழிவில் பெருஞ் செல்வமாகிய தமிழ்க் கல்வியைப் பாராட்டாதும், தமிழ் கற்றவர்களைப் பாதுகாவாதும், தமது செல்வத்தையே தெய்வமாகக் கருதி அதனை மேன்மேற் பெருக்குதற்கும் தம்முடம்போடு அழிந்து மாய்வனவாகிய அரசியல் நிலைகளும் போலிப்பட்டங்களும் அடைதற்கும், தமது நினைவை அல்லும் பகலும் ஈடுபடுத்தி அதன்கண் மட்டுமே முயற்சியுடையராய் முனைந்து நிற்கின்றனர் ! இதனால் தமிழ்க் கல்வி வளஞ்சுருங்கி வருவதோடு, தமிழ் கற்ற அறிஞர்களுந் தமது வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் வருவாய் இன்றி மிடிப்பட்டுத் துன்புறுகின்றனர் ! நந்தமிழ் நாட்டவர்கள் தமது தாய் மொழியை நிரம்பக் கற்றுத் தேர்ச்சி பெறுதற்கு இடனின்றித் தத்தளிக்கையில், நம் செல்வர்கள் அயல்நாட்டு மொழியாகிய ஆங்கிலத்தின் பயிற்சி மிகுதற்கும், ஆங்கிலச் கல்விச்சாலைகள், வடமொழிக் கல்லூரிகள், இந்திமொழிக் கல்லூரிகள் நாட்டுதற்குப் பொருள் உதவி செய்கின்றனர். " தன்னைப் பெற்றதாய் கிண்ணிப் பிச்சை வாங்கத், தம்பி கும்பகோணத்திற் கோதானஞ் செய்கின்றான் " என்னும் பழமொழியோடொப்ப, நம் தாய் மொழிப்பயிற்சி சிறிதுஞ் செவ்வனே நடைபெறா இந்நாளில், அரசினர் உதவியால் ஆங்கிலமொழிப் பயிற்சி எங்கும் பரவிக்கிடக்கும் இந்நாளில், இறந்துபட்ட வட மொழியினையும் வடநாட்டவர் வழங்கும் இந்தி மொழியினையும் பயில்கவென்று கூக்குரலிடுவார் தொகை பெருகும் இந்நாளில், வங்காளம் தெலுங்கு மலையாளம் முதலான மொழிகட்கு உரியோர் புகழத்தக்க முறையில் தத்தம் மொழிப் பயிற்சியினைப் பெருகச் செய்தற் பொருட்டு அவ்வம்மொழிகளிற் பல்கலைக் கழகங்கள் திறப்பித்துவரும் இந்நாளில், நம் தமிழ்நாட்டுச் செல்வர்கள் மட்டும் நம் தமிழ் நாட்டவர் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததான தமிழ்மொழிப் பயிற்சிக்குச் செலவிடாமற் பிறமொழிப் பயிற்சிக்குச் செலவிடுதல் ஐயகோ ! கொடிது ; கொடிது. நம் தமிழ் நாட்டு மக்களின் பேருழைப்பினைக் கொண்டு பெரும் பொருள் தொகுத்து வைத்திருக்குஞ் செல்வர்கள், அம்மக்களின் உதவிக்குக் கைம்மாறாகவாவது அவர்க்குரிய தமிழ் மொழிப் பயிற்சியினைப் பெருகச் செய்ய வேண்டியவர்களா யிருக்க, அரசினராற்றும் பெரும் வரிசைகள் குறித்து அவர்கள் அதனை அயல் மொழிப் பயிற்சிக்குச் செலவழித்தல் நன்றி மறந்த குற்றமாமன்றோ? அயல் மொழிப் பயிற்சியினை எவ்வளவுதான் இங்கே பரவ வைத்தாலும், அவற்றின் உதவிகொண்டு நந்தமிழ் மக்களைச் சிறிதும் முன்னேற்றல் இயலாது. நந்தமிழ் மக்களை முன்னேற்றுதல் அவர்தந் தாய் மொழியாகிய தமிழ் ஒன்றினாலே தான் கைகூடும் என்பதை நந்தமிழ் நாட்டுச் செல்வர்கள் கருத்திற் பதிக்கக் கடவராக ; மேலும், நந்தமிழ் நாட்டுக்கு ஆறாயிர நாழிகை வழி விலகிக்கிடக்கும் மேல் நாட்டிலுள்ள கிறித்தவக் குருமார்கள் இந்நாட்டுக்கு வந்து, நூறாயிரக்கணக்காகத் தம் நாட்டுமக்கள் தந்த பொருளைச் செலவிட்டு, இங்குள்ள நாடு நகரங்களிலுஞ் சேரிகளிலும் பல்லாயிரக் கணக்கான கல்விச்சாலைகள் திறப்பித்தும் மாதாகோவில்கள் கட்டுவித்தும் இந்நாட்டவர் எல்லார்க்கும் ஏதொரு

வேற்றுமையும் இன்றிக் கல்வி கற்பித்துங் கடவுள் உணர்ச்சி யுண்டாக்கியும் பேருதவி புரிந்துவரா நிற்க, நம்நாட்டு ஏழைமக்கள் ஒரு நாளுக்கு ஒருவேளை நல்லுணவுமின்றிப் பட்டினியும் பசியுமாய்க் கிடந்து நெற்றித் தண்ணீர் நிலத்தில்விழப் பாடுபட்டுத் தேடிக் கொடுக்கும் பெரும்பொருளைப்பேழை பேழையாய் வைத்திருக்குஞ் செல்வர்கள், தமது பெருமைக்கும் தமது நலத்திற்கும் தம்மனைவி மக்களின் ஆடை அணிகலங்கட்கும் தம் வேடிக்கை விளையாட்டுகட்குமாகத் தமது பெரும்பொருளைச் செலவு செய்து கொண்டு தமக்கு அப்பொருளைச் சேர்த்துக் கொடுக்கும் ஏழைகளிற் பெரும்பாலாரைத் தீண்டாதவரென ஒதுக்கி வைத்தும், அவர்க்கு நல்லுணவு நல்வெள்ளாடையுங் கூடக் கொடாதும், அவர் வணங்குதற்குத் தம் கோயில்களில் உள்வருதல்கூடத் தகாதென விலக்கியும், அவர்தம் மக்களோடு ஒப்ப இருந்து கல்வி பயிலுதலும் ஆகாதென அவரைத் துரத்தியும் அவ்வேழை மக்கட்குப் பெருங்கொடுமை செய்துவரல் தெய்வத்துக்கு அடுக்குமா? "ஏழையழுத கண்ணீர் கூரியவாள் ஒக்கும்" என்னும் பழமொழிப்படி, நம் ஏழை மக்கள் படுந்துயரமானது, அத்துயரத்திற்கு ஏதுவாய் நிற்குஞ் செல்வர்களையுங் குருமார்களையுஞ் சுவடறத் தேய்த்து மாய்க்குங்காலம் இறைவனது சினத்தால் விரைந்து அணுகுகின்றதென்று ஓர்மின்கள்! ஓர்ந்து, எல்லா மக்களுக்குங் கல்விப் பயிற்சி இன்றியமையாததெனவும், அக்கல்வியாகிய விளக்கைக்கொண்டு எல்லாம்வல்ல சிவபிரான் றன்பேரின்ப வெள்ளத்தைத் தெரிந்து சென்று அவ்வின்பத்தை நுகர வம்மின்களெனவும் நம் சைவசமய ஆசிரியர்கள் இடைவிடாது அறிவுறுத்தி வந்த அருட் பான்மையினைக் கடைப்பிடியாக எடுத்துக்காட்டி மக்களெல்லாரையும் அழைத்த,

"காகம் உறவுகலந் துண்ணக்
கண்டீர் அகண்டாகார சிவ
போகம் எனும் பேரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வெளியாய்க் கிடக்குதையோ!
இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம் விழும்முன் புசிப்பதற்குச்
சேரவாருஞ் செகத்தீரே"

என்னும் தாயுமான அடிகளின் பழந் தமிழ்ச் சைவக் கோட்பாட்டைக் கடைப் பிடித்து, உண்மைச் சைவராகிய நாம் நம்மவரெல்லார்க்கும் நம் அருந் தமிழ்த் தெய்வக் கல்வியைப் புகட்ட முன் நிற்போமாக.

இனி, நம் தெய்வ ஆசிரியர் தொல்காப்பியனார் பொருளைக் கல்விப் பொருள் செல்வப் பொருளென இரண்டாகப் பகுத்து, என்றும் அழியாததாய் மக்களுயிரின் அறிவை விளக்கி அவ்வுயிரைப் பிறவிகடோறுந் தொடர்ந்து செல்லும் விழுப்பம் உடைமை பற்றிக் கல்வியை முதல் நிலைக்கண் வைத்துங் கல்விபோல் அழியாச் சிறப்புடைய தன்றாயினும் அக்கல்வியைப் பயன்படுத்தற்கும் உலகியல் ஒழுக்கம் நடைபெறுவித்தற்கும் இன்றியமையாததாதல் பற்றிச் செல்வத்தை அதன் பின்நிலைக்கண் வைத்தும் அவ்விரண்டும் அன்பினால் உந்தப்பட்டு மேலும் மேலும் அவ் அன்பினை வளர்த்துப் பரவச் செய்தற்கே கருவியாதல் வேண்டுமென "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை" என்னுஞ் சூத்திரத்தில் ஆணை தந்திருக்கின்றார். ஆகவே, கல்வியானது அறிவை விளக்குங் கருவியாதலோடு எல்லா உயிர்களினகத்துந்தொகுத்து, வைக்கப் பட்டிருக்கும் அன்பு என்னுந் தேனைப் புறத்தே ஒழுகச் செய்து, உலகத்தை அத்தேன் பெருக்கிற் படிவித்து இன்புறச் செய்தல் வேண்டும் என்றும், செல்வமானது அக்கல்விக்குத் துணையாய் அதனையும் அன்பையும் வளரச் செய்தற்குக் கருவியாதல் வேண்டு மென்றும் நாம்



தெளியப் பெறுகின்றனம்; அன்பர்களே!

ஆனால், இஞ்ஞான்றுள்ள மக்களிற் கல்வி கற்பாருஞ் செல்வந் தொகுப்பாரும், கல்வி கற்பது அறிவினை விளக்கி அன்பினை வளர்த்தற் பொருட்டே யாமென்றுஞ் செல்வந் தொகுப்பது தமக்கு மட்டுமே யன்றிக் கல்விக்குங் கற்றார்க்கும் வறியார்க்கும் அறத்திற்கும் பயன் படுத்துதற் பொருட்டே யாமென்றும் உணர்கின்றா ரில்லை; கல்வி கற்பது பெரும் பொருள் தொகுப்பதற்கே என்று பிழையாக நினைக்கின்றார்கள்; ஆசிரியர் தொல்காப்பியனாரும் அவர் வழி வந்த திருவள்ளுவர் முதலிய சான்றோருமோ, அன்பு வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்குமே கல்வி கற்றல் வேண்டுமென மொழியா நின்றார். நம் ஆசிரியர் அறிவுரையைத் தழுவாத நம்மக்களோ பொருளீட்டுதல் ஒன்றன் பொருட்டாகவே கல்வி கற்றலும் அதனைப் பயன் படுத்தலுஞ் செய்து வருதலால் விளையுந் தீமைகள் அளவில்லாதனவாய்ப் பெருகுகின்றன! பொருட்பேறு ஒன்றையே கருதுவோர் பிறர் நலங் கருதுவரோ! தம்மினும் ஏழைகளாய் இருப்பவர் பொருள்களையுங் கவர்ந்து கொள்ளவன்றோ சூழ்ச்சி செய்கின்றனர்! இரவில் திருடுந் திருடர்க்கும், வழிமறித்துக் கொள்ளை யடிக்கும் வழிப்பறிகாரர்க்கும், கல்வியை உதவியாய்க் கொண்டு உயர் நிலைகளாகிய மாறுவேடம் பூண்டு கைக்கூலி வாங்கும் பகற்கொள்ளைக்காரர்க்கும் வேறுபாடுண்டோ சொன்மின்கள்! இங்ஙனமே செல்வப் பொருளைக் கொண்டு மேலும் மேலுஞ் செல்வத்தைத் திரட்டிச் சேர்ப்பவர்கள் எத்தனையோ ஏழைக் குடும்பங்களைப் பாழாக்கிச் செல்வர்க ளாகின்றார்கள்! ஆங்கிலம் வடமொழி முதலானவைகளை எவ்வளவு கற்றாலும் என் பயன்! அன்புக்கும் அறிவுக்கும் பயன் படுத்தற் பாலவான கல்வியையுஞ் செல்வத்தையும் திரண்ட செல்வத்தை மேன்மேற் பெருக்குதற்குப் பயன் படுத்தலால் எத்தனை கொலைகள்! எத்தனை அழிவழக்குள்! எத்தனை புனை சுருட்டுகள்! எத்தனை கொடும் பொய்கள்! நாடோறும் நாழிகை தோறும் அடுத்தடுத்து நிகழா நிற்கின்றன! இவ்வளவு தீங்குகள் செய்து ஈட்டிய பொருளை ஈட்டியவனாவது நிலையாக இருந்து நுகர்கின்றனனா? அதுவும் இல்லையே! பருநோய்கொண்டு நீள வருந்தியோ, நுண்ணோய் கொண்டு சடுதியிற் செத்தோ, தாய் அலறத், தந்தை யலற, மனைவி யலற, மக்கள் அலற, எங்கோ மாயமாய் மறைந்து போய் விடுகின்றனனே! அவன் அவ்வளவு பிறரைத் துன்புறுத்தித் தொகுத்த பொருளில் ஓர் எள்ளளவாவது கூடச் சென்றதா? இல்லையே!

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டேவிழி
அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே
விம்மிவிம்மியிரு
கைத்தலைமேல் வைத்தழு மைந்தருஞ்
சுடுகாடுமட்டே
பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய
பாவமுமே"

என்ற **பட்டினத்தடிகள்** பொன்மொழியின் உண்மை நாடோறும் நம் கண்ணெதிரே நிகழ்ந்து வருகையிற், கல்வி கற்றவர் நிலையில்லாத பொருளின் பொருட்டே அதனைப் பயன் படுத்தலுஞ், செல்வ முடையவர் மேலுஞ் செல்வம் பெறுதலையே கருதிப் பிறர்பொருளைப் பல வழியாற் கவர்தலும் எவ்வளவு கொடுமை எவ்வளவு பேதைமை! "ஒருவன் உலகமெல்லாம் பெற்றாலுந் தன் உயிரை இழந்து விடுவனாயின் யாது பயன்" என்ற ஏசு முனிவருரையின் உண்மையை நினைந்து பார்மின்கள்! இப்பிறவியிற் கற்றதும் பொருள் ஈட்டியதும் போலவே ஒவ்வொரு பிறவியிலுஞ் சென்று கற்றலும் பொருள் ஈட்டலுஞ் செய்ய வேண்டியவரான மக்கள் அவ்விரண்டையும் அடுத்தடுத்

து செய்தலில் அலுப்புறல் வேண்டாமோ! அவ்விருவகைப் பொருளாலும் அன்பையும் அறிவையும் வளர்த்துப் பிறவியைத் தூய்மை செய்து இறைவனது திருவடிப் பேரின்பத்தைப் பெறாமல் இப்பிறவி வட்டத்தில் ஓயாது கிடந்து சுழலுதலாற் பயனென்னை! ஆகவே, கல்விகற்றலும் அதனைக் கற்பித்தலும் அதனைப் பயன்படுத்தலும் அன்பு அறிவுகளை வளர்த்தற்குக் கருவியாக முதலிற் பயன்படுத்தி, அதன்பின் தமது வாழ்க்கையின் நலத்திற்குப் பொருள் தேடுதலில் அதனைப்பயன்படுத்துவதே அறிவுடைமையா மென்பதூஉம், அங்ஙனமே செல்வத்தைத் தேடுதலும் அதனைத் தேடுவித்தலும் அதனைப்பயன்படுத்தலுமாகிய முயற்சிகளெல்லாங் கல்வியையுங் கற்றார் தொகையையும் பெருக்கி அன்பினை எங்கும் பரவச் செய்தற்கு முதலிற் பயன்படுத்தி, அதன் பின் தமது வாழ்க்கை நலத்திற்குப் பயன் படுத்துவதே அன்புடைமையா மென்பதூஉம் நம்பழந் தமிழ்ச் சைவக் கோட்பாடாதல் பெறப்பட்டது.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் மூன்றாவதாக நிறுத்திய "அறம்" என்னும் முடிந்த பொருளைப் பற்றி ஆராய்ந்து அவ்வளவில் இவ்விரிவுரையை முடிப்பாம். இன்பமும் பொருளும் அன்பினையே முதலும் ஈறுமாய்க் கொண்டு தேடப் படுதலும் நுகரப்படுதலும் பயன்படுத்தப் படுதலும் வேண்டுமென ஆசிரியர் வற்புறுத்தினாற் போலவே, அறமும் அன்பினையே முதலும் ஈறுமாய்க் கொண்டு ஈட்டப்படுதலும் நுகரப்படுதலுஞ் செய்யப்படுதலும் வேண்டுமென அவர் வலியுறுத்துகின்றமை மேலெடுத்துக் காட்டிய "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை" என்பதனால் நன்கு விளங்காநிற்கும். எனவே, உண்மை யன்பு இன்றி, வெறும் பட்டப் பெயரை நச்சியும் உலகத்தார் தம்மை மீக்கூறுதல் விழைந்தும் ஆற்றும் அறம் நன்மைபயவாமை அறியப்படும். இவர் அறஞ்செய்வதிற் சிறந்தாரென்று அரசினருங் குடிமக்களும் புகழ்ந்து பேசுதலையே நோக்கிநிற்பவர், தாம் குறித்த அறத்தைத் தமது கைப்பொருளா லன்றிப் பிறரது பொருளாற் செய்தற்கும் பின்வாங்கார். 'இவ் வேழைமக்களின் பொருளை அவர் கண்ணீர் சிந்தப் பிடுங்கிப், பிறர்மெச்ச அறஞ் செய்தலால் யாது பயன்? என்று அவர் உணரமாட்டாராதலால், அன்பின்றிச் செய்வாரது அறங் "கடைத் தேங்காயைத் திருடி வழிப் பிள்ளையார்க்கு உடைப்பதனையே" ஒப்பதாய் முடியும். மற்று எல்லா உயிர்களிடத்தும், எல்லா மக்களிடத்தும் நெகிழ்ந்த அன்புடையவர்களோ எவ்வுயிர்க்கும் எவர்க்குந் தீங்கு நேராத முறையிற் பெயர் புகழ்களை வேண்டாது அறஞ்செய்வாராகலின், அவர் செய்யும் அறமே தமக்கும் பிறர்க்கும் உண்மையிற் பயன்படுவதுடைத்தாம். ஆகவே, அன்பு ஒன்றனையே உயிராகக்கொண்டு நடைபெறும் அறத்தை எடுத்து வற்புறுத்தும் நந்தெய்வ ஆசிரியர், தமது விழுமிய கோட்பாட்டிற்கு மாறுபாடின்றி அவ்வறத்தை ஒன்றாகவே கூறினல்லது அதனை 'இல்லறம்,' 'துறவறம்' என இரண்டாகப் பகுத்துத், தாம் இயற்றியருளிய **தொல்காப்**பியத் தெய்வ முழுமுதல் நூலின்கண் யாண்டும் ஓதிற்றிலர். இம்மை யின்பம் விழைந்து தாம் காதலன்பு பாராட்டிய மனைவி மக்களோடொருங்கிருந்து நடாத்திய அன்பு வாழ்க்கையும், மறுமையின்பம் விழைந்து மனைவிமக்கள் தமக்குத் தொண்டுசெய்ய இம்மை முயற்சியைவிட்டு இறைவன் றிருவருளிற் றமது உணர்வினைத் தோய்வித்திருக்குந் தவவாழ்க்கையும் ஓர் அறத்தினுள்ளேயே அமைந்த இருவகை நிலைகளாகு மல்லாமல், அவ்விரண்டும் ஒன்றோடொன்று மாறுபட்டன



வாகா என்பதே நம்முதலாசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தாதல்,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங்கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று அவர் அருளிச்செய்த கற்பியற் சூத்திரத்தால் தெற்றென விளங்காநிற்கும். இதன் பொருள் என்னையோ வென்றால், 'காதலன்பால் துய்த்த காம வின்பம் நிறைந்து கடைக்கொண்ட வாழ்நாள் எல்லையின் நடுக்காலத்தே, தமக்குக் காவலாய் அமைந்த தம் புதல்வரோடு கூடியிருந்தும், தாம் அதுகாறுஞ் செய்து போந்த அறத்தை இனித் தாம்செய்யலாகாமையின் தமக்காக அவ்வறத்தைச் செய்யுஞ் சுற்றத்தாருடன் அமர்ந்துங், குடும்பத் தலைமகனுந் தலைமகளுஞ் சிறந்ததாகிய தவத்தில் தமதுணர்வினைப் பயிலச் செய்தல் தாம் அதுகாறுஞ் செய்து போந்த காதல் மனைவாழ்க்கையின் பயனாகும்; என்பதே அதுவாம். எனவே, காதலன்பிற் சிறந்த கணவனும் மனைவியும் ஒருவரை யொருவர் பிரியாதிருந்தே தவஞ்செயற் பாலரென்பதூஉம், அப்போது அவர் தம் புதல்வராயினார் அவரது தவ வாழ்க்கைக்கு வேண்டுவனவெல்லாந் தேடிக் கொடுத்து அவர்க்குத் துணையாக நிற்கற்பாலரென்பதூஉம், அவர்க்குச் சுற்றத்தவராயுள்ளவர் அவர் தவவாழ்க்கையில் அமர்ந்த காலந் தொட்டுச் செய்யாது விட்ட அறங்களை யெல்லாஞ் செய்து கொண்டிருக்கற் பாலரென்பதூஉம் நன்கு பெறப்படுகின்றன அல்லவோ? பாருங்கள் அன்பர்களே! நம் முதலாசிரியர் எடுத்துக் கூறிய நம் தமிழ் முது மக்களின் மனைவாழ்க்கையும் அதன் முடிவில் நோற்கப்படுவதாகிய அவர்தந் தவவாழ்க்கையும் எவ்வளவு சிறந்தனவாய், இறைவன் வகுத்த அன்பொழுக்கத்திற்குச் சிறிதும் மாறுபடாதனவாய் விளங்கி நிற்கின்றன! பௌத்த சமண சமயங்களும் அவற்றைப் பின்பற்றி எழுந்த ஆரிய மிருதி நூல்களுந் தவவாழ்க்கையைத் துறவு நெறியின் பாற்படுத்து, மனைவிமக்கள் சுற்றம் முதலிய தொடர்புகளை யெல்லாம் முற்ற அறுத்த பின் தவஞ்செயற் பாற்றென்று வலியுறுத்தா நிற்க, நம் செந்தமிழ்த் தனிமுதல் நூலாகிய தொல்காப்பியமோ கணவனும் மனைவியும் ஒருவரை யொருவர் பிரியாது நின்றே மக்களுஞ் சுற்றமுந் தமது தவத்திற்கு உதவியாய் நிற்பத் தவத்தினை முயலற் பாலர் என அறிவுறுத்துகின்றது. இவ்விரு வேறு அறிவுரைகளில் எது சிறந்ததென்பதைச் சிறிது ஆராய்ந்து பார்மின்கள்! ஒருவன் தன் வாழ்நாளில் நீண்ட காலம் வரையில் அன்பு பாராட்டி வந்த தன் மனைவி மக்களை அன்பின்றிப் பிரிந்து, பிறரிடும் அறச்சோற்றிற்காக ஊர் ஊர் திரிந்து, ஐயம் ஏற்றுண்டு மரத்தினடியிலும் புறந்திண்ணையிலும் வருந்திக் கிடந்து நோயிலுந் துன்பத்திலும் உழல்வதாகிய வடநாட்டினர்தம் துறவு வாழ்க்கை நல்லதோ! தன் உடம்பையும் உயிரையும் அன்பினால் இன்புற வளர்த்த தன் மனைவியையும் அவள்பாற் றோன்றிய அன்புடை மக்களையும் பிரியாதிருந்து, அவர் தனக்கு ஏதுங் குறையில்லாது தொண்டு செய்யத் தானுந் தன் மனையாளுந் தவத்தின்கண் அமர்வதாகிய தென்னாட்டினர்தந் தவவாழ்க்கை நல்லதோ! பசி நேர்ந்த போது உணவும் பெறுதல் அரிதாதலின் தன்னுடம்பே தனக்குஞ் சுமையாகத், தாம் வருந்தித் தேடிய உணவிலிருந்து பிறர் தனக்கு உணவளிக்க வேண்டியிருத்தலிற் பிறர்க்குஞ் சுமையாய்த் தன் மனைவி மக்களை மிடியிலுந் துன்பத்திலும் உழலவிட்டுத் தானும் உழலுந் துறவு நிலை நல்லதோ! தான் தேடிய பொருள்கொண்டு தன் புதல்வரும் பெருக்கிய செல்வத்தால் ஊணும் உடையும் பிறநலங்களும் பெற்றுத் தானுந் தன் மனைவியுந் துன்பின்றி

கோற்குந் தவநிலை நல்லதோ! நீண்ட நாள் தன்னோடு அன்பினால் உயிர் வாழ்ந்தார் தன்னைப் பிரிந்தமையால் தனித்துயர் உழக்கத் தான் மட்டும் மறுமையின்பம் நாடிப் புகுவதாகிய துறவு நிலை நல்லதோ! அன்றித் தன்னோடு நீள அன்புற்று உயிர் வாழ்ந்தார் தாமுந் தன்னைப் போலவே திருவருளின்பத்தை நாடித் தன்னோடுடனிருந்து நோற்பதாகிய தவநிலை நல்லதோ! என்று பகுத்து நடுநின்று ஆராய்வார்க்கு, வடவர் மேற்கொண்ட துறவு வாழ்க்கையினுந் தமிழர் மேற்கொண்ட தவ வாழ்க்கையே பல வாற்றானுஞ் சிறந்ததென்பது இனிது புலனாம். மேலும், மனைவிமக்களையெல்லாம் அன்பின்றிப் பிரிந்து தவமுயற்சியில் நிற்பதாகிய துறவுநிலை, காண்பவர்க்கு வெருட்சியினை விளைவிப்பதன்றி, அந்நிலையில் நிற்பார்க்குச் சிறிதும் தவந் தருவதன்று. ஏனென்றால், ஊனாற் சமைந்த இவ்வுடம்பு உள்ளவரையில், அதற்கு உணவு இடுதல் வேண்டும்; உணவினால் உடம்பு தன்னிலையில் நிற்கும் வரையில் ஆண்டில் முதிர்ந்தார்க்கும் புணர்ச்சி வேட்கையுண்டாதலை யாண்டுங் காண்கின்றேம். பலவாற்றாற் பட்டினி கிடந்து உடம்பை வாட்டிய குசேலமுனிவருந் தம் மனையாளைக்கூடி இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்றனரென்றால், உலக வாழ்க்கையைத் துவரத் துறந்து பெருந்தவத்தில் வைகிய விசுவாமித்திர முனிவரும் மேனகை என்னும் அரம்பை மாதைப் பன்னிரண்டு ஆண்டுகள் கூடிக்கிடந்து சகுந்தலையைப் பெற்றனரென்றால், அவர்போல் அத்தனைக்கடுந்துறவில் நிற்கமாட்டாத எளிய மக்கள், மனைவி மக்களை முற்றத் துறந்து முழுத்தவ வாழ்க்கையில் இழுக்கின்றி நிற்கமாட்டுவரோ சொல்லுங்கள்! முழுத்துறவினை வலியுறுத்திவந்த கௌதம சாக்கியர் காலத்திலேயே அவரால் துறவு புகுந்த பிட்சுக்களும் பிட்சுணிகளுந் தத்தம் நிலை குலைந்து காம இன்பத்திற்கிடந்துழன்றனரெனவும், உரோமாபுரியில் அங்ஙனமே துறவு நிலையிலிருந்த கத்தோலிக் கிறித்துவக் குருமார்களுங் கன்னிகளுந் தம் நிலை வழுவி ஒழுகினரெனவும் பண்டை நிகழ்ச்சிகளை நூல்களின் வாயிலாக நன்கறிவதோடு, இஞ்ஞான்றுள்ள துறவு மடங்கள் பெரும் பாலனவற்றிலும் அத்தகைய சீர்கேடான நிகழ்ச்சிகள் தொடர்பாக நடைபெற்று வருதலையும் உணர்ந்து வருகின்றனம் அல்லமோ? இத்தனைச் சீர்கேடும், இழுக்கிய நடையும் எதனால் வந்தன? உலக இயற்கையும் மக்களியற்கையும் இவற்றை வகுத்த இறைவன் திருவுளக் குறிப்பும் நன்குணர்ந்த நம்பேராசிரியராகிய தொல்காப்பியனார் அறிவுறுத்திய தவநிலையினைத் தழுவாமல், உலக இயற்கைக்கும் மக்களியற்கைக்கும் இவற்றைத் தோற்றுவித்த ஆண்டவன் திருவருட் குறிப்புக்கும் மாறானதொரு துறவு நிலையைப் பௌத்த சமண் மதங்கள் கூறியபடி நம்மனோர் தழுவி நடக்கப் புகுந்தமையா லன்றோ? மனைவாழ்க்கையில் இருந்தக்கால் தாம் செய்து போந்த முப்பத்திரண்டு அறங்களையும் தம் உரிமைச் சுற்றத்தார் செய்து போதருமாறு ஒழுங்கு செய்து வைத்துத் தம் புதல்வர் தமக்கு வேண்டியவைகளைச்செய்துவர, உலகநன்மையையுந் தமது நன்மையையும் நாடி இறைவனை உளங் குழைந்துருகி வழுத்துவதாகிய தவநிலையைக் கணவனும் மனைவியும் ஒருங்கிருந்து செயற்பாலரென நம் பேராசிரியர் தொல்காப்பியனார் உரைத்தபடி நம்மனோர் செய்து வந்தனராயின் மேற் சொன்ன தீமைகள் வாராவன்றே.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் காட்டிய தவநெறியிலேயே வடநாடு தென்னாடுகளிற் பண்டைக் காலத்திருந்த முனிவர்கள் எல்லாரும் நிலை நின்றனர் என்பதற்கு, வடநாட்டு முனிவராகிய மரீசி, அத்திரி, அங்கிரசர், புலகர், கிரது, புலத்தியர், வசிட்டர் முதலியோரெல்லாம் தத்தம் மனைவிமாரோடிருந்து தவஞ் செய்தமையுந் தமிழ் நாட்டிலிருந்த பாலைக் கௌதமனார், திருவள்ளுவனார், சுந்தரர் முதலாயினாரும், பெரிய புராணத்துச் சொல்லப்பட்ட சைவநாயன்மார் பலருந் தத்தம் மனைவியாரோடிருந்தே தவமியற்றிச் சிவபிரான் திருவடிப் பேரின்பத்தை எய்தினமையுமே சான்றாம். இதுகுறித்தன்றே தெய்வத் திருவள்ளுவனாரும்,

> " அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
> பிறன் பழிப்பதில்லாயின் நன்று "

என்னுந் திருக்குறளால் அறவாழ்க்கை எனப்படுவது இல் வாழ்க்கையேயாமென்றும்,

> " அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற்
> புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன் "

என்னுந் திருக்குறளால் துறவுநிலை புகுதல் பயன் இன்றாமென்றுந் தொல்லாசிரியர் வழியே கடைப்பிடித்து ஓதியதோடு, 'துறவு' என்பது நெஞ்சினாற்றுறத்தலே யாமெனவும், "யான் செய்தேன்" என இறுமாந்துரைக்கும் அகப்பற்றும், 'எனது பொருள்' எனச் சொல்லும் அகப்பற்றும் ஒருங் கறுதலே யாமெனவும் வற்புறுத்துவாராய்,

> " நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
> வாழ்வாரின் வன்கணார் இல் "

என்றும்,

> " யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான்
> வானோர்க் குயர்ந்த உலகம் புகும் "

என்றும் அருளிச் செய்வாராயினர்.

மேலும், இல்வாழ்க்கை யொன்றுமே அறமென வைத்துச் சொல்லப் படுதற்கு உரித்தாவதின்றித், துறவு வாழ்க்கை அறம் எனப்படுதற்கு உரிமை யுடைத்தன்று. ஏனெனிற், பிறவுயிரின் துயர்களைவதூஉம், மக்கள் பிறரின் துன்பந் துடைப்பதூஉம் ஆகிய செயலை உண்மையாற் செய்வாரது நல்வினையே அறம் எனப்படும்; இவ்வாறு செய்யப்படும் அறம் பழைய நாளில் முப்பத்திரண்டு வகையாகச் செய்யப்பட்டு வந்ததென்பது.

> " ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு,
> அறுசமயத் தோர்க்கு உண்டி, ஆவிற்கு வாயுறை,
> சிறைச்சோறு, ஐயந், தின்பண்டம் மகச்சோறு,
> மகப்பெறு வித்தல், மகவளர்த்தல், மகப்பால்,
> அறவைப் பிணஞ்சுடல், அறவைத் தூரியம்,
> வண்ணார், நாவிதர், வதுவையாற்றல், நோய்
> மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து,
> தலைக் கெண்ணெய், பெண் போகஞ், சுண்ணம், பிறர்துயர்,
> காத்தல், தண்ணீர்ப் பந்தர், மடந், தடம், கா,
> ஆவுரிஞ்சு நடுதறி, ஏறு விடுத்தல்
> விலை கொடுத்துக் கொலையுயிர் மீட்டல்' விலங்குணா,
> இச்செயல் முப்பத்தி ரண்டற மென்ப "

என்னும் பழைய திவாகர நிகண்டால் தெளியப்படும். இங்ஙனமாக முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் நிலை இல்லற வாழ்க்கைக்கு வாய்வதே யன்றித் துறவுக்கு வாயாது; ஆகவே, துறவினை அறம் என்னுஞ் சொல்லொடு புணர்த்துத் துறவறம் என வழங்குதலுஞ் சாலாது; அதனாலன்றே தெய்வத் தொல்காப்பியர் 'துறவறம்' என்னுஞ் சொற்றொடரைத் தமது விழுமிய முழுமுதல் நூலுள் யாண்டுமே வழங்காராயினார். மற்றுத், திருவள்ளுவரோ தமது கால வழக்கினைத் தழீஇத் 'துறவறம்' என்பதொன்று கூறினாராயினும், அவ்வியலில் இம்முப்பத்திரண் டறங்களுள் ஏதொன்றும் எடுத்துரையாது, புலாலுண்ணாமை, கள்ளாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, பொய்யாமை முதலாகச் செய்வதில்லாச் செயல்களை அறங்களாக எதிர் மறை முகத்தாற் கூறியருளினார். எனவே, அவர் கூறும் வகையிலிருந்துந் 'துறவினை' அறம் எனச் சொல்லுதற்கு ஏதும் இடம் இல்லாமை நன்கு விளங்குகின்றதன்றோ? அதுவேயு மின்றி, அவர் மனைவி மக்

களைத் துறந்து தனியிருந்து நோற்பதே தவம் என்று 'திருக்குறளில்' ஓரிடத்தாயினுங் கூறுமையினை உற்று நோக்கும் வழி, ஆசிரியர் தொல்காப்பியனார் மொழிந்தவாறே மனைவியுந் தானுமாயிருந்து அகப்பற்றுப் புறப்பற்று இன்றித் தூய அன்பின் வழி நின்று நோற்பதாகிய பண்டைத் தவநிலையே அவர்க்கும் உடம்பாடென்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இதுகாறும் அறம் என்பதைப் பற்றி ஆராய்ந்த அளவில், அஃது இல்லறம் ஒன்றற்கே உரித்தாய்க், காதலன்பின் வழி நிகழும் மனைவாழ்க்கையின் நடுவெல்லையில் நோற்கப்படுவதாகிய தவநிலையினையுந் தன் கண் அடக்கி நிற்கும் என்பதூஉம், முப்பத்திரண்டு வகையாகச் செய்யப்படும் அறங்களுள் ஏதுஞ் செய்யப்படுவதின்றி எதிர் மறை வகையாற் செயலின்றி நினைவளவில் நிற்பனவாகிய கொல்லாமை பொய்யாமை கள்ளாமை முதலிய வற்றால் நிலைப்படுவதாகிய தவ நிலையினைத் துறவறம் என்றல் ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு உடன்பாடன்றென்பதூஉம், இப்பேராசிரியர் அறிவுறுத்திய அறத்தின்வழி யொழுகியே திருவள்ளுவரும் நம் சைவசமயச் சான்றோர்களும் இறைவன் திருவருட் பேற்றினை எய்தினரென்பதூஉம், பௌத்த சமண்மத வழிநிகழும் இஞ்ஞான்றைப் போலித்துற வொழுக்கம் பல் பெருந் தீங்குகட்கும் இடனாய் நிற்றலின் அதனை யொழித்து மனைவாழ்க்கையின் பாற்பட்ட தவநிலையில் நின்று தமக்கும் பிறர்க்கும் பயன்பெற்றொழுகிச் சிவபிரான் திருவடிக்குரியராதலே நம் சைவசமயப் பெரியார் தங்கோட்பாடாமென்பதூஉம் பெறப்பட்டன.

இனி, உலக முயற்சியை விட்டுத் தவ நிலைக்கண் நிற்றல் நம்மனோர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாம். ஏனென்றால், இவ்வுலகியல் வாழ்க்கை நீடுநிற்பதன்றாய்ச் சடுதியில் எதிர்பாராதே மறைந்தொழிவதாகலானும், இனி நாம் செல்லும் மறுமை யுலகத்திற்கு இங்கே துணைவராயிருந்த மனைவி மக்கள் சுற்றத்தார் நண்பர் என்னும் எவரும் நம்மோடு உடன்வந்து துணையாய் நிற்க மாட்டுவார் அல்லராகலானும், இம்மைக்கண் நம்மை இவ் உடம்பில் வருவித்து வைத்துப் பலவகை யின்பங்களையும் நமக்கு ஊட்டி அதன் பின் நம்மை இவ்வுடம்பினின்றும் பிரித்து வேறோர் உலகத்தில் வேறோர் உடம்பிற் புகுத்துவானாகிய இறைவன் ஒருவனே இங்கும் அங்கும் எங்குந் துணையாக நிற்பானாகலானும், இப்பிறவியில் நாம் நுகர்ந்த இன்பங்கள் எல்லாம் இன்பம் இத்தன்மையதென்று நமக்கு உணர்த்தும் அவ்வளவுக்கே பயன்படுவனவன்றி வேறு துன்பக் கலப்பில்லாமல் நீள இருந்து நம்மை மகிழ்விக்க மாட்டாவாகலானும், நிலைபேறில்லாப் பொருள்கள் நிலை பேறில்லாச் சிற்றின்பத்தையே தரக்காண்டலால் நிலையான இன்பத்தைப் பெற வேண்டுவார் எல்லாரும் நிலைமாறுதலின்றி ஒரு தன்மையனாய் விளங்கும் இறைவன் பாலன்றிப் பேரின்பத்தை நுகர்தல் ஏலாமையானும் நம் ஆசிரியன்மார்,

" பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே "

(தொல்காப்பியர்) என்றும்,

" ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல
பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல
தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி
யேகம்பனே "

(பட்டினத்தடிகள்) என்றும்,

" தினைத்தனை யுள்ளதோர்
பூவினிற் றேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும்
பேசுந் தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக
ஆனந்தத் தேன் சொரியுங்
குனிப் புடையா னுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ "

(மாணிக்கவாசகர்) என்றும் அருளிச் செய்து, எல்லா வுணர்வுகளும் நமக்கு வாய்த்திருக்கும் இவ் அரிய மக்கட் பிறவியிலே நாம் ஏமாந்து இறந்தொழியாமல், நமக்கு ஒப்பற்ற துணைவனாயிருக்கும் இறைவனை இறுகப் பற்றும் படி நம்பால் வைத்த இரக்கத்தால் நமக்கு அறிவுதெருட்டி யிருக்கின்றார். இவர்தம் அருளுரைகளைக் கேளாமல், நான் என்று ஒருபொருளில்லை, என்னின் வேறான உயிர்களும் இல்லை, இறைவன் உண்டென்பதும் பொய், வருவதும் போவதும் நிற்பதுமாய உலக நிகழ்ச்சிகளெல்லாம் இயற்கையே என்று பாழ்ங் கொள்கைகளை வாய்க்கு வந்தபடி பேசி நம்மனோர் இவ் அரியவாணாளை வீணாளாக்குவார்களாயின், உண்மைக்கு மாறுபேசி இறைவனைத் துணையாகப் பற்றாமையின், இறந்தொழிந்தபின் அடங்காநாவினராகிய அவர்கள் துணையின்றி இருளுலகத்திற் சென்று பெருந்துன்பம் உழப்பர்கள். இது திருவள்ளுவநாயனார்,

" அடக்கம் அமாருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும் "

என்றமையாலும் உணரப்படும். கடவுளை நம்பாதவர்கள், கடவுளின் பெருந் துணையை நாடாதவர்கள், இறந்தபின் இருளுலகத்திற் சென்று துன்புறுகின்றார்கள் என்பதனை, அகக்கண் திறக்கப் பெற்று மறுமை யுலகங்களின் நிகழ்ச்சிகளைக் காணவல்ல ஆங்கில ஆசிரியரான ஸ்டெயிண்டன் மோசஸ் (Stainton Moses, M.A.) என்பவர் தக்கார் பலர் முன்னிலையில் ஆராய்ந்து காட்டிய மெய்யுரைகளால் இனிது விளக்கி யிருக்கின்றார்.

ஆகவே, உலகத்தியல்பையும், உயிர்களி னியல்பையும், இறைவனியல்பையும் உள்ளவாறே யுணரும் மெய்யுணர்வு வாய்த்தாலன்றி, இவற்றை யாராய்ந்து பார்த்தற்கு ஏற்ற பகுத்துணர்வு வாய்த்த மக்கள் தவத்தைச் செவ்வனே செய்து வீடுபேற்றை எய்துதல் இயலாது; இப் பிறவித் துன்பத்தை நீக்குதலும் ஆகாது. இதனாலன்றோ திருவள்ளுவர்,

" ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியதுடைத்து "

என்றும்,

" பொருள் அல்லவற்றைப் பொருளென்றுணரும்
மருளா னாம்மாணாப் பிறப்பு "

என்றும் அருளிச் செய்தார். ஆதலால், நம் முதலாசிரியராகிய தொல்காப்பியனாரும், அவர் காலந்தொட்டு வந்த நம் ஆசிரியர் மற்றையோரும் அம்மூன்று பொருள்களை ஆராய்ந்து கண்ட முடிபுகளை ஒரு சிறிது எடுத்துக்காட்டி அவ்வளவில் இவ்விரிவுரையை முடிப்பாம்.

முதலில் இவ்வுலகத்தி னியல்பு இன்னதென்பது ஆராயற்பாற்று, நம் முதலாசிரியர் தொல்காப்பியனார்,

" நிலந்தீநீர் வளிவிசும் போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலக மாதலின் "

(—மரபியல்.)

என்று கூறுதலின், நிலமும் நீருந் தீயுங் காற்றும் வானும் என்னும் ஐம்பெரும் பொருள்களின் கலவையே உலகம் என்பது பெற்றாம். பிற்காலத்திற் பௌத்தரில் ஒரு சாரார் முன் நேரத்தில் நின்ற பொருள் பின் நேரத்தில் இல்லையாம் எனவும், மற்றும் ஒரு சாரார் முயற்கொம்பும் ஆகாயத் தாமரையும் போல் அஃது இல்பொருட் டோற்றமாம் எனவும், மாயாவாத வேதாந்தத்தார் அது பிரமப் பொருளிற் றோன்றும் இல்பொருண் மாயையாமெனவும் உலகத்தின் இயல்பைப்பற்றிக் கூறும் கொள்கைகள் உண்மைக்கு மாறான கொள்கைகளா யிருத்தல் போலாது, ஐம்பெரு மெய்ப் பொருள்களின் கலவையே உலகமாம் எனக் கூறுந் தொ[illegible]



187132.

கோட்பாடு நாடோறும் உலகியலிற் பயிலும் நமது அறிவுக்கு எவ்வளவு பொருத்தமா யிருக்கின்றது ? உலகத்துப் பொருள்களெல்லாம் அடுத்தடுத்து உருமாறி வருவனவே யல்லாமல் அவை இல்லாத வெறும் பாழாதல் எஞ்ஞான்றும் இல்லையெனப் பல வியத்தகும் ஆராய்ச்சிகளால் ஆராய்ந்துரைக்கும் இஞ்ஞான்றை இயற்கைப் பொருணூலார் தம் மெய்யுரையும் இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னிருந்த தொல்காப்பியனாருண்மை யுரையும் ஒருங்கொத்து நிற்றல் பெரிதும் வியக்கற்பால தன்றோ? சைவ சித்தாந்த முதல் நூல் ஆசிரியரான மெய்கண்ட தேவர் 'உள்ளதே தோற்ற உயிர் அணையும்' என்றுதொல்காப்பியனார் கருத்தையே யொட்டிக் கூறுதலும் நினைவிற் பதிக்கற்பாற்று.

இனி, இவ்வுலகத்துள்ள உயிர்களையெல்லாம் ஓரறிவுடையன, ஈரறிவுடையன, மூவறிவுடையன, நாலறிவுடையன, ஐயறிவுடையன, ஆறறிவுடையன என்று அறுவகையாகப் பகுத்து,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப் படுத்தினரே"

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுமாற்றாற், சிற்றறிவுடைய உயிர்கள் தீவினைக்கு ஏதுவான மலத்தால் மறைப்புண்டு கிடந்து, இறைவனாற் பிறவிக்கு வருங்கால் முதலில் தொடுதலுணர்வே தோன்றுதற்கு இடந்தரும் புல்லும் மரனுமாய்ப் பிறந்தும், அதன்பிற் சிறிதறிவு விளங்கித் தொடுதலுணர்வுஞ் சுவையுணர்வும் விளங்குதற்கேற்ற நத்தை கிளிஞ்சல் முதலியனவாய்ப் பிறந்தும், அதன் பிற் சிறிதறிவு மிகுந்து அவ்விரண்டொடு மூக்குணர்வும் தோன்றுதற் கேற்ற கறையான் எறும்பு முதலியனவாய்ப் பிறந்தும், அதன் பின் மேலும் அறிவு மிக்கு அம்மூன்றொடு கண்ணறிவுந் தோன்றற் கேற்ற நண்டு தும்பி முதலியனவாய்ப் பிறந்தும், அதன் பின் இன்னும் அறிவு மிகுந்து அவற்றொடு செவியறிவும் புலனாதற் கேற்ற விலங்குகளும் மாக்களுமாய்ப் பிறந்தும், அதன் பின் அறிவு விளக்கம் மிக விரிதலின் அவ்வைந்துடன் மனவறிவும் விளங்குதற்கேற்ற ஆறறிவுடைய மக்களாய்ப் பிறந்தும், இங்ஙனம் மலந் தேயும் நிலைக்குத் தகச் சிற்றுயிர்கள் முறை முறையே அறிவிலும் பிறவியிலும் மேலேறி வருதல் தெளியப்படும். இங்ஙனமே மாணிக்கவாசகப் பெருமானும்,

" புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன்எம்
[பெருமான் "

என்று கூறுதல் காண்க. எனவே மலந் தேயும் அளவுக் கேற்ப மேன்மேற் பிறவியிற் சேருமென்பதும், அதனால் ஓருயிர்க்குப் பல பிறவிகள் உளவாமென்பதூஉம் பிறவிகடோறும் ஈட்டப்படும் வினைகளே மேன்மேற் பிறவிகளை எடுத்தற்கு ஏதுவாமென்பதூஉம் ஆசிரியர்தொல்காப்பியனார்க்குக் கருத்தாதல் போலவே, திருவள்ளுவனார்க்குஞ் சைவ சமயாசிரியர், சந்தானாசிரியர்க்குங் கருத்தாதல் காணப்படும். பிறவிகள் பல உளவாதலும், உயிர்கள் அப்பிறவிகளில் மாறி மாறிச் செல்லுதலும், அப்பிறவிக்கு ஏதுவான இருவினைகளும் அவ்வினைக் கேதுவான ஆணவ மலமும் பழைய ஆரிய நூலாகிய இருக்கு வேதத்திற் காணப்படாமையின், இக்கோட்பாடுகளெல்லாம் நம் பண்டைத் தமிழ் மக்கள் இறைவன் திருவருளுதவிகொண்டு தாமாகவே கண்டறிந்தன வாகுமென்பதை யுணர்ந்து அத்தமிழாசிரியர் வழிவந்த நாம் பெரிதும் மகிழக் கடவேமாக.



இவ்வாறு பிறவிகடோறுஞ் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப் பெறுஞ் சிற்றுயிர்கள் போலாது இயல்பாகவே விளங்கப்பெறும் பேறறிவுடையனாகிய இறைவன் ஒருவன், இவ்வுயிர்களின் வேறாய் உளன் என்பதூஉம், அவன் அவ்வாறுஇயல்பாகவே விளங்கிய அறிவினனாய் நிற்பது உயிர்களின் வினைக்கு ஏதுவாகிய மலத்தாற் பற்றப்படானாய் அவன் பெருந் தூய்மையும் நுட்பமும் உடையனாய் இருத்தலே காரணமாம் என்பதூஉம் தெற்றென விளங்க ஆசிரியர் தோல்காப்பியனார்,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்"

என்று அருளிச் செய்தமை பெரிதும் நினைவிற் பதிக்கற்பாற்று. சிற்றுயிர்களும் இறைவனும் ஒன்றே என்றும், அதுவுமன்று இறைவன் ஒருவனே குடங்கடோறுங் காணப்படும் திங்களின் சாயல்போல் உடம்புகடோறும் உயிர்களாய்க் காணப்படுகின்றனன் என்றும், அதுவும் பொருந்தாது நெருப்பினின்று பொறிகள் தெறித்தாற்போல் இறைவனிலிருந்தே சிற்றுயிர்கள் உண்டாயின வென்றும், அதுவும் பொருத்தமின்று ஒன்றுமில்லாவெறும் பாழே உயிரும் இறைவனுமாமென்றும்,பிற்காலத்தாரிற் சமயத்தார் பற்பலரும் இறைவனியல்பையும் உயிரின் இயல்பையும், உலக வழக்கொடும் ஆன்றோர் வழக்கொடும் ஒட்டி வரையறுத்துணர மாட்டாது பெரிது மயங்கிக் கூக்குரலிட்டுத் தம்மிலே கலாம் விளைத்து நிற்ப, இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னரேயே உயிரின் தன்மையும் இறைவன் தன்மையும் இத்துணைப் பொருத்தமாக வரையறுத்து நமக்கு அறிவு விளக்கிய ஆசிரியர் தொல்காப்பியனார் தம் அலகியகன்ற அறிவின் திறத்தை எங்ஙனம் புகழவல்லேம் ! நமக்கு அவற்றை நன்கு விளங்க வைத்து அவர் நமக்குச் செய்யாமற் செய்த பேருதவிக்கு எங்ஙனம் அவர்க்கு நன்றி செலுத்தவல்லேம். தொல்காப்பியனார் கூறியவாறே திருவள்ளுவரும் இறைவனை "வாலறிவன்" அதாவது விளங்கிய அல்லது தூய அறிவினன் என்று கூறுதலும் நினைவு கூரற்பாற்று. இனி இச்சூத்திரத்தில் இறைவன் மக்களுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்தற் பொருட்டு அவர் மேற்சென்ற அருளிரக்கத்தால் முதல் நூல் அருளிச் செய்தானென்று ஆசிரியர் உரைத்ததால் இறைவன் பேரிரக்க முடையவன் என்பதூஉம், அவன் முற்காலத்தே தெய்வத்தமிழ் மொழியின்கண் முதல்நூல் அருளிச் செய்தானென்பதூஉம் இனிது பெறப்படும். இங்ஙனம் இறைவன் தமிழ்மொழியில் முதல் நூல் அருளிச் செய்தமையாலன்றோ மற்றை மக்கள் பிரிவினரெல்லாம் முப்பொருளுண்மை அறியாராய் மயங்கி நிற்பத் தமிழ் மக்கள் மட்டும் பண்டு தொட்டு இன்றுகாறும் அவ்வுண்மைகளைத் தெளிய அறிந்து தலைசிறந்து நிற்கின்றார். இங்ஙனம் பண்டை நாளில் இறைவன் தமிழின்கண் முதல் நூல் அருளிச் செய்து அறம் பொருள் இன்ப வீட்டின் இயல்புகளை விளக்கினமை,

" அருந்தவர்க்கு ஆலின்கீழ்
அறமுதலா நான்கினையும்
இருந்தவர்க்கு அருளுமது
எனக்கறிய இயம்பேடீ
அருந்தவர்க்கு அறமுதல்நான்கு
அன்றருளிச் செய்திலனேற்
இருந்தவர்க்கு உலகியற்கை
தெரியாகாண் சாழலோ"

என்று மாணிக்க வாசகப் பெருமானும்,ஏனைச் சைவசமயாசிரியருங் கூறுமாற்றாற் செவ்வனே புலனாம். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனையும் உணர்த்துதல் பற்றி இறைவன் அருளிச் செய்த தமிழ் நூல் நான்மறை எனவும் வழங்கப்படலாயிற்று.

இனி, இத்துணை இரக்கமுடையோனாகிய இறைவன் சிற்றுயிர்களாகிய நமக்கு அணுக்கனாய் நின்று நாம்

செய்யும் வழிபாடுகளே என்று கொள்ளும் உண்மை,

" கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்னும் சூத்திரத்தால் நம் தெய்வ முதலாசிரியர் தொல்காப்பியனார் நன்கு விளக்கியிருக்கின்றார். அதன் நுட்பமும், இறைவன் ஒருவனே முருகன், பிள்ளையார், திருமால், சிவபிரான் என நிற்றலும் இவைபற்றி எழுந்த புராணக் கதைகளுட் பொருந்துவன பொருந்தாதனவும் "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்" என்னும் எமது விரிந்த நூலிலும், இப்போது யாம் வெளியிட்டிருக்கும் "கடவுளுக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா" என்னும் எமது நூலிலும் கண்டு கொள்க. அவையெல்லாம் இப்போது விரிக்கிற் பெருகும். இதுகாறும் விளக்கியது கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னமே நம் முதலாசிரியர் தொல்காப்பியனார் அறிவுறுத்திய விழுமிய கொள்கைகளே நம் சைவசமயக் கோட்பாடுகளாய் இன்றுகாறும் நிலவி வருதல் தெற்றென விளங்கா நிற்கும். ஓம் சிவம்.

---

# சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர்

இம்மகாநாடு மிகச்சிறப்பாக திருப்பாதிரிப் புலியூரில் சுக்கிலவருஷ வைகாசிமீ௳ முதல் (16-5-1929) ஆறு நாட்கள் வரை நடைபெற்றது. அன்பு, அறிவு, ஒழுக்கம் [illegible] தகித்தார் [illegible] நற்செய்கைகட்கும் உறைவிடமாகவும் சைவ மடாதிபதிகட்கோ ரணிகலமாகவும் விளங்கும் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் இம்மகாநாட்டை உடனிருந்து நடத்தி வைத்தார்கள். இவ்விரு பெரியார்களின் திரு முன்பும், சைவ சமயத்திலும் அறிவு நூலாராய்ச்சியிலும் மிகச் சிறந்தவர்களென அறிஞர்களாற் போற்றப்படும் பல பேறிஞர்கள் முன்பும் நடந்த இம்மகாநாட்டின் நடைமுறை, நடவடிக்கைகள், தீர்மானங்கள், சொற்பொழிவுகள் முதலிய எவற்றையும் அறிவுடைய எவரும் குறைகூற இயலாது. திருநெல்வேலியில் நடந்த சைவப்பெரியார் தனிக்கூட்டத்தைவிட அதிகமாக இம்மகாநாட்டுக்கு மிக்க ஆர்வத்தோடும் நிரப்பிய சைவப்பற்றோடும் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஏனைய ஜில்லாக்களைவிட திருநெல்வேலி ஜில்லாவிலிருந்தும் சென்னைமா நகரத்திலிருந்தும் வந்த பிரதிநிதிகளின் எண் அதிகமாயிருந்தது. அவர்கள் வருகை சமயசீர்திருத்தம் இன்றியமையாத பழங்கோட்பாடுகட்கு மாறுபடாத வகையிலேயே நடைபெற வேண்டுமென்பதை அறிவுறுத்துவதாயிற்று. தீர்மானங்களும் அவ்வுயரிய முறையிலேயே செவ்வையாக நிறைவேறின.

முதல் நாள் (16-5-19[illegible] [illegible] யார் [illegible] பல [illegible] படலே [illegible] சென்று விதிப்படி வந்தனை வழிபாடு திருமுறையோதல் முதலியன செய்தனர். மாலை 8 மணிக்கு மீண்டும் மடத்துக்கு வந்தவுடன் சைவ சித்தாந்த மகா சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் சமாஜ அமைப்பு, விதிகள் இவைகளை ஆராய்ந்து புதுப்பிக்க திருவாளர்கள் கா. சுப்பிரமணியம் பிள்ளை, மா. வே. நெல்லையப்பபிள்ளை, ச. சச்சிதானந்தம் பிள்ளை ஆகிய மூவர் உட்கழக மாகவும் "அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை" என்பது பற்றி வந்துள்ள ஒன்பது கட்டுரைகளையும் ஆராய்ந்து சிறந்தது எது வெனத்தெரிவிக்க திருவாளர்கள் கா. சுப்பிரமணியம் பிள்ளை, ச. சச்சிதானந்தம்பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய மூவர் உட்கழகத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். பின்னர் கூட்டம் கலைந்தது.

இரண்டாம் நாள் (17-5-1929) காலை 8 மணிக்கு தலைவர் பல அன்பர்கள் புடைசூழ வாத்திய கோஷத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் காலை 9 மணிக்கு மகாநாடு தொடங்கிற்று.



திருவாளர்கள் மா. வே. நெல்லையப்ப பிள்ளை, கா. சுப்பிரமணியம் பிள்ளை, சுவாமி சிவநேசர், கே. ஆறுமுகம் பிள்ளை, ச. சச்சிதானந்தம் பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. வி. உலகநாத முதலியார், வேங்கடராமையர், கிருஷ்ணசாமி பாவலர், ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய இவர்கள் முன் மொழி, பின்மொழி, ஆதரவு மொழிகள் கூறித் தலைவரின்கல்வி, ஆற்றல், தகுதி முதலியவற்றை விளக்கிய பின்னர் உயர் திரு மறைமலையடிகள் தலைமை வகித்தார்கள். பின்னர் வரவேற்புக் கழகத்தின் சார்பாக திரு வை. கந்தசாமி முதலியார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். வரவேற்புத் தலைவர் தரும பூஷணம் திவான் பகதூர் தீ. நா. முத்தையா செட்டியார் தலைவருக்கும் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகட்கும் அழகிய பூமாலைகள் அணிவித்தார்.

பின்னர் உயர்திரு மறைமலையடிகள் ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் சிந்தைக்கினிய தமது பேருரையை நிகழ்த்தினார்கள். அதன் விரிவு 'நவசக்தி' அநுபந்தமாக அச்சிடப்பட்டு அங்கு ஓரணாவுக்கு விற்கப்பட்டது. பகல் ஒரு மணிக்கு காலைக்கூட்டம் முற்றுப்பெற்றது.

அன்று மாலை ஐந்துமணிக்கு மீண்டும் மகா[illegible] வேங்கடசாமி நாட்டார் [illegible] நாடு கூடியது. திருவாள[illegible] முதலியார், பா. ரா. பரமசிவ முதலியார் இளவழகனார். மா.வே. நெல்லையப்ப பிள்ளை ஆகிய இவர்கள் முறையே "பறையின் வரலாறு" "சமயவாழ்வும் ஜாதிவித்தியாசமும்", "சைவமும் தமிழும்", "சிவ வழிபாடு" என்பனபற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்னர் இரண்டாம் நாள் மாலைக் கூட்டம் கலைந்தது.

மூன்றாம் நாள் காலை (18-5-1929) 8½ மணிக்கு ஸ்ரீபாடலேசுவரர் தரும பாடசாலையில் மீண்டும் மகாநாடு தொடங்கிற்று. முந்திய நாள்நடந்த சொற்பொழிவுகளைப்பற்றித் தலைவர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். பிறகு திருநெல்வேலியில் செப்பஞ் செய்யப் பெற்ற தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன. முதல் ஐந்து தீர்மானங்கள் மகா நாடுகளில் வாக்குரிமை செலுத்தி அப்போதைக் கப்போது மாற்றுந் தகுதியுடையவைக ளல்லவென்றும் அவைகளைச் சைவசமயத்தின் அடிப்படையான உண்மைகளாகவே கொள்ளுதல் முறையாகு மென்றும் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும், திரு ச. சச்சிதானந்தம் பிள்ளையும் தலைவருக்கு நினைவூட்டினார்கள். இதை ஒப்புக்கொண்டு தலைவரும் மிக விரிவாக அவையினருக்கு அதனை எடுத்து விளக்கினார்கள். தலைவர் விளக்க வுரையைக் கேட்ட பிரதிநிதிகள் அனைவரும் இவைகளை உண்மைக ளென்றே கொள்ளுவது முறை யென்று ஒப்புக் கொண்டனர். பிறகு முதல் இரண்டு தீர்மானங்கள் மாறுபாடின்றி உண்மைகளாக அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றன. மூன்றாவது தீர்மானத்தில் 'கோட்பாடாகும், அநுட்டானமாகும்' என்ற சொற்களின் முன்பு "இன்றியமையாத" என்ற சொல் சேர்க்கப்பட வேண்டு மென்ற திருத்தத்தைப் பற்றிநிரம்பவாதம்நிகழ்ந்தது. இறுதியில்தலைவர் அரியவிளக்கவுரை செய்தருளினார்கள். அத்திருத்தத்தோடு மூன்றாவது தீர்மானமும் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது. நான்காவது தீர்மானம் ஆலோசனைக்கு வந்த போது "மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும்" என்பதில் மாறுபடாத என்பதற்குப்பதிலாக ஒத்த அல்லது அரண் செய்யும் என்று இருத்தல் வேண்டுமென திரு. வி. கலியாணசுந்தர முதலியார் பேசினர். திருநெல்வேலி வைதிக சைவ சம்மேளனத்தார் அச்சிட்டு வழங்கிய கருத்துக்களும் ஏனைய பல பேறிஞர்கள் கருத்துக்களும் செவ்வனே ஆராயப்பெற்றன. ஒத்த, அரண் செய்யும் என்ற சொற்களைவிட மாறுபடாத [illegible] என்ற சொல் [illegible] றும் வேதசிவாகமங்களில் அதிகமான பகுதிகளைத் தழுவும் தகுதியுடைய தென்றும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை முதலியோர் விளக்கிய பின்னர் 'மாறுபடாத' என்ற சொல்லோடேயே யாதொரு திருத்தமுமின்றி இத்தீர்மானம் அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது. பின்னர் ஐந்தாவது தீர்மானமும் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வைந்து தீர்மானங்களும் சைவசமய உண்மைகளென்றும் சீர்திருத்தமுறை, வகை முதலியவற்றைப் பற்றிய தீர்மானங்கள் போன்றன வல்ல வென்றும் இவ்வுண்மைகள் ஒவ்வொரு மகாநாட்டிலும் வாக்குரிமைக்கு விடப்பட்டு பெரும்பான்மையோரால் மாற்ற, தள்ளத்தகுந்தவைகள் அல்லவென்றும் எக்காலத்தும் எல்லாச் சைவர்களாலும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மைகளேயென்றும் இம்மகாநாட்டினர் ஏகமனதுடன் தீர்மானித்தனர். பிறகு காலைக்கூட்டம் முடிந்தது.

மாலை 5 மணிக்குச் சிவஞானப் பந்தரில் மீண்டும் மகாநாடு கூடிற்று. திருவாளர்கள் குளித்தலை அரங்கசாமி ஐயர், கா. சுப்பிர

மணியம் பிள்ளை, க. சிவகுருநாதம் பிள்ளை, ரா. பதுமனாபப் பிள்ளை, பொ. சொக்கலிங்கனார் ஆகிய இவர்கள் முறையே "சைவ சித்தாந்திகள் கடவுட் கோட்பாடு (ஆங்கிலத்தில்), "சிவாகமங்கள்", "சைவம் முக்காலத்துக்கும் உரியது", "ஐந்தாம் திருமுறையும் அப்பர் அருள் மொழியும்", "ஆருயிர்ப்பணி" என்பனபற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்னர் கூட்டம் கலைந்தது.

நான்காம்நாள் (19-1929) காலை 9மணிக்கு மீண்டும் மகாநாடு கூடிற்று. முந்திய நாள் சொற்பொழிவுகளைப்பற்றிய தமது கருத்துக்களைத் தலைவர் விளக்கிய பின்னர் தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன. 6,8,9, 10, 11வது தீர்மானங்கள் யாதொரு திருத்தமுமின்றி நிறைவேறின. 9-வது தீர்மானம் ஆலோசனைக்கு வரும்போது திரு. பொ. முத்தையா பிள்ளையவர்கள் "பொருத்தமற்ற தீர்மானங்கள்" என்ற தலைப்பின் கீழ் "சித்தாந்தம்" மேமீ இதழில் வெளியிட்டுள்ள கருத்துக்களை நன்றாய் ஆலோசித்து முடிவு செய்யவேண்டு மென்றும் அக்கருத்துக்களை வேறு சில பேறிஞர்களும் தெரிவித்திருப்பதாகவும் காரியதரிசி நினைவூட்டினார். அவைகளையெல்லாம் [illegible] 8-வது தீர்மானத்தை யாதொரு மாறுபாடுமின்றி அனைவரும் ஏகமனதுடன் நிறைவேற்றினர். 7-வது தீர்மானத்தில் பாதுகாப்பதிலும் என்ற சொல்லின் பின்னர் "அக்கொள்கையுடையராய்" என்ற சொற்றொடர் சேர்க்கப்பபட்டு அத்தீர்மானம் நிறைவேறிற்று. சைவ சமய வளர்ச்சிக்குரிய வழிகளைச் சொல்லும் 12-வது தீர்மானம், தெளிவுக்கான சில சொல் மாறுதல்களுடன் நிறைவேறிற்று.

இதன் பின்னர் தலைவரிடம் விடை பெற்று திரு. சீகாழி சுவாமிநாத செட்டியார் "நமது சமய குரவர்களையும் நாயன்மார்களையும் பல்வேறு வழிகளிலும் தூற்றி வரும் வகுப்பினரால் நடத்தப்படும் பத்திரிகைகளையும் இயக்கத்தையும் சைவ சமயிகள் எவ்வகையிலும் ஆதரித்தலாகாது" என்ற தீர்மானத்தைப் பிரேரிக்க திரு. அண்ணாமலைப் பிள்ளை ஆமோதிக்க பலத்த விவாதம் ஏற்பட்டது. அத்தீர்மானத்தில் அரசியல்கட்சி இடம் பெற்றிருப்பதாக ஓர் ஐயம் பிறந்தது. அவ்வையப்பாடு சிலரால் களையப்பட்டது. அவ்வேளையில் திரு. டி. நல்லசிவன் பிள்ளை எழுந்து "திராவிடன்" பத்திரிகையில் வெளியாகும் நாஸ்திகப் பிரசாரம் ஜஸ்டிஸ் கட்சிக் குடன்பாடல்லவென்றும் வேறு யாராவது அப்பத்திரிகையை ஏற்று நடத்த முன்வந்தால் உடனே மூன்றுமாத நோட்டீசு கொடுத்து அப்பத்திரிகையைநடத்த முன் வருவோரிடம்தாம் ஒப்புவிக்கக்கூடுமென்றும் தெரிவித்தனர். உடனே சில நண்பர்கள் அவ்வாறு நடத்துவதாக முன்வந்தனர். பிறகு திரு. டி. நல்லசிவன் பிள்ளை அப்படி ஏற்று நடத்துபவர் பத்திரிகை மூலம் எவ்வித சமயப் பிரசாரமும் செய்வதில்லையென்று உறுதிகூற வேண்டுமென்றனர். இதற்கு அந்த நண்பர்கள் நாஸ்திகப் பிரசாரம் செய்ய இடங்கொடுக்கும் ஜஸ்டிஸ் கட்சியினர், என்றும் பழமையாகவுள்ள ஆஸ்திகப் பிரசாரம் கூடாதென்று சொல்வதேன் என்று அவரை வினவினார்கள். அதற்குத் தகுந்த பதில் ஒன்றுங்கூற அவரால் முடியவில்லை. இதுபோன்ற பல வகை விவாதங்கள் நிகழ்ந்த பின்னர் மகாநாட்டினர் அனைவராலும் இத்தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேற்றப்பெற்றது. இதோடு பகல் 1-30 மணிக்குச் சபை கலைந்தது.

மாலை 5-30 மணிக்கு மீண்டும் சபை கூடிற்று. திரண்டு வந்த பெருங்கூட்டத்துக்கு "சிவஞானப் பந்தரில்" இடம் போதாமையால் பாடசாலையின் பின்புறத்தில் மரத்தடியில் காற்றோட்டம் நிரம்பிய வெளியில் சொற்பொழிவுகள் நடந்தன. திருவாளர்கள் கெ. ஆறுமுகம் பிள்ளை, திரு. வி. கலியாண சுந்தர முதலியார், க. வஜ்ரவேல் முதலியார் ஆகிய இவர்கள் முறையே "திருநெறித் தொண்டு", "திருஞான சம்பந்தர்", "உருவ வழிபாடு" என்பன பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இவற்றுள் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் 2½ மணிநேரம் பேசித் திருஞான சம்பந்தரைப் பற்றித் தற்காலத்தில் வெளிவரும் கருத்துக்களையெல்லாம் நன்காராய்ந்து உண்மையை நிலை நாட்டிய பின்னர் தலைவரவர்கள் மனமுவந்து திரு. முதலியாரவர்களை ஒரு தெய்வமாகவே கருதுவதாக உழுவலன்புடன் கூறினார்கள். இரவு 9½ மணிக்குச் சபை கலைந்தது.

ஐந்தாம்நாள் (20-5-1929) காலை 9 மணிக்கு மீண்டும் பாடசாலையில் மகாநாடுகூடிற்று. 13, 15-20 தீர்மானங்கள் சில மாறுதல்களுடன் நிறைவேறின. 14-வது தீர்மானத்திற் கண்ட கழகத்தினர், எழுத்து மூலம் அறிக்கை செய்ததோடு பொதுவாக பிரணவ, பஞ்சாக்ஷர, பீஜமந்திரங்களைத் தவிர ஏனையவற்றைத் திருமுறை வாக்கியங்களின் துணைகொண்டு தமிழாக்கி விடுவது உசிதமென்றும் தீக்ஷை முதலிய சடங்குகளைக் கூடியவரையில் சுருக்கிக் கொள்ளத்தக்க பகுதிகளைச் சுருக்கிச் செய்வது உசிதமென்றும் தெரிவித்தார்கள். இது பற்றி ஆலோசனை நிகழ்ந்த பின்னர் தலைவரவர்களால் எழுதப்பட்ட தீர்மானம் நிறைவேறிற்று. பிறகு சைவ சபைகளில் வாக்குரிமையுடைய அங்கத்தினராகும் தகுதியுடைய சைவர் யார் என்பதை திட்டப்படுத்த ஒரு தீர்மானமும், ஆதிதிராவிடர் முன்னேற்றத்துக்காகச் சைவ சபைகள் உழைக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றுக்கொடுப்பதற்குக் கல்லூரிகளில் பி. ஏ. பரீக்ஷையில் ஆறுவது பிரிவில் பட்டம்பெற்ற ஒருவருக்கே சிறப்பாக வேலை தரவேண்டுமென்ற தீர்மானித்துள்ளதைக் கண்டித்து ஒரு தீர்மானமும், சைவர்கள் சைவப் பஞ்சாங்கத்தை யனுட்டிக்க வேண்டுமென்றொரு தீர்மானமும், கிரியைகளைச் சிவதீக்கை பெற்று சமய உணர்ச்சியுடையவர்களைக் கொண்டே செய்தல் வேண்டுமென்றொரு தீர்மானமும், சந்தான குரவர்நன் நால்வர் திருவுருவங்களைத் திருக்கோயில்களில் வைத்து வழிபட வேண்டுமென்றொரு தீர்மானமும் நிறைவேறின. இவற்றுள் சிறப்பாகப் பல்கலைக் கழகம்பற்றிய தீர்மானம் திருவாளர்கள் கா. சுப்பிரமணியம் பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலியோரால் நன்கு விளக்கப்பட்டது. 13(4)வது தீர்மானம் ஆலோசனைக்கு வரும்போது திரு. பொ. முத்தையா பிள்ளையவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் மகாநாட்டினருக்குக் காரியதரிசியால் நினைவூட்டப் பட்டன. 13 (14)வது தீர்மானத்தில் இறுதியில் 13 (15)வது பகுதியாகத் தமிழ் வேதபாராயணம் உத்ஸவ காலங்களில் இறைவன் திருமுன்பே நடத்தல் வேண்டுமென்றொரு தீர்மானமும் நிறைவேறிற்று. பின்னர் சுமார் பகல் 1½ மணிக்குச் சபை கலைந்தது.

மாலை 4-30 மணிக்குச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நடைபெற்றது. முதல் நாள் தெரிந்தெடுக்கப்பட்ட கழகத்தினர் கருத்துக்களை திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளையவர்கள் தெரிவித்தார்கள். திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். சமாஜ அமைப்பு, விதிகளில் நிறை வேறியமுக்கிய மாறுதல்கள் கீழ் வருவன:—

(1) மகாநாட்டின் தீர்மானப்படி மகாநாட்டில் நிறைவேறிய உண்மைகளை ஒப்புக்கொள்ளும் சைவர்களே சமாஜத்தில் வாக்குரிமையுடைய அங்கத்தவராவார்கள் என்பது.

(2) பணியாளர்கழகம் (Working Committee) என்று ஒன்பதின்மர் கூடிய ஒரு கழகம் பத்திராசிரியக் கழக மாகவும் சமாஜம் ஏனைய சபைகளோடு கூடிச் செய்ய வேண்டிய வேலைகளைத் திட்டப்படுத்தும் கழகமாகவும் அமைய வேண்டுமென்பது.

(3) எல்லாச் சைவ சபைகளும் தங்கள் சொத்து முதலியவைகளிலுள்ள உரிமைகளை எவ்வகையிலும் இழக்காது சமாஜத்தோடு இணைக்கப்படவேண்டும், ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் மூன்றுக்குக் குறையாமல் சமாஜத்துக்கு உதவி புரிய வேண்டுமென்பன.

(4) சிறிய திருத்தங்கள் சில விதிகளில் நிறைவேறின (சமாஜ அமைப்பும் விதிகளும் விரைவில் தனிப்புத்தகமாக அச்சிடப்படும்.)

(5) பணியாளர் கழகத்தினராக திருவாளர்கள் மா. வே. நெல்லையப்பபிள்ளை, கெ. ஆறுமுகம் பிள்ளை, த. வே. உமா மஹேஸ்வரம் பிள்ளை, ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. உலகநாதமுதலியார், அ. சோமசுந்தரஞ் செட்டியார், கி. குப்புச்சாமிமுதலியார், ந. மு. வேங்கடசாமிநாட்டார். ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய ஒன்பதின்மர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதோடு இக்கூட்டம் கலைந்தது.

பிறகு மாலை 5-30மணிக்கு மீண்டும்மகாநாடு கூடிற்று. திருவாளர்கள் பு. சி. புன்னைவனநாத முதலியார், நாகை திருநாவுக்கரசு, நாகை திரிபுரசுந்தரியம்மை, ந.மு.வேங்கடசாமிநாட்டார் அவர்கள் முறையே "குமரகுருபரசுவாமிகள்", "மணிவாசகரும் திருவாசகமும்", "Our women's attitude towards religion" (ஆங்கிலத்தில்), "சமய குரவர்கள் காட்டிய செந்நெறி" என்பனபற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இரண்டாவது மூன்றாவது சொற்பொழிவுகட்கு மட்டும் உயர் திரு. ஞானியார் சுவாமிகள் தலைவரின் வேண்டுகோட் கிணங்கி தலைமை வகித்துத் தமது முடிபுரைவாயிலாக அவையினரை மகிழ்வித்தார்கள். இரவு 9½ மணிக்குச் சபை கலைந்தது.

ஆறாவது நாள் (21-5-1929) காலை 7-மணிக்கு மகாநாட்டுப் பிரதிநிதிகளின் புகைப்படம் எடுக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடத்தில் சுவாமிகள் தலைமையிலேயே திருவாளர்கள் ச. முத்துக்குமாரசாமிப் பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார் ஆகிய இவர்கள் முறையே "கந்தபுராணமும்

வேள்வியும்", "பிறவிப்பயன்" என்பன பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இவைகட்கு உயர் திரு ஞானியார் சுவாமிகள் தலைமையிலிருந்து முடிபுரை கூறினார்கள். பிறகு காலை 10 மணிக்கு மகாநாடு மீண்டும் கூடிற்று. திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை "நமது முன்னணிவேலை" என்பது பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்தலில் முதன்மையாக நின்ற திரு. மு. வரதராஜன் என்பாருக்குத் தங்கப்பதக்கம் ஒன்று பரிசளிக்கப் பட்டது. பிறகு திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை "தமிழ்மக்கள் வானநூலும் சிவ விரதங்களும்" என்பது பற்றியும் உயர் திரு சிவானந்த சிவாசாரிய சுவாமிகள் "சத்தியும் சிவமும்" என்பது பற்றியும் திரு. அ. மு. சரவண முதலியார் "பெரிய புராணம்" என்பது பற்றியும் அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

பிறகு "அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை" என்பது பற்றி கிடைத்த ஒன்பது கட்டுரைகளுள் மிகச் சிறந்தது திரு. அ. மு. சரவண முதலியார் எழுதியது என பரிசீலனைக் கழகத்தினர் தெரிவித்தனர், அவர்கள் முடிபை ஒப்புக்கொண்டு உயர்திரு. ஞானியார் சுவாமிகள் கொடுக்க வாங்கித் தலைவரவர்கள் திரு. அ. மு. சரவண முதலியாருக்கு நூறு ரூபாய் பரிசளித்தார்கள். (இப்பரிசுக் கட்டுரை சித்தாந்தத்தில் பின்னர் வெளிவரும்.)

பிறகு தலைவர் தமது முடிபுரையில் நன்றி முதலியன கூறி இம்மகாநாடு செவ்வனே நடைபெற்றதற்காக இறைவனை வழுத்தினார். பிறகு தலைவர், உயர் திரு ஞானியார் சுவாமிகள், வரவேற்புக்கழகத்தலைவர் திவான் பகதூர் தரும பூஷணம் தீ. நா. முத்தையா செட்டியார், ஷை கழக உறுப்பினர், தேவாரம் ஓதிய ஓதுவார் மூர்த்திகள், சொற்பொழிவாளர்கள், மகாநாட்டுப் பிரதிநிதிகள், இடம் உதவிய அன்பர்கள், தொண்டர்படை யன்பர்கள் முதலிய அனைவருக்கும் காரியதரிசி நன்றி கூறினார். பிறகு தலைவர், சொற்பொழிவாளர்கள் முதலியவர்கட்கு மாலைமரியாதைகள் நடந்தன. பிறகு திருவாளர்கள் கி. குப்புச்சாமி முதலியாரும், நடேசனாரும் காரியதரிசிக்கும் பிரதிநிதிகட்கும் நன்றி கூறினார்கள். பிறகு கடவுள் வாழ்த்தொலி முழக்கத்தோடு இம்மகாநாடு இறைவன் இன்னருளால் இனிது முற்றுப்பெற்றது.

இம்மகாநாடு செவ்வனே நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் உதவிகளையும் மிகச் சிறப்பாகச் செய்து வைத்த உயர் திரு ஞானியார் சுவாமிகளவர்கட்கும் அவர்கள் சீடர்களனைவருக்கும் இம்மகாநாடு நன்றி செலுத்தும் கடமையுடையது.

இம்மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக வந்தவர்கள் சைவ சபைகளின் சிபார்சுச் சீட்டு பெற்று என்னிடம் வாக்குரிமைச் சீட்டு வாங்கினவர்களே. அத்தகைய சிபார்சுச் சீட்டு தமக்குக் கிடைக்கவில்லை யென்றும் தாம் மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக வரும் பேரவாவுடையவரென்றும் மகாநாட்டில் "சைவ உணவும் உடையும்" என்றொரு சொற்பொழிவும் செய்ய விருப்பமுடையவரென்றும் திரு. பொ. திரிகூடசுந்தரம்பிள்ளை பல கடிதங்கள் மூலம் எனக்குத் தெரிவித்தார். சிபார்சுச் சீட்டில்லாவிடில் தலைவருக்கு அறிவித்து அவர் விடைபெற்றால் வாக்குரிமைச் சீட்டு தருவதாக நான் தெரிவித்ததோடு தலைவருக்கும் இவ்விஷயத்தைத் தெரிவித்தேன். திரு. திரிகூட சுந்தரம்பிள்ளை தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகவும் தலைவர் உத்தரவின்றி சொற்பொழிவு, பேச்சு, குறுக்குப் பேச்சு முதலியன நிகழ்த்துவதில்லை யென்றும் உறுதி கூறினால் வாக்குரிமைச் சீட்டு பெறலாம் என்று தலைவர் அறிவித்தனர். திரு. திரிகூடசுந்தரம்பிள்ளை அவ்வாறு உறுதிமொழி கொடுக்க மறுத்தனர். வாக்குரிமைச் சீட்டு பெறுவிடினும் "சைவ உணவும்உடையும்" என்பதுபற்றிச்சொற்பொழிவு செய்வதற்காவது தலைவர் அனுமதியை வாங்கித் தருகிறேன் என்று கூறியதற்கு அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். வாக்குரிமைச் சீட்டு வாங்கும் விஷயத்தில் நான் தலைவரை அடுத்தது தவறென்று அவர் எனக்குச் சொல்லிவிட்டுச் சென்றார். அவர் அவ்வாறு கூறியதே தவறு என்பது வெளிப்படை.

தாங்களே உண்மைச் சைவர்கள் என்று கூறும் சுயமரியாதை இயக்கத்தினர்கட்குச் சிறப்பான அழைப்பு அனுப்பப் பட்டிருந்த போதிலும் அவர்கள் மகாநாட்டுக்கு வரவில்லை. அவர்களிற் சிலர் சைவ சித்தாந்த சபை, ஈரோடு என்றொரு புதிய சபை கண்டு அச்சபையின் சிபார்சுச் சீட்டனுப்பினார்கள். அடுத்த நாள் தாங்கள் கொண்டு வரப் போகும் தீர்மானங்களையும் எழுதியனுப்புவதாகத் தெரிவித்தார்கள். தீர்மானங்களும் வந்தில; அவர்களும் வந்திலர். அவர்களுட் சிலர் செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானத்தை யொட்டி சமயக்குறி, சாதிப்பட்டங்களைத் துறந்த பெரியார்கள். ஆனால் எனக்கு எழுதிய கடிதங்களில சாதிப் பட்டங்களை மீண்டும் மேற்கொண்டனர். இந்த மர்மத்தைப் பகுத்தறிவுள்ள அவர்களே விளக்கும் தகுதியுடையவர்கள்.



சுயமரியாதை இயக்கத் தலைவர்கட்கெல்லாம் திருநெல்வேலிக் கூட்டத்துக்கும் இம் மகாநாட்டுக்கும் அழைப்பு அனுப்பியும் அவர்கள் வாராதது அறிஞர் கூட்டத்தைக்கண்டு, அவர்கள் அஞ்சுவதையே குறிக்கின்றது. "சாமி சிதம்பரனார்" என்பவர் வாக்குரிமைச்சீட்டு தருவதானால் தாங்களெல்லாம் வருவதாக "சித்தாந்தத்தின் பித்தப்பேச்சு" என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். ஆயின், ஏன் அவர்கள் வாக்குரிமைச் சீட்டுகள் வேண்டுமென்று விண்ணப்பம் அனுப்பவில்லை. புதுவதாக நிறுவிய ஈரோடு சைவ சித்தாந்த சபைப் பிரதிநிதிகளாவது ஏன் வந்திருக்கக் கூடாது. இவற்றை யெல்லாம் நன்கு ஆலோசித்தால் சுயமரியாதை வீரர்கள் பாமரர்களை ஏமாற்றவும், கூட்டங்களை ஒழுங்கீனமான முறைதழுவிக் கலைக்கவும் திறமுடையவர்களேயன்றி அறிஞர் கூட்டத்தில் வந்துநேரியமுறையில் வாது செய்துதாங்கள் திருந்தியாவது பிறரைத்திருத்தியாவது செல்லும் திறம், நல்லூழ், விருப்பம் முதலியன எள்ளளவும் உள்ளவர்களல்லவென்பது கற்றோ ரனைவர்க்கும் வெளிப்படையாகப் புலப்படக் கூடியது.

"சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரை
பத்தி மலர்தூவ முத்தி யாகுமே."

## இம்மகாநாட்டில் நிறைவேறிய உண்மைகளும் தீர்மானங்களும்

இவைகளை, திருநெல்வேலி சைவப் பெரியார் தனிக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு "சித்தாந்தம்" ஏப்ரல்மீ இதழில் வெளிவந்துள்ள தீர்மானங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறோம்.

### உண்மைகள்

1. நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும் கொள்கை இன்றியமையாதது.

2. சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்த முள்ளதாயும் அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின் அஃது எக்காலத்துக்கும் எச் சமூக நிலைக்கும் இசைந்ததா யிருக்கிறது.

8. பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே யென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் இன்றியமையாத கோட்பாடாகும்; சைவ உணவு கொள்ளுதல் சிவ சின்னங்கள் அணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக்கோட்பாடுகட் கிசையப் பயிலுதல் சைவ சமயத்தின் இன்றியமையாத அநுட்டானமாகும்.

4. சைவ. சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும்.

5. சைவ சமயிகள், சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் மறுக்காத எவ்வித ஆராய்ச்சியுஞ் செய்தல் சைவ சமய விரோதமாகாது.

### தீர்மானங்கள்

1. சைவ சமயிகளும் பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிபுகள் ஒப்புக் கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற் பொருட்டுத் தனிக்கழகம் ஒன்று நிறுவி அதற்குரிய சைவ அறிஞர்களை சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் ஆண்டுதோறும் தெரிந்தெடுக்க வேண்டும்.

2. சைவ சமயிகள் கடவுள் உண்டென்னும் கொள்கையைப் பாதுகாப்பதிலும் அக்கொள்கை யுடையராய்ப் பொதுநலங் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கிவரும் ஏனைச் சமயிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

3. சைவ சமயமானது பிற சமயங்களைச் சோபான முறையில் தழுவுவதால் சைவ சமயிகள் பிற சமயிகளோடு சகோதரத்துவம் பாராட்டவேண்டும்.

4. சைவ சமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க்கும் ஆலய வழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமா யிருத்தல் வேண்டும்.

5. ஆலயத்தில் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதியில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப்படுதல் கூடாது.

6. பிற சமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் ஒப்புக் கொண்டு சைவசமயம் புகும் தமது விருப்பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்தால், அச்சைவ சபையார் அவ்வறிவிப்பைப் பதிவு செய்து கொண்டு திருநீற்றுப் பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு

அளிவித்து அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவர்கள் சமய உரிமைகள் அனைத்துக்கும் உரியராவார்கள்.

7. சைவ சமய வளர்ச்சிக்குக் கீழ்க் கண்ட வழிகளைப் பின்பற்றி உழைத்தல் வேண்டும்.

(க) சைவ கலாசாலை ஏற்படுத்தி, சைவ சமய போதனை செய்வதற்குரிய பிரசாரகர்களைப்பயிற்றுதல்.

(உ) அப் பிரசாரகர்களுக்குக் கோயில் மடங்கள் பெருஞ் சைவ சபைகள் செல்வர்கள் முதலியோர்களால் தகுந்த சம்பளம் அல்லது ஊதியங் கிடைக்கும்படி செய்தல்.

(ங) ஆங்கிலத் தமிழ்க்கல்லூரிகளில்அதிகாரிகளிடம் அனுமதிபெற்றுச் சைவ சமய மாணவர்க்குச் சைவசமய போதனை செய்வித்தல்.

(ச) சமய நூல் பரிசோதனைகள் நடத்துதலும் தேறியவர்களுக்குப் பரிசளித்தலும்.

(ரு) சைவ சமய உண்மைகளை விளக்கும் துண்டுப்பத்திரிகைகள் வெளியிடுதல்.

(சு) தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கூடிய கழகவாயிலாகச் சைவ சமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் யாவர்க்கும் எளிதாய் நன்கு விளக்கும் உரைநடை நூல்களை வெளியிடுதல்.

(எ) சைவ சமய உண்மைகளை அறிவியல் நூல் கருத்துக்களோடும் பிற சமயக் கருத்துக்களோடும் ஒத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்யும் சைவப் புலவர்களை ஆதரித்தல்.

(அ) ஆங்கிலத்தில் ஒரு மாதாந்தப் பத்திரிகை நடத்துதலோடு சைவம் விளக்கும் பத்திரிகைகளையும் ஆதரித்தல்.

(கூ) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சைவ சமயிகள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சைவ சபையின் உறுப்பினராயிருத்தல்.

8. நமது சமய குரவர்களையும், அவர்கள் அருளிய நூல்களையும் பல்வேறுவழிகளிலும் தூற்றிவரும் வகுப்பினரால் நடத்தப்படும்பத்திரிகைகளையும் இயக்கத்தையும் சைவசமயிகள் எவ்வகையிலும் ஆதரித்தலாகாது.

9. திருக்கோயில்களில் அடியிற் கண்ட சீர்திருத்தங்கள் விரைவில் நிறைவேறுதற்கான முயற்சிகளைத் தொடங்கல் வேண்டும்.

(க) ஆதிசைவர்கள் முதலாகப் பூசனை புரிவோர்கள் சைவ சமய உணர்ச்சி உண்டாதற்குரிய பிராமண நூல்களைப் பயிலுமாறு செய்தல்.

(உ) அவர்கட்குத் தக்க சம்பளம் அல்லது ஊதியம் கிடைக்கும்படி செய்தல்.

(ங) சைவ சமயிகளைக் கொண்டே சிவாலயங்களில் வேத பாராயணம் முதலிய தொண்டுகள் அனைத்தையும் செய்வித்தல்.

(ச) ஆசாரியா பிஷேகம் பெற்ற ஆதிசைவர்கள் கிடையாத விடத்து ஆசாரியாபிஷேகம் பெற்ற ஏனைச் சைவ சமயிகள் வாயிலாகப் பூசனைகளை நடத்துதல்.

(ரு) ஒவ்வொரு சிவாலயத்திலும் பன்னிரு திருமுறைகளைப் பூசனை காலங்களிலே முறையாக ஓதுவித்தல்.

(சு) ஆலயங்களில் நுழைந்துள்ள பிரவேசக் கட்டணம் முதலிய வழிபாட்டுத் தடைகளை நீக்குதல்.

(எ) சைவசமயக்கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணாகாத முறையில் நித்திய நைமித்திய பூசைகளை நடத்துவித்தல்.

(அ) திருவிழாக்களிலே பக்தி ஞானங்களைக் குன்றச் செய்யும் வீணாடம்பரச் செலவுகளை நீக்கி, சிவத்துவம் விளங்குதற்குரிய திருமுறைப் பாராயணம் சமயப்பிரசங்கம் சைவ அறிஞர் கூட்டம் முதலியவைகளையே நிகழ்த்துவித்தல்.

(கூ) சிவாலயங்களிலே தேவ தாசிகட்கு பொட்டுக் கட்டுதலையும் அவர்கள் ஊழியத்தையும் ஒழித்தல்.

(க0) திருக்கோயில்களிலும் தேர்களிலும் இப்பொழுது உள்ள இழிவான சிற்பங்களை ஒழித்தல்.

(கக) சைவ சமய அறிவும் பற்றும் உடையவர்களையே கோயில் அதிகாரிகளாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தல்.

(கஉ) திருக் கோயில்களிலே திருக்குளம் முதலிய எவ்விடத்தையும் சுத்தமாக வைத்தல். புனிதத்திற்கும் பக்திக்கும் இடையூறாகிய கடை வைத்தல் முதலிய தீய வழக்கங்களை ஒழித்தல்.

(கங) நித்திய நைமித்திய பூசனை முதலியவற்றிற்குரிய செலவுகள் நிகழ்ந்த பின் எஞ்சிய நிதியினைக்கொண்டு சமயப் பிரசாரகர் நியமனம், சைவ நூல் புத்தகசாலை, தேவார பாடசாலை, ஆகம பாடசாலை முதலியவற்றை ஏற்படுத்துதல் சிவாலய நிதியினைக்கொண்டு பிற சமயக் கல்விக்குப் பயன்படுத்தாதிருத்தல்.

(கச) திருக்கோயில்களிற் செய்யப்படும் வடமொழித் தென் மொழித் தோத்திரங்கள் அனைத்தும் சிவத்தையும் சிவமூர்த்தங்களையும் குறித்தனவாகவே இருக்கும்படி ஏற்பாடு செய்தல்.

(கரு) திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி வலம் வரும்போது தமிழ் வேத பாராயணத்தை இறைவனுக்கு முன்னர்ச் செய்து போகும்படி செய்தல்.

10. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சமய விஷயங்களிலே சம உரிமையும் கடமையும் உள்ளன.

11. உயிர்ப்பலி நிறுத்துதல் கொலைமறுத்தல் முதலிய அருளொழுக்கக் கொள்கைகளை (Vegetarianism) யாண்டும் பரவச் செய்தல் சைவ சபைகளின் கடமையாகும்.

12. துறவுகோலம் பூண்டார்க்குச் சமயக் கல்வி பயிற்றுவித்து அவர்களை ஆதரிப்பதுடன், அவர்கள் வாயிலாக, சமய போதனை செய்விக்கும் பொருட்டும், சைவ சமய வளர்ச்சிக்குரிய எல்லா முயற்சிகட்கும் பெர்ருளுதவி ஆதரித்தற் பொருட்டும், செல்வ மிக்க சைவ மடங்களின் தலைவர்களை வேண்டிக் கொள்வதற்குத் தக்க அறிஞர்கள் சிலரை சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் விரைவில் தெரிந்தெடுத்து அம்மடாதிபதிகளிடம் அனுப்பவேண்டும்.

13. சைவ சித்தாந்த மகா சமாஜத்தை இந்நாட்டிலுள்ள சைவ மக்கட்கெல்லாம் பொதுவாகிய சைவப்பெருஞ் சபையாகக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒவ்வொரு ஊரிற்கும் தனித்தனி சைவ சபைகள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

14. ஒவ்வொரு சைவ சபையும் சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு இணைக்கப்பட்டதாய் (Affiliated) இருக்கவேண்டும்.

15. சைவ சமய வளர்ச்சிக் குரிய நன்னோக்கங்களும் நன் முயற்சிகளும் நிறைவேறுதற் பொருட்டும், உலகம் நல மடைதற் பொருட்டும் சைவருள் ஒவ்வொருவரும் நாடோறும் இறைவனைப் பிரார்த்தனை புரிதலுடன் சைவசபைகளிலும் கோயில்களிலும் வாரந்தோறும் சைவர் பலரும் ஒருங்கு கூடி இறைவனை அன்புமிக்க மொழிகளால் வேண்டிக்கொள்ளுதல் கடமையாகும்.

16. இப்போது வழக்கத்திலுள்ள சரியா கிரியா விதிகளும் அவற்றிற் கிணங்கச் செய்யும் முறைகளும் அம்முறை பற்றிச் செய்புங்காற் சொல்லும் மந்திரங்களுமாகிய எல்லாம் திருமந்திரம் தேவார திருவாசகம் முதலான அருணூல் உதவி கொண்டு தமிழிலேயே அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

17. "நல்லொழுக்கவாழ்க்கைக்கு" என்பது முதல் "வேத சிவாகமப் பகுதிகளுமாகும்" என்பது ஈறாக மேற் கூறப்பட்டுள்ள நான்கு உண்மைகளையும் ஒத்துக்கொண்டு சைவ நிந்தனை, சைவ சமயகுரவர் நிந்தனை செய்யாது அவ்வுண்மைகட்கிசைய இயன்றவரை ஒழுகுவோரே சைவராவர், அவர்களே சைவ சபைகளில் வாக்குரிமை முதலியனவுடைய அங்கத்தினராகும் தகுதியுடையவராவர்.

18. ஆதிதிராவிடர் முதலிய ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களெல்லோரும் கல்வியறிவொழுக்கம் சமய ஞானம் முதலியவைகளில் முன்னேற்றமடைதற்குச் சைவ சபையினர் அனைவரும் அன்போடு முனைந்து உழைக்கவேண்டும்.

19. (க) தேசபாஷையைப் போதிப்பவர் தகுதி, சம்பளம் முதலியவற்றைப்பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள அறிக்கைகளும் நிபந்தனைகளும் தேச பாஷை வளர்ச்சியைப் பாதிப்பனவாயும் நாட்டிற்குக் கேடுபயப்பனவாயு மிருத்தலின் இவற்றை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(உ) தேச பாஷைப் புலமையுடைய பண்டிதர்கள், பட்டதாரிகளைவிட எவ்வகையிலும் தாழ்ந்தவர்களல்லவென்றும், சம்பள விஷயத்தில் பண்டிதர்களுக்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் (Lecturers) வேற்றுமை காட்டக் கூடாதென்றும், தேச பாஷைப் பிரிவில் தலைவராயிருப்பவர் புலமையைப் பொறுத்தும் உத்தியோக நியமனத்தின் முற்பிற்பாட்டைப் பொறுத்துமேதான் சம்பளம் அளிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தெரிவித்துக்கொள்கிறது.

20. சைவ விரதங்கள் திருவிழாக்கள் முதலியவைகள் சைவப் பஞ்சாங்கப்படி அனுட்டிக்கப்படவேண்டும்.

21. சிவ தீக்கை பெற்றுச் சைவக்கிரியைகள் செய்துவைக்கும் உணர்ச்சி வாய்ந்த சைவர்களைக்கொண்டே அவற்றைச் செய்து கொள்ளல் வேண்டும்.

22. சந்தான குரவர்களான மெய்கண்டதேவர் முதலான நால்வரின் திருவுருவங்களைத் திருக்கோயில்கடோறும் நிறுத்தி வழிபாடாற்றுதல் வேண்டும்.

# வசைமொழி வேந்தர்கள்

[பத்திராசிரியர்]

திருநெல்வேலியில் நடந்த சைவப் பெரியார் தனிக்கூட்ட நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் பற்றி உண்மைக்கு மாறான வகையில் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளையும் கருத்துக்களையும் கண்டித்து உண்மையை விளக்குவதற்காக "இதுவோ சுயமரியாதை" யென்றொரு கட்டுரையைச் சென்ற "சித்தாந்தம்" இதழில் நாம் வெளியிட நேரிட்டது. உண்மையை விளக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் அக்கட்டுரை எழுதப்பட்டதே யன்றிச் சிலரைப் புகழ்ந்தும், வேறு சிலரை இகழ்ந்தும், சிலரை மகிழ்வித்தும், வேறு சிலர் மனதைப் புண்படுத்தியும் கூறவேண்டுமென்ற நோக்கத்தோடு எழுதப்படவேயில்லை. ஆனால் அக்கட்டுரை வெளி வந்ததின் பயனாக எம்மையும், எமது பத்திரிகையையும், சைவசித்தாந்த மகா சமாஜத்தையும், திருப்பாதிரிப்புலியூரில் நடந்த சைவர் மகா நாட்டையும், அதில் தலைமை வகித்த பெரியாரையும், அதில் கலந்துகொண்ட பேரறிஞர்களையும், சில "உண்மைச் சைவர்கள்," சில பத்திரிகைகளிலும், சில பொதுக் கூட்டங்களிலும், பல நண்பர்களிடத்திலும் அளவு கடந்த வகையில் தூற்றியும், வசைமொழி மாணிக்கங்களால் அலங்கரித்தும் வருகின்றனர். இச்செயல்கள் டாக்டர் ஜான்ஸன் என்ற ஆங்கிலப் புலவர் "மக்கள் ஒருவரை யொருவர் நேசிப்பதை விட வெறுப்பதே மிகவும் திடமாக நடக்கின்றது" (Men hate more steadily than they love. —*Dr. Johnson*) என்று கூறுவதை நினைவூட்டுகின்றன.

இவ்வசை மொழிகளைப் பற்றி விரிவாகக் கூற நமக்கு விருப்பமில்லையாயினும், அவை இவ்விதம் என்று அறிவதற்காக வாவது சிலவற்றைத் தெரிவித்தால் இம் மொழிகளைக் கூறும் "உண்மைச் சைவர்கள்" இன்னருள் எம்மட்டில் செல்லுகின்றனென்பதை நமது பத்திரிகையைக் கண்ணுறும் அன்பர்கள் அறியக்கிடக்கும். அவை எவையோ வெனின் "தாங்கள் கலந்துகொண்டு நடத்தாத பத்திரிகையும், சமாஜமும் அழிய வேண்டும், தாங்கள் விஜயம் செய்யாத மகாநாடு சைவர் மகாநாடல்ல, கிணற்றுத் தவளைகள் கூட்டம், பத்திராசிரியனாகத் தொண்டு புரியும் எனக்குத் தமிழ் தெரியாது; என் பெயரையும் செவ்வையாகத் தமிழில் எழுதத் தெரியாது. நான் பி. எ., பி. எல்., பட்டங்களை முதல் வகுப்பில் இராஜதானியில் முதலாகவும் இரண்டாவதாகவும் நின்று பெற்றும் (First class & first in the Presidency in B.A., & first class & Second in the Presidency in B. L.) உண்மைக் கல்வியில்லாதவன், எனது ஆங்கிலக் கல்வியைப் பயன்படுத்தும் திறமை ஒரு சிறிதும் இல்லாதவன்" என்பனபோன்ற 'அரிய கருத்துக்களே' இவ்வுண்மைச் சைவர்கள் வெளியிட்டுள்ளவைகள். இவைகளையெல்லாம் விரிவாக ஆராய வேண்டுவதேயில்லை. இறைவன் திருவருளால் நமது பத்திரிகையும் சமாஜமும் நாளுக்குநாள் பலப்பட்டும், தமிழ்நாட்டின் பற்பல பகுதிகளிலுமுள்ள சபைகளாலும், பேரறிஞர்களாலும் போற்றப்பட்டுமே வருகின்றன என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். 1921௵ முதல் இடைவிடாது நாம் சமாஜக் காரியதரிசியாகத் தொண்டு புரிந்து வந்தபோதிலும் 1929௵த்தில் சமாஜம் நடைபெறுவது போல வேறு



எந்த ஆண்டிலும் இல்லை யென்று திருநெல்வேலியிலும் திருப்பாதிரிப் புலியூரிலும் கூடிய சைவப் பெரியார்கள் கருதினார்கள். ஆகவே நமது பத்திரிகையும், சமாஜமும் அழிய வேண்டும் என்று எத்தனை "உண்மைச் சைவர்கள்" தவங்கிடந்தாலும் இறைவன் திருவருள் அவர்கள் தவத்துக்குமாறான பலனையே நல்கும்.

இது நிற்க, நமது பத்திரிகை, சமாஜம், திருப்பாதிரிப்புலியூர் சைவர் மகாநாடு முதலியவைகளைப் பற்றி 1929-௵ மே௴ 7, 20, 21, 22, 25, 27-ம் தேதிகளில் "திராவிடன்" பத்திரிகையில் வெளிவந்துள்ள 'அரிய கருத்துக்கள்' சிலவற்றை ஆராய்வோம். "இதுவோ சுயமரியாதை" என்னும் கட்டுரைக்குப் பதில் கூறும் முறையில் "சாமி சிதம்பரனார்" 7-5-1929 "திராவிடன்" இதழில் "சித்தாந்தத்தின் பித்தப் பேச்சு" என்றொரு கட்டுரை வரைந்துள்ளார். இவ்விரண்டு கட்டுரைகளையும் எதிருக் கெதிராக வைத்து, கொள்கை வெறியின்றி நடுவு நிலைமையோடு படித்தால் நாம் கூறுவதில் எவ்வளவு அதிகமான பகுதியை "சாமி சிதம்பரனார்" ஒப்புக்கொள்ளுகின்றார், எவ்வளவுக்குப் பதில் சொல்லாமல் குழப்புகின்றார் என்பன நன்கு விளங்கும்.

"சைவசித்தாந்த மகாசமாஜமும் சுயமரியாதை இயக்கமும்" என்பதுபற்றி எமது நண்பர் திரு. சி. இராஜரத்தினம் 20-5-29 "திராவிடன்" இதழில் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். சுயமரியாதை இயக்கத்திற் கலந்துள்ள எமது நண்பர்கள் அனைவரையும் விட திரு. சி. இராஜரத்தினம் என்பவரிடத்தில் எமக்கு நிரம்பிய அன்பும் பற்றும் உண்டு. இவர் எம்மை எத்தனை இகழ்ந்து கூறினும் அவைகளை ஒரு சிறிதும் நாம் பொருட்படுத்தோம். தூயமனத்தர் கூறும் இகழுரையைப் புகழுரையாகவே கொள்ளும் பழக்கம் அறிஞர்கட்கு உண்டு. ஆயினும் சமாஜத்தைப்பற்றி நண்பர் இராஜரத்தினனார் கூறுவதைச் சிறிது ஆராய்வாம்.

"ஒருபெரியாரை யாது காரணமுமில்லாது தாக்கி எழுதியும் சுயமரியாதை இயக்கத்தாரையும், அவ்வியக்கத்தின் தலைவர்களையும் பலவாறு இழித்தும் கூறியிருக்கின்றார்" என நண்பர் இராஜரத்தினனார் எழுதுகிறார். இவர் கூறும் பெரியார் இவ்விஷயமாக எம்மை ஒரு நாள் காண நேரிட்டது. அப்போது ஏறக்குறைய 1-மணி நேரம் அவரது 'அருண்மொழிகள்' எம்மீதும் நமது சமாஜம், பத்திரிகையாகிய இவைகளின் மீதும் பாய்ந்தன. ஒரு காகிதத்தில் சில வாக்கியங்களைக் குறித்துக் கொள்ளும்படி அவர் விரும்பினார். அவைகளைக் குறித்துக் கொண்டேன். அவைகளை இம்மாத இதழில் வெளியிட்டால் நமது பத்திரிகையைப்பற்றியும், சமாஜத்தைப்பற்றியும் ஒன்றும் கூறுவதில்லையென்றும் தெரிவித்தனர். ஆனால் அவர் கூறியதற்கு மாறாக நமது பத்திரிகையைப் பற்றியும், சமாஜத்தைப் பற்றியும், எம்மைப்பற்றியும் பற்பலவாறு பொதுக்கூட்டங்களிலும், பற்பல நண்பர்களிடத்திலும் தெரிவித்துக் கொண்டு வருகிறார். அவர் விரும்பிய சில வாக்கியங்களை வெளியிடுவதைப்பற்றிப் பத்திராசிரியக் கழகத்தினருள் சந்திக்கக் கூடியவர்களையெல்லாம் சந்தித்துக் கேட்டேம். அவர்களெல்லாரும் நாம் முதலில் வெளியிட்டதில் தவறு ஒன்றும் இல்லையென்றும், அதுபற்றி வேறு வெளியீடு ஒன்றும் தேவையில்லை யென்றும் தெரிவித்தார்கள். நாம்வெளியிட்டதில் ஏதேனும் தவறு என்று இதுவரை பத்திராசிரியக் கழகத்தினர் எவரும் எமக்குத் தெரிவிக்கவில்லை.

நண்பர் இராஜரத்தினனார் மேலும் கூறுவது: "ராஜரத்னம் என்பதை இராஜரத்தினம் என்று எழுதுவதால் ஒரு சுயமரியாதை ஏற்படுகின்றது. பால சுப்பிரமணியன் என்று எழுதாது பால சுப்ரஹ்மண்யம் என்று எழுதுவதால் சுயமரியாதையின்மை விளங்கு

கின்றது'' என்பது ஆம். பாலசுந்தரம் என்பதை இளவழகனுர் என்றும், இராஜ ரத்தினம் என்பதை மன்னன் மணி என்றும் எழுதுவதில் ஏதாவது ஒருவகை சுயமரியாதை இருக்கலாமே ஒழிய இராஜரத்தினம் என்று எழுதி விடுவதால் புலப்படக்கூடிய சுயமரியாதை ஒன்று மில்லை யென்று நண்பர் இராஜரத்தினனுருக்குக் கூற வேண்டுவதில்லை. காசிக்கயிறு, பூணூல், விபூதி, உருத்திராக்கம் முதலிய வற்றிற் பொதிந்து கிடக்கும் உண்மைகளை நண்பர் அறிவார் என்று எண்ணுகிறேம். அறியாராயின் தக்கபெரியார்களைக்கொண்டு அறிந்துகொள்வாராக. அதுவிட்டு அவ்வுண்மைகளைக் கடைப்பிடித்து அவைகளை யணிவோரை இகழ்வது சுயமரியரதையாகாது. சங்கரா சாரியரை ஜகத்குரு என்று கூறுவோரைச் சும்மா விடுவது சுயமரியாதையின்மை என்பது நண்பர் கருத்து. இயேசுகிறிஸ்து, மகம்மது நபி, புத்தர், மஹாவீரர் முதலியோ ரெல்லாம் அவரவர்கள் மதத்தினரால் ஜகத்குருவாகவே கொண்டாடப்படுகின்றனர். அஃதேபோல் சங்கரா சாரியர் ஜகத்குருவென்று ஸ்மார்த்தரும், திருஞான சம்பந்தர் முதலிய நால்வரும் ஜகதாசாரிய சுவாமிகள் என்று சைவரும் தொன்றுதொட்டுக் கூறிவருகின்றனர். இதனை நண்பர் நன்ருக ஆராய்ந்து அறியவேண்டும்.

மற்ருேரிடத்தில் "காரிய தரிசிக்குத் தம்முடைய சமாஜத்தை யாராவது குறைகூறின் அக்குறையை நீக்குவதற்குத் தம் சமாஜத்தைத் தாங்கிப் பேச உரிமையுண்டே ஒழிய குறை கூறிய கூட்டத்தாரைத் தாக்கிப் பேச உரிமையில்லை,'' என்று நண்பர் நீதி கூறுகிருர். இது உலக நீதியன்று; சுயமரியாதை நீதி போலும்! தாங்கிப் பேசமிடத்துத் தாக்கிப் பேசுதலும் இன்றியமையாது பொதிந்து கிடப்பது நண்பருக்குத் தெரிந்த தொன்றே. உண்மை யிதுவென்று விளக்கும்போது மற்ருேர் கூறியது பொய்யென்று விளக்காமல் எவ்வாறு பணி செய்தல் கூடும்?

இறுதியாக "பேச்சுரிமை எண்ணுமுரிமை முதலியவைகள் யாவருக்கும் உண்டு. கொள்கைகளில் ஒவ்வொருவரும் மாறுபட்டவரா யிருக்கலாம். அதற்காக ஒருவரை மற்றெருருவர் இகழ்வது அறிவுடையார் செய்கையாகாது'' என நண்பர் ஞானுபதேசம் செய்கிருர். இவ்வுபதேசம் நமக்கு முற்றிலும் உடன்பாடு. சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பும் பத்திரிகைகளையும், ஏனைய பத்திரிகைகளையும் நமது நண்பர் ஒப்பிட்டுப் பார்ப்பாராக. சுயமரியாதைப் பத்திரிகைகளில் அக்கொள்கைக்கு மாறுபட்டாரைப் பற்றி எத்துணை வசைமொழிகள், எத்துணைச் சவுக்கடிகள், செருப்பு மாலைகள், காலிகள், கூலிகள் முதலிய 'அரிய' சொற்கள் வழங்கப்பட்டுள்ளன வென்றும் ஏனைய பத்திரிகைகளில் சுய மரியாதைக்காரர்களைப் பற்றி எவ்வளவு மரியாதையான வார்த்தைகள் வழங்கப் பட்டுள்ளன வென்றும் நண்பர் ஊன்றிப் பார்த்தால் தாம் கூறும் ஞானுபதேசத்துக்கு முற்றிலும் மாருக நடக்கும் வசைமொழி வேந்தர்கள் தமது இயக்கத்தைச்சேர்ந்தவர்களேயென்று நன்ருக உணர்வர்.

ஆகவே சாதிவெறி, மொழிவெறி, கொள்கை வெறி முதலியவைகளால் விழுங்கப் பெருது, நடுவு நிலைமையில் நின்று உண்மையை யாராய்ந்து முடிபுகண்டு நம் சமாஜமும், பத்திரிகையும் செல்லும் வழி சீரிய வழியே என்று தெளிந்து மீண்டும் அவைகட்குப் பழையபடி தொண்டு புரிய நண்பர் இராஜரத்தினனுர் முன் வருவாரென எதிர்பார்க்கிறேம்.

பின்னர் "சைவர் மகாநாடு" என்ற தலையங்கம் ஒன்று 21-5-1929 திராவிடனில் வெளியாயிருக்கிறது. அதில் "மகாநாட்டுத் தலைவர் மறைத்திரு மறை மலையடிகள் கற்றவர் என்பதில் ஐயமில்லை; ஆனுல் அறிந்தவர் என்பதில் மட்டும் பெரிதும் ஐயப்பாடு இருக்கிற''தென்று எழுதப்பட்டுள்ளது. சுயமரியாதை இயக்கத்திலுள்ள நல்ல பகுதிகளெல்லாம் மறைமலையடிகள் ஞானத் தந்தையாக அருள் சுரந்து இட்ட பிச்சை யென்பது தமிழ்நாடு அறிந்ததே. இப்பிச்சை வாங்கிப் பிரசாரம் செய்பவர்கள் பிச்சையிட்ட பிதா செய்த நன்றியை மறப்பாராயின் அப்பிரசாரம் முழுமையும் கடலிற்பெய்த மழைபோல் ஒரு பலனும் தாராது போகும் என்பதில் ஐயமில்லை. இதனுல்தான் ஈரோடு தேவஸ்தானக் கமிட்டியார் ஆலயப்பிரவேச விஷயத்தில் செய்த தீர்மானத்தை அவர்களே ரத்துசெய்ய நேரிட்டது போலும்! இதே தலையங்கத்தில் மற்ருேரிடத்தில் "மணி திருநாவுக்கரசு முதலியார் போன்றவர்கள் நமது கொள்கைகளின் நோக்கம் இனிதறிந்துள்ளார்கள்'' என்று எழுதப்பட் டிருக்கிறது. இந்த நோக்கத்தை இனிதறிந்துள்ள அவர்கள் இவ்வியக்கத்தின் முன்னணியில் நின்று தொண்டாற்றித் தமிழ்நாட்டில் விரைவில் "உண்மைச் சைவத்தை"ப் பரப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேம்.

அடுத்த நாள் (22-5-29) இதே தலைப்பின்கீழ் "திராவிட"னில் வெளிவந்துள்ளவற்றில் சில அரிய கருத்துக்கள் இருக்கின்றன. பட்டினத்தடிகள் துறவறத்தைவிட இல்லறம் சிறந்ததெனக் கூறியதைத் தலைவர் பின்பற்றி அதே பட்டினத்தடிகள் "கல்லினும் செம்பினுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே'' என்று கூறுவதை விட்டுவிட்டதால் பெரியார்கள் கண்ட உண்மைகளையெல்லாம் திரித்துக் கூறுவதாகவும், அத்தகைய தலைவர்களைச் சமயப் போலிகளென்றே கூறவேண்டும் என்றும் திராவிடப் புலவர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். "கல்லினும் செம்பினுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே'' என்று அருளிச் செய்த பட்டினத்தடிகள் எத்தனைத் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்துள்ளார், தோத்திர மாலைகள் செய்துள்ளார், திருக்கோயில் வாயிலிலே எத்தனை நாள்தானிருந்தார், அரசனெருவனை இருக்கும்படி செய்தார் என்பவற்றை யெல்லாம் ஒழுங்காகக் கற்றுணர்ந்தால் கல்லினும் செம்பினுமோ இருப்பான் என்றதின் உண்மைப் பொருள் விளங்கும். அவ்வாறு உணர்ந்தவர்கள் மறைமலை யடிகள் போன்ற பெரியார்கள். "கல்லினும் செம்பினுமோ இருப்பான்'' என்பதை மட்டும் உண்மையுணராது கையாளத் திறம்படைத்தவர் திராவிடப் புலவர்.

மற்ருே ரிடத்தில் "கடவுள் உண்டோ இல்லையோ என்று கூறுபவர்கள் உண்மையாளர்கள்; பிறர் மொழிகளைக் கேள்விப் பட்டோ, படித்தோ உண்டெனக் கூறுபவர்கள் சுத்தப் பொய்யர்கள்'' என்ற 'அரிய' கருத்து வெளியாயிருக்கிறது: இக்கருத்தின் உண்மையை நமது நண்பர்கட்கு ஓர் உதாரண வாயிலாக விளக்க விரும்புகிறேம். தகப்பனுர் உறவினர் முதலிய பிறர் மொழி கேட்டோ, படித்தோ, இயற்கையுணர்ச்சியாலோ தனது தாயைத் தாயென்று கொள்பவன் சுத்தப்பொய்யன், தாய் வயிற்றிலிருந்து கீழே இறங்குவதைக் கண்கொண்டு காணுததால் எனக்குத் தாயோ அல்லளோ என்று ஐயுற்றுக் கூறுவோனே உண்மையாளன். இதை ஆராய்க.

மற்ருேரிடத்தில் "பதிபசுபாசம் என்னும் முப்பொருள் உண்மையை இக்காலத்தில் ஒருவரும் ஒப்பவில்லை'' என்கிருர் புலவர். அவரை ஒருநாள் பல்லாவரம் சென்று எத்தனை ஆங்கில தத்துவாசிரியர்கள் இதை ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்பதை அறிந்து தமது பத்திரிகையில் வெளியிட வேண்டுகிறேம்.

பன்னிரு திருமுறைகளை ஆங்கிலேயனும், எஸ்கிமோவும், நீகிரோவும் படிக்க முடியாதாகையால், இவைகள் உலகிலுள்ளோர் கைக்கொள்ளக் கூடிய

பிரமாண நூல்கள் அல்லவாம். மின்சார சக்தி உண்மையான சக்தி, இது உலகில் உள்ள எல்லா மக்களாலும் கையாளப்படுதற் குரியது, இது போலவே சைவ நெறியும் இருக்க வேண்டும் என்று புலவர் கூறுகிறார். சுயமரியாதை பொருந்திய உண்மைச் சைவத்தை இப்புலவர் ஆங்கிலேயன், எஸ்கிமோ, நீக்ரோ முதலியோருக்கு எவ்வாறு அறிவிப்பாரோ அவ்வழியிலேயே பன்னிரு திருமுறைகளையும் அறிவித்தல் கூடும் என்பதை புலவர் மறந்துவிட்டார் போலும்! மின்சார சக்தி உண்மையான சக்தியாயினும், இன்றைக்குச் சென்னைக்குப் புறம்பேயுள்ள ஒரு கிராமத்தில் உதவாத சக்தியாகவே யிருக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ளவன் அந்தச் சக்தியை யறிந்து அதன் நுட்பங்களைத் தெளிந்து கருவி கொண்டு சென்ற பிறகே கிராமத்தில் பயன் படுத்தலாம். அஃதேபோல் எஸ்கிமோவும், நீக்ரோவும் உலக உண்மையாகிய திருவருள் நெறிச் சைவத்தை யறியாதவர்கள். அறிய விருப்பங் கொண்டு வருவாராயின் அவர்களுக்கு எவ்வகையிலாவது அறிவித்து அந்நெறியில் நிற்கும் படிச் செய்யச் சைவர்கள் பின் வாங்க மாட்டார்கள்.

இறுதியில் திராவிடப் புலவர் பொன்னே போல் போற்றத்தக்க சில கருத்துக்களை வெளி யிட்டுள்ளார். "நமது சுயமரியாதை நெறி சமய நெறியா? எல்லாச் சீவராசிகட்கும் பொது நெறியா? எனின், ஆம். இதுவே கடவுள் நெறி; இதுவே உண்மைச் சைவ (அன்பு) நெறி; எல்லாச் சீவர்கட்கும் ஒத்தது. மாக்களும் அநுசரிக்கப்பாலது; எனவே நாம் தாம் உண்மை நெறியைக் கூறுகின்றோம். என்னும், ஏனையவர்கள் வயிற்று நெறியைக் கூறும் போலிச் சைவர்கள் என்றும் விளக்கிக் கூறவும் வேண்டுமோ" என்பதோடுஇத்தலையங்கம் முடிகிறது.

மேற் கூறியது நமக்குப் பெருவியப்பை விளைவிக்கிறது. உலகத்திலுள்ள சமயங்க ளெல்லாம் மக்கள் அநுசரித்தற்குரிய நெறியையே கூறுகின்றன. ஆனால் சுயமரியாதை நெறியோ எல்லாச் சீவர்கட்கும் ஒத்தது. மாக்களும் அநுசரிக்கற் பாலது என்று திராவிடப் புலவர் கூறுகின்றனர். சுயமரியாதை நெறி முழுமையும் மாக்களும் அநுசரிக்கற் பாலதா அல்லது அந்நெறியில் அவைகட்கென ஒரு பகுதி ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளதா என்பதை திராவிடப் புலவர் விளக்குவாராக. மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதையும் மாக்களும் அநுசரிக்கற் பாலதாகிய நெறி மக்களுக்கு எவ்வாறு பலன் தரும் என்பதையும் புலவரே விளக்க வல்லார். இவைகளை யெல்லாம் நன்ருக அறிந்து கொண்டால் மக்கள் சமூகத்திலே மாக்கள் தன்மையுடையவர்களாவது உய்வதற்கு ஒரு புதிய சமயநெறி இருக்கிறதென்று தெரிந்து அந்நெறியில் அவர்களை நிற்கும்படி செய்வதோடு ஒவ்வொருவரும் தமது வீட்டிலிருக்கும் அன்புள்ள மாடு, கன்று, நாய், பூனை முதலிய மாக்கள் சமய நெறி நின்று பயன் பெறுவதற்கான வழிகளையும் தேடுதல் கூடும்.

'திராவிடன்' மேமீ 25, 27 உ களில் வந்துள்ள கடிதங்களில் ஈரோடு சைவ சித்தாந்த சபை மகாநாட்டில் கலவரதின் காரணமும் திரு. திரிகூடசுந்தரம் பிள்ளைக்கு வாக்குரிமைச் சீட்டு வழங்காத நிகழ்ச்சியும் வெளிவந்துள்ளன. அவற்றை மற்றோரிடத்தில் விளக்கி யிருக்கின்றோம்.

இறுதியாக சுயமரியாதை இயக்கத்தை அறிவு கொண்டும், பழைய தமிழ் நூல்கள் கொண்டும் பரவச் செய்யாது வசை மொழிகளால் பிரசாரம் செய்துவரும் பெரும் புலவர்கட்கு நாம் ஒன்றே கூற விரும்புகிறோம். அன்பர்காள்! வசைமொழிகள் வெறுப்பைத்தருமேயொழிய, அறிவை வளர்க்கவோ, உண்மையைவிளக்கவோ பயன்படா என்பதை நண்பர்களே நன்ருக அறிமின்கள். வசைமொழிவேந்தர்களாக இந்நாட்டிடை யுலவினுர் பலர். அவர்கள் கருத்துக்கள் எந்நாளும் முற்றுப் பெற்றதில்லை. அறிஞர்கள் கூறுவதை உளங்கொண்டு அறிவுகொண்டு பதில் கூறுமின்கள். அதை விடுத்து அறிஞர்கட்கு வசைமொழி மாலைகள் அணியாதீர்கள். "None are so blind as those who wont see" (பார்க்கமாட்டோம் என்று கண்ணை மூடிக்கொள்வோரைப் போன்ற குருடர்கள் வேறெவருமிலர்) என்ற ஆங்கிலப் பழமொழியை மறவாதீர்கள். உங்கள் பிறவியை வசைமொழி கூறியே வீணக்கி விடாதீர்கள். அவ்வாறு செய்யின் நாம் செய்யவேண்டியது இரண்டி லொன்றுதான். அதாவது உங்கள் பிறவி, பயன்பட்டு தூய அருள்நெறிக்கண் நீங்கள் நிற்க இறைவன் திருவுள்ளம் இருக்குமாகில் விரைவில் அவ்வாறு செய்யுமாறு இறைவனை வழுத்துகின்றோம். அல்லது இப்பிறவி வீணுக வேண்டுமென்பது ஈசன் கருத்தாகில் சைவப் பெரியாராகிய நக்கீரர் கீழ் கூறுவதே மீண்டும் நினைக்கற்பாலதாகும்.

இப்படி ஞான மப்படி யமைத்தும்  
இன்ன தன்மைய னென்றிரு நிலத்து  
முன்னே யறியா மூர்க்க மாக்களை  
யின்னே கொண்டே காக்கூற்றம் [தே.  
தவறு பெரிதுடைத்தே தவறு பெரிதுடைத்



---

# "தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்"

[வல்லை. பாலசுப்பிரமணியன் B.A.]

" அமுதம் ஊற்றிருக்கும் குமுதவாய்அலர்ந்து  
மந்தகாசம் தந்து அவள் நின்ற  
நிலைமை என்னெஞ்சம் நீங்குவ தன்றே"  
—மனேன்மணீயம் (II. ii. 35-37)

வேனிற்காலத் தென்றல் இனிமையாய் வீசுகின்றது. மேகம் கருமையாகத் திரண்டு தென்மலையில் தவழ்கின்றது. எப்பக்கம் பார்ப்பினும் வானளாவிய மலைகள் பெரிய மரகதக் குவியல்களைப் போல் அடுக்கடுக்காய்த் தமது உன்னத சிகரங்களோடு திகழ்கின்றன. கார்முகில்கள் மலைகளில் உறுய்தலால் எழும்பும் சிற்றோசையும், அடர்ந்த காடுகளின் கடலோசையும், கான் யாறுகளின் மெல்லோசையும், ஒரு மலையினின்றும் கிளம்பி மற்ெருரு மலையில் தாக்குவதால் உண்டாகும் எதிரொலியுமே இவ்விடத்தில் நிரம்பியிருக்கின்றன. பிரம்மாண்டமான பழு மரங்களும், நீண்ட கொடிகளும் ஒன்றோடொன்று பின்னி இடை வெளியின்றி வளர்ந்திருப்பதால், இங்கிருக்கும் மலைக் குரங்குகள் தமது பிறப்புரிமையாகும் தாவுந் தொழிலையும் மறந்து தரையின் மீது தத்திக் குதித்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய அழகிய மலைவளக்காட்சியளிப்பது தொண்டை நாட்டிலே வள்ளியங்கிரி என்னும் உயர்ந்த மலையின் சார்பிலுள்ள மேற்பாடி என்னும் சிற்றூர் ஆகும். இவ்வூரின் ஒருபாலுள்ள மறவர்களது தினைப்புனத்தை யாம் கூறும் இத்தருணத்தில் வள்ளி என்னும் பேரழகு வாய்ந்த சிறு பெண்ணொருத்தி இலைகளால் வேய்ந்த பரணமீ திவர்ந்து கவண்கொண்டு காவல் காத்துக் கொண்டிருக்கின்றாள். இவள், இச்சிற்றூரிலுள்ள வேடர்களுக்குத் தலைவனுகிய நம்பி என்பானுக்கும், அவன் மனைவி கொடிச்சி என்பாளுக்கும் உதித்த ஒரே மகள். தாமிருக்கும் வள்ளிமலையின் பெயரையே, பெற்றோர்கள் தம் மகளுக்கும் சூட்டி மகிழ்ந்தார்கள். காட்டு யானை ஒன்றிற்குத் தவிர மற்றெந்த வனவிலங்குகட்கும் அஞ்சா நெஞ்சத்தினை யுடையவள். பண் மயத்தமொழி பேசும் இவளது செந்துவர் வாயினைக்

கோவைக் கனி என்று மலேந்து, அருந்தவந்த மலைப் பறவைகளை,

" பூவைகாள்! செங்கட்
புறவங்காள் ! ஆலோலம்
தூவிமா மஞ்ஞைகாள் !
சொற்கிளிகாள் ! ஆலோலம்
கூவல்சேர் வுற்ற
குயிலினங்காள் ! ஆலோலம்
சேவல்காள் ! ஆலோலம் "

என்று கற்களைக் கவணில் வைத்து வீசிக்கொண் டிருக்கிருள்.

இவள் நிலை இங்கிவ் வாறிருக்க, அடுத்தாற் போலுள்ள தணிகை மலையினின்றும் முருகன் என்னும் வேடன் ஒருவன் தன் தொழில்மேற் புறப்படுகிறான். இவன் இளமையும், கட்டழகும் வாய்ந்த சிறந்த காளை. இவற்றினேடு தெய்விகத் தோற்றமும், நறுமணமும் இவனிடம் உறையுளா யிருந்தமையால், அக்காலத் திருந்தோர் முருகு என்னும் தமிழ்ப் பெயரையே முருகன் என்று இவனுக்குச் சூட்டினார்கள்.

இக்குமரன் மக்களுடம்பு தாங்கி நிற்பினும், அவரால் எய்தப் பெருத அருங் குணங்களை யெல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன். சகல கலைகளிலும் வல்லவன். இவனுடைய தந்தையார்க்கு அரிய பொருள்களில் ஏதேனும் ஐயம் நிகழ்ந்தால் தமது மகனிடம் அவற்றைக் கேட்டுத் தெளிவித்துக் கொள்வா ரென்று அக்காலத் திருந்தோர் சொல்வதுண்டு. அடைக்கலம் என்றடைந்தோரை ஆதரிக்கும் இச்சிறுவனது வீரம் சொல்லுந் தரத்ததன்று. மாற்ருரால் துன்புறுத்தப் பட்ட தேவர் என்னும் ஒருவகைச் சாதியாரை இவன் காப்பாற்றவேண்டி அம்மாற்ருரது தலைவனுகிய சூரன் என்பவனேடு போர் மலேந்து, சமர் முகத்தில் முறியடித்தான். அதுகாறும் இச்சிறுவனைச் சிறு பாலகன் என்று எள்ளி இறுமாந்திருந்த அப் பகைவீரன், குருதி வெள்ளத்தில் புரண்டு கொண்டே. இவனது வேற் படையின் வெம்மைக்கு ஆற்ருது,

" கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள்
பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்தி இம்மூர்த்தி யன்றே "

என்று மலைவுதெளிந்து அலமந்து அரற்றினன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இக் குமரன், கையில் வேலேந்தி தான் அருமையாய் வளர்த்து வந்த பெரிய ஆண்மயில் ஒன்று தன் பின் வர, வேட்டத்தின்மீது நாட்டஞ் செலுத்தி விரைவாக நடந்து கொண்டிருக்கும் போது, வள்ளி காத்துக்கொண்டிருந்த தினைப்புனத்தைக் குறுக்கிட்டு அவளை நேரிற் கண்டுவிட்டான். கண்டவுடன், தானெடுத்த பிறவிப் பெறும் பயன் அவளே என்று நிச்சயித்துவிட்டான். தான் வேட்டமாடிக் கைவசப்படுத்தற்குரிய இளம்பிடிமான் கன்னிப் புனங் காக்கு பெண்ணமுதே என்று இறும்பூதெய்தினன். இனி, அவளுடன் பேச நினைத்து,

" வாரிருங் கூந்தல் நல்லாய்
மதிதளர் வேனுக்குன் றன்
பேரினை யுரைத்தி மற்றுன்
பேரினை யுரையாயென்னில்
ஊரினை யுரைத்தி ஊரும்
உரைத்திட முடியாதென்னில்
சீரிய நின் சீறூர்க்குச்
செல்வழி உரைத்தி,

மொழியொன்று புகலா யாயின்
முறுவலும் புரியாயின்
விழியொன்று நோக்கா யாயின்
விரகமிக்குழல் வேனுய்யும்
வழியொன்று காட்டா யாயின்
மனமும் சற்றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும்
பராமுகம் தவிர்தி "

என்று பலப்பல மொழிகளால் அவளிடம் சொல்லாடினன். இவ்வளவிற்கும் அச்சிறு குறப்பெண் நாகரிக வாழ்க்கையை அறியாளாகையால், இவனை ஏறெடுத்தும் பாராது



ஒன்றும் பேசாது வாளா இருந்தாள். குமரன் நெஞ்சம் துணுக்குற்றது, "எனக்குமா தோல்வி? அதிலும் ஒரு பெண்ணினிடமா? என்னை நேரில் பாராது, யான் போர்க் கோலம் பூண்டு வருகிறேன் என்று யாரோ ஒருவரால் கேள்வியுற்று, அவ்வாறு கேட்ட துணை யானே மாற்ருர் முதுகு புறங்காட்டி ஓடும் என்னுடைய தோள்வலி, அந்தோ! இவள் பால் உடைந்ததே " என்று அதிசயித்து அலக்க ணுற்ருன். அம்மங்கையின் தேனூறும் ஒரு சொல்லை யாகிலும் கேட்கப் பெறுவோமா என்று வாயூறி நின்ருன். அவள் பணிக்கும் குற்றேவல் களையும் செய்யத் துணிந்து விட்டான்.

பாவம்! இவனது நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கது. பெருந் தகைமை வாய்ந்தோர்களும், முனிவர்களும், புலவர்களும், சான்ருேர்களும் இக்குமரனது திருமுகத்தைக்காணுது வாடி நிற்கின்றனர். இவன் வாயால் ஒரு சொல் கேட்கப் பெற்ருல் தம்பிறவி புனிதமாகுமே என்று ஏக்கற்று நிற்கின்ருர்கள்.

"அன்பாது அகத்திருளகற்றும் அருமணியே
மறை யொளியாய மாகதமே
அருட்கதிர் விரியும் அருஞ்சுடரே
தண்ணெளி பொங்குந் தயாபரனே
அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும்
அறிஞாது மனத்தில் ஒளிரும் மணிவிளக்
[கே "

என்று இவனை ஆருத அன்பினுல் வாயார வாழ்த்துகிருர்கள். மற்ருெரு புலவர்,

" மதுர அமுது குழைத் தூற்றும்
மழலை ததும்பும் பழ மறையை
வடித்துத் தெளித்த வார்த்தை யொன்று
மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
மும்மைத் தமிழ் சேர் கந்தபுரி
முருகா முத்தம் தருகவே "

என்று குழலினும், யாழினும் இனிய குமுதவாயால் ஒரே ஒரு முத்தம் தருமாறு வேண்டுகிருர். இவைகளை யெல்லாம் கடைக்கணித்தும் பாராது, தினைப்புனங்காத்த ஒரு குறப்பெண்ணின் பண்ணுலா மழலைப் பசுங்கிளவிக்கு இவன் ஏக்கற்று நின்ருனென்ருல், இதனினும் அதிசயிக்கத்தக்கது வேறென்று முளதோ? இது தான் பெண்ணின் பெருமை போலும்! இவனது இத்தகைய நிலையை இவனேடு அக்காலத்தில் நெருங்கிப் பழகியிருந்த குமரகுரு பரமுனிவர் என்னும் பெரியார்உரிமையுடன்எள்ளிநகையாடுகிருர்.

" ......... கலாமயில் கூத்தயர்
குளிர்புன மொய்த்திட்ட சாரலிற்
[போய்ச்சிறு
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரன் "

" பைம் புனத்துப் பண்ணுலா
மழலைப் பசுங்கிளவி எயினர்பொன்
பாவை விழிவேலொ டொப்புப்
பார்க்குந்தொறும் தலைகவிழ்த்து நின்று
அவள்திருப் பவளத்து முத்தரும்பும்
தண்ணிலா வுக்கொரு சகோர மென
[நின்றவன் "

" கூனேறு மதிநுதல் தெய்வக் குறப்பெண்
குறிப்பறிந்து அருகணைந்து உன் [னெக்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்
குறையிரந்து அவள் தொண்டைவாய்த்
**தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் "**

என்னுமிப்பாட் டோவியங்கள் குமரகுருபரர் முருகனிடம் கொண்டுள்ள ஆருத அன்பினையும், பாராட்டிய உரிமையினையும் நன்குவிளக்குவனவாகும்.

இனி, இந்நாடகக் காட்சியில் நாம் திளைத்திருக்க வேண்டியதில்லை. இறுதியில் இம்முருகன் தனது தமையனைக்கொண்டு தான் காதலித்த வள்ளியை மணமுடித்துக் கொண்டான் என்று சொல்லக் கேட்டோம். இதற்கு

" கன்னிப் புனத்தோர் பெண்ணமுதின்
காமர் நலனும் ஓரிரண்டு கண்ணுல் முகக்
[குண்டு "

" கானக் குறப்பெண் குடியிருந்த
கன்னிப் புனத்துத் தினைமாவும்
கமழ்தேன் சுவையும் உண்டு சுவை
கண்டாய் "

என்னும் குமர முனிவரின் குழைந்த மொழிகள் சான்று பகர்கின்றன.

அகப் பொருளிலக்கணங்களிற் கூறியுள்ள பண்டைத் தமிழருக்குத் தனிச் சிறப்பாக இலங்கிய காந்தருவ மணத்திற்கேற்ப வள்ளியை வதுவையில் வரித்த முருகனைப்பற்றி யாம் இத்துணை அளவு கூறவேண்டிய காரணம் யாது? மாதர் என்ற துணையானே வேறொன்றுந் தோன்றாது மெய்யுறு புணர்ச்சியின் மீது நாட்டஞ் செலுத்துங் கயமை சில ஆடவர்பாலுண்டு. அந்தோ! அவலம், இவ்விலங்கு நீர்மையர்கள் தாமும் நீடித்த இன்பம் பெறாது கொடிய நோய்வாய்ப்பட்டுச் சாக்காட்டைக் குறுகுவதோடன்றி, ஒரு பாவமு மறியாப் பெண்களையும் தமது மிருக உணர்ச்சிக்கு இரையாக்கி அவர்களது அழகிய தேகக் கட்டைக் குலைக்கின்றனர். ஓர் அழகிய ரோஜா மலரின் மணத்தையும், நலத்தையும் நுகர விழைவான் ஒருவன், அதன் பூவிதழ்களில் தன் கைபடாமல், காம்பைப் பிடித்து எடுத்து மெதுவாக முகருவானாகில் அம்மலர் நெடிது நேரம் அவனுக்கு நறுமணத்தையும், மெத்தென்ற உணர்ச்சியினையும், அழகிய காட்சியினையும் நல்கி இன்பத்தில் திளைக்கச் செய்யும். அவ்வாறன்றி, தன் முரட்டுக் கைகளால் அம்மலரை இறுகப்பற்றிப் பிசைந்து ஒருவன் இன்பத்தை நுகரக் கருதினால், அம்மலரின் இதழ்கள் கீழே உதிர்ந்து, தன் அழகு குலைந்து நசித்துப்போகும். இம்மனிதனுடைய இன்பமும் பேய்த் தேராக முடிந்தது. இவ்வுபமானத்திற்கு உபமேயம் அன்பர்கள் உய்த்துணர்ந்து கொள்வார்களாக.

மகளிரிடம் வேறுவகையான சீரிய இன்பங்களை அடைய அறியாதார், மெய்யுறுபுணர்ச்சி ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்டு, ஆனால், அதனால்நேரிடும் மக்கட்பேற்றினைத் தடைசெய்ய முயலுகின்றார்களாகையால் "பிறப்படக்கம்" (Birth Control) என்னும் ஒரு பொல்லாத இயக்கம் மேனாடுகளில் தொடங்கிக் காட்டுத்தீப் போல் மிக விரைவாக உலகமெங்கும் பரவி அதற்குச் சாதகமாக நாகரிகமுடைய மக்களால் வெறுக்கத் தகும் கருவிகளும், கருச்சிதைக்கும் கொடிய நெருப்புத் திராவகங்களும் கண்டுபிடிக்கப்பட்டும், புற்றீசல் போல ஆபாசமான நூற்கள் எழுதப்பட்டும் வருகின்றன. இத்தருணத்தில்,

"புன்புலால் நாற்றம்
புறம் பொதிந்து மூடினும்
சென்றுதைக்கும் சேயார் முகத்து"

என்னும் அருமைப் பாட்டு எம் நினைவிற்கு வருகின்றது. மேற்சொன்ன இக்கொள்ளை நோய் பரவ வொட்டாமல், அறிவுடையோரால் உடனே தடுக்கப்பட்டாலன்றி, அஃது உலகத்தையே அழித்து விடும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆகவே, வேறு பல சீரிய துறைகளிருப்பினும், முதன்மையாக, மாதரிடம், உடம்புத் தொடர்பு இன்றியே சற்றுச் சேய்மையில் அமர்ந்து உல்லாசமாகச் சொல்லாடுதலின் விழுமம் எத்துணைப் பெரியது என்பதை எடுத்துக் காட்டவே, மேற்போந்த சிறு நாடகக் காட்சியினை அன்பர்களது அகக்கண்களுக்கு முன் எடுத்துக் காட்டினம். இதனால், இரு சார்பிலும் நீடித்த விழுமிய இன்பம் அரும்புவதோடன்றி, வேண்டுவன வல்லாத மக்களைப் பெறுவதைத் தடைசெய்ய மிக இலேசில் முடியும்.

"பாலொடுதேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

87132

# திருவதிகையிற் சமயப் பிரசங்கம்

நிகழும் வைகாசி மீ 8உ (21-5-29) மாலை 5 மணிமுதல், திருவதிகை திருவீரட்டானத்தில் மூன்றாம் பிரகாரத்தில், திருநெல்வேலி, சைவத் திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை M. A, M. L., அவர்கள் அவைத் தலைமையில் நான்கு அரிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அன்று, வீரட்டானேச்சுரர் திரிபுர தகனஞ் செய்த ஐதிகம் நடக்கும் நாளாகவும் அமைந்தது. ஏராளமாக மக்கள் குழுமி யிருந்தனர். அப்பர் பெருமானைப் பற்றித் திருநெல்வேலி, சைவத் திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை B. A., அவர்கள் செய்த அருமையான சொற்பொழிவில் அடிகளுடைய குண மேம்பாடுகளைப் பாராட்டினர். பின்னர், திரிசிரபுரம் சைவத் திருவாளர் பண்டித - ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் சுந்தரரைக் குறித்துச் செய்த பொருணயம் செறிந்த சொற்பொழிவில் அப்பெருமான் சாத்திர மெய்ம்மையையும் நயங்களையும் இனிது விளக்கினார்கள். அதன் பிறகு திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A, L. T., அவர்கள் திருஞான சம்பந்தரைப்பற்றிய உண்மைகளில் சிலவற்றை ஒரு சிறு பிரசங்க வாயிலாக நன்கு விளக்கினார்கள். இறுதியாகத் தென் திருவிதாங்கூர், திருநெறித் தொண்டர் குழாத்துத் தலைவர் சைவத் திருவாளர் ஆறுமுகம் பிள்ளையவர்கள் "சைவர் கடமை" என்பதுபற்றி மிக்க ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் விரிவுரை நிகழ்த்திக் கேட்போர் மனதைக் கவர்ந்துகொண்டார்கள்.

அவைத் தலைவராம் பேரறிஞர் தம் அரிய பின்னுரையில் நுணுகிய ஆராய்ச்சியின் பயனாய்க் கிடைக்கும் அரும்பெரும் உண்மைகள் பலவற்றைத் தெளிவாய் விளக்கினார்கள்.

சபை கலைந்தபின்பு, திருவாளர் ஆறுமுகம் பிள்ளையவர்கள் திருவதிகைப் பெருமான் எழுந்தருளி யிருந்த தேரடியில் நின்றுகொண்டு, உற்சவம் பார்க்க வந்த ஏழை மக்களை யெல்லாம் ஒருங்கு திரட்டி, அப்பரடிகள் சரிதத்தின் முற்பகுதியைக் கேட்போருளங்கொளும் வகையில் பிரசங்கித்தார்கள். மும்மல நாசத்திற் குறிகுறியாய்ச் செய்யப்படும் மூப்புரஞ் செற்ற ஐதிகம் பின்பு நடந்தது. தூத்துக்குடி, திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்து வேறு சில அன்பர்களும் உற்சவத்திற்கு வந்து சிறப்பித்தனர்.

மேற்குறித்த பேரறிஞர்களை இப்படி வரவழைத்து, அதிகைத் திருவிழாவில் அன்பும் அறிவும் பெருக்கி உபகரித்தவர்கள், பண்ணுருட்டி மளிகை அ. வெ. அண்டு சன்ஸ் சகோதரர்களே யாவர்.

தேவாரம் முதன் முதற் பிறந்த திருவதிகை திருவீரட்டானத்தில் நித்திய பூசையில் தேவாரத் திருமுறை யோத ஒருவாரில்லாப் பெருங் குறைவும், ஆலயத்திற் சிற்சில இடங்களில் செடி கொடிகள் முளைத்துக் கட்டிடத்தைப் பாழ் செய்துவரும் காட்சியும் வெளியூர்களிலிருந்து வந்த அறிஞர்கள் மனதை உறுத்தின. திருவாளர் ஆறுமுகம் பிள்ளை யவர்கள் செய்த சொற்பெருக்கில் இவற்றைக் கண்ட தமது ஆற்றாமையை நன்கு புலப்படுத்தி, இக் குறைகளை உடனே நீக்குமாறு வற்புறுத்தி வேண்டினர்.

பண்ணுருட்டிச் செல்வர்களும், திருவாவடுதுறை யாதீனத்து மகா சந்நிதானமும் இக் குறைகளை இன்றே நீக்க எண்ணினால் அவ்வாறே முடிவது அரிதன்று.

**கண்டுகேளித்தோன்.**

விழுப்புரம் :—திருஞான சம்பந்தப் பெருமான், திருநக்ஷத்திரத் தன்று (25-5-29) ஆதிதிராவிட பாடசாலை உபாத்திமார்களும் திரு. மாணிக்க முதலியாரவர்களும் செய்த முயற்சியால் இவ்வூர்ப் பெரிய பறைச்சேரியை அடுத்துள்ள மைதானத்தில் ஆதிதிராவிடர் பெருங் கூட்டமொன்று கூட்டப்பட்டது. இப்பக்கத்துப் பாடசாலைகளின் கண்காணிப் பாளராகிய சைவத் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A, L. T., அவர்கள் அன்றிரவு 9 மணி முதல் 11 மணி வரையில், சம்பந்தப் பெருமான் சரிதச் சுருக்கத்தைக் கேட்கும் எளிய சகோதரர்கட்குப் பயன்படும் வகையில், தெளிவாய்ப் பிரசங்கித்தார்கள். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவியாரும், தம் சீலத்தாலும் சிவ பக்தியாலும் பெருஞ் சிறப்பெய்திய சரிதப் பகுதியை இனிது விளக்கினர். சம்பந்தர் திருநாளை இவ்வூரார் கொண்டாடாது உலக வாழ் விருளில் உறங்கிக் கிடக்கவும், சேரியில் சிவமணம் வீசியது திருவருட் செயலென்றே மகிழவேண்டி யிருக்கிறது.

# சமாஜ அறிக்கைகள்

1. "அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை" பற்றிப் பரிசளிப்புக்காகக் கட்டுரை எழுதியனுப்பிய பேரறிஞர்களின் பெயர் விலாசங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

திரு. A. ஆறுமுக செட்டியார், சீடாமங்கலம்.
,, K. சோமசுந்தரம், B. A., தஞ்சாவூர்.
,, E. T. பத்மாவதியம்மாள், திருவல்லிக்கேணி.
,, D. சம்பந்தன், சென்னை.
,, C. K. இராஜமாணிக்கம், காஞ்சிபுரம்.
,, E. K. இராஜபுவனேஸ்வரி அம்மாள், திருக்கோணமலை.
,, A. M. சரவண முதலியார், லால்குடி. (பரிசு பெற்றவர்)
,, M. மாணிக்கவாசகம் பிள்ளை, திருவல்லிக்கேணி.
,, V. பாலசுப்பிரமணியன், B. A., சென்னை.

2. சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு ஒவ்வொரு சைவ சபையும் இணைக்கப்பட வேண்டுமென்று சைவர் மகாநாடு தீர்மானித்திருக்கிறது. இதை யொட்டி திருநெல்வேலி, திருப்பாதிரிப்புலியூர் கூட்டங்களிற் கலந்துகொண்ட சைவ சபைகளும் ஏனைய சைவ சபைகளும் நம் சமாஜத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்று இவ்வறிக்கையைக் கண்டவுடன் விண்ணப்பம் செய்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். அவ்வாறு இணைக்கப்படுவதால் சமாஜத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் மூன்றுக்குக் குறையாமல் உதவி செய்து நமது பத்திரிகையையும் இலவசமாகப் பெறலாம். வேறு எவ்வகையான பொருள் சம்பந்தமும் இவ்வாறு இணைத்துக் கொள்வதால் ஏற்படாது. ஒவ்வொரு சபையும் உடனே முந்துக.

3. திருப்பாதிரிப்புலியூரில் கூடிய சைவ மகாநாட்டில் கண்ட (ஒன்று முதல் நான்கு வரையுள்ள) உண்மைகளை ஒப்புக்கொள்வோரே சைவர்கள். அவர்களே சைவசபைகளில் வாக்குரிமைக்குத் தகுதி யுடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நமது சமாஜப் பொதுக்கூட்டமும் அவ்வாறே தீர்மானித்திருக்கிறது. ஆகவே நமது சமாஜத்து அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வாக்குரிமை வேண்டுமென்று கருதினால் உடனே காரியதரிசிக்கு அவ்வுண்மைகளை ஒப்புக்கொள்வதாகத் தெரிவிக்கவேண்டும். இவ்வுண்மைகளை ஒத்துக்கொள்ளாதவர்களும் உடனே தெரிவித்தால் அவர்கள் வாக்குரிமை யில்லாதவர்கள் என்று தனியாகக் குறித்துக்கொள்வதற்குச் சௌகரியமா யிருக்கும். இவ்வறிக்கையைக் காணும் ஒவ்வொருவரும் விரைந்து தமது கொள்கையை உள்ளவாறு தெரிவித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.